# தமிழர் வழிபாடுகளில் தீமிதி

முனைவர் ஆ. சண்முகம் பிள்ளை



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

UG 7252

# தமிழர் வழிபாடுகளில் தீமிதி

ஆசிரியர்

**முனைவர் ஆ. சண்முகம் பிள்ளை**

இணைப் பேராசிரியர்

நாட்டுப்புறவியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்.

தஞ்சாவூர் 613 001

ISBN : 978-81-7090-474-5

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு எண் : 432

| | | |
|---|---|---|
| நூல் | : | தமிழர் வழிபாடுகளில் தீமிதி |
| ஆசிரியர் | : | முனைவர் ஆ. சண்முகம் பிள்ளை |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | நாட்டுப்புறவியல் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு-2017 (ஆவணி) |
| பக்கம் | : | 144 + கலர் பக்கம் |
| தாள் | : | டிஎன்.பி.எல்.மேப்லித்தோ 18.6 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டு | : | சாதாக் கட்டு |
| விலை | : | ரூ. 180-00 |
| படிகள் | : | 500 |
| வெளியீடு | : | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் |

**முனைவர் க, பாஸ்கரன்**
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

**தொலைபேசி**
அலுவலகம் : 04362-227040
இல்லம் : 04362-226741
நிகரி : 04362-226159

# அணிந்துரை

மனித மனம் நம்பிக்கையின் பாற்பட்டுச் செயன்மை கொள்ளத்தக்கதாகும். அன்றாட வாழ்வில் ஊரும் சுற்றமும் பாதுகாப்போடும் நலத்தோடும் வாழ்தற்குக் கடவுள் நம்பிக்கையைக் கைக்கொண்டு வாழும் வழக்கத்தினைத் தமிழ் மக்கள் நாட்டுப்புறங்களில் முக்கிய நிகழ்வாக்கிக் கொண்டுள்ளனர். வாழ்வில் வசந்தம் தேடுவதும் இடையூறு நேராமல் நலவாழ்வு வாழ வரம் வேண்டுவதும் என மக்கள் ஊர்த் தெய்வங்களை வேண்டிக் கொள்கின்றனர். எதையும் தாங்கும் வல்லமையை இத்தெய்வ வழிபாடு நல்கும் எனும் பெருத்த நம்பிக்கை இன்றும் நாட்டுப்புற மக்களிடம் நிறைந்து காணப்படுகிறது. இவ்வகையில் தோற்றம் பெற்ற நாட்டுப்புறச் சிறு தெய்வ வழிபாட்டு மரபு முறை பலவகைப்பாடுகளுடன் இடத்துக்கு இடம் மாறுபட்டும் வழங்கி வரக் காணமுடிகிறது. இவ்வகையில் நாட்டுப்புறத் தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் நிகழ்த்தி வணங்கும் வழிபாட்டு மரபுகளுள் ஒன்றாகத் தீமிதி வழிபாடு திகழ்கிறது.

தஞ்சை மாவட்டத்திலும் அதைச் சுற்றியுள்ள பிற மாவட்டங்களிலும் அம்மன்கோயில்களில் தீமிதி வழிபாடுகள் இன்றும் நடைபெற்று வருகின்றன. பண்பாட்டு மரபுகளின் பெருமை போற்றும்படியாக அமையும் இவ்விழா குறித்த ஆய்வினை நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டின் அடிப்படையில் ஏகௌரியம்மன்

வழிபாடு, துரோபதையம்மன் வழிபாடு, அங்காள ஈஸ்வரியம்மன் வழிபாடு என்னும் வகைப்பாடுகளுடனும் உரிய விளக்கப் படங்களுடனும் **'தமிழர் வழிபாடுகளில் தீமிதி'** எனும் பொருளில் ஆய்ந்துள்ள இந்நூலின் ஆசிரியர் முனைவர் ஆ. சண்முகம்பிள்ளை பாராட்டுக்குரியவர்.

நாட்டுப்புற நம்பிக்கை சார்ந்த வழிபாட்டு முறையில் குறிப்பிடத்தக்க நிகழ்வான தீமிதி வழிபாடு எனும் இந்நூல் தமிழர் பண்பாட்டாய்வுக்குப் பெரிதும் துணை புரியும் என்பதே இதன் சிறப்பாகும்.

க. பாஸ்கரன்

07.09.2017
தஞ்சாவூர்

# பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| | வாழ்த்துரை | ... | 3 |
| | என்னுரை | ... | 7 |
| 1. | ஏகௌரியம்மன் வழிபாடு | ... | 12 |
| 2. | துரோபதையம்மன் வழிபாடு | ... | 63 |
| 3. | அங்காள ஈஸ்வரியம்மன் வழிபாடு | ... | 91 |
| | முடிவுரை | ... | 118 |
| | துணைநூற்பட்டியல் | ... | 122 |
| பின்னிணைப்புகள் | | | |
| | அ. ஏகௌரியம்மன் வழிபாட்டுப் பாடல்கள் | ... | 126 |
| | ஆ. வினாநிரல் | ... | 132 |
| | இ. தகவலாளர் பட்டியல் | ... | 138 |
| | ஈ. புகைப்படங்கள் | ... | 145 |

# என்னுரை

தமிழகத்தில் ஊர்கள்தோறும் எண்ணற்ற நாட்டுப்புறத் தெய்வங்கள் அமைந்து விளங்குகின்றன. நாட்டுப்புற மக்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பல. இதன் காரணமாக ஏற்படும் மனக்கவலைகளைப் போக்குவதற்கு அவர்கள் வடிகால் தேடுகிறார்கள்; சுமைதாங்கிகளைத் தேடுகிறார்கள். வாழ்வில் இடையூறுகள் நேரா வண்ணம் வாழ விரும்புகின்றனர். குலதெய்வம், இனதெய்வம், ஊர்த்தெய்வம் போன்ற நாட்டுப்புறத் தெய்வங்களிடம் வேண்டினால் நல்லது நடக்கும்; கவலைகள் அகலும்; வாழ்வில் வளம் பெருகும் என நம்புகின்றனர். இத்தெய்வங்கள் துன்பங்கள், துயரங்களைத் தாங்கிக் கொள்ளும் மன ஆற்றலை அளிக்கும் என்று எண்ணுகின்றனர். இக்கருத்துக்கள் அடிப்படையில் வேளாண்மைச் சிறப்பதற்கும் நோய்கள் அகல்வதற்கும் திருமணம் நிகழ்வதற்கும் குழந்தைகள் பிறப்பதற்கும் தெய்வங்களை நாடுகின்றனர். நலம் பெற்றால் பல்வேறு வகைகளில் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். இதன் காரணமாகப் பலவகையான வழிபாட்டு மரபுகளும் விழாக்களும் சடங்குகளும் தோற்றம் பெற்றன. மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் நிகழ்த்தி வணங்கும் வழிபாட்டு மரபுகளுள் ஒன்றாகத் தீமிதி வழிபாடும் திகழ்கிறது.

தமிழ்ச் சூழலில் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு மரபுகளின் இன்றியமையாமையை எடுத்து விளக்கும் வகையில் **தமிழர் வழிபாடுகளில் தீமிதி** என்னும் பொருண்மை ஆய்வு மேற்கொள்வதற்காகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளது.

தமிழகம் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டிற்கான சிறப்புத்தளமாக விளங்குகிறது. தமிழர்களின் கடவுளர்களாக நாட்டுப்புறத் தெய்வங்களே காட்சியளிக்கின்றன. இத்தெய்வங்களின் வழிபாட்டுச் சடங்குகளில்

மக்கள் விரும்பிய வண்ணம் நேர்த்திக்கடன் செலுத்துவதைத் தமிழ் மண்ணில் பரவலாகக் காணமுடிகிறது. இத்தகைய மரபுமுறைகளில் தீமிதி வழிபாடு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் தீமிதி வழிபாடுகள் நடைபெறுகின்றன. கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் வட்டத்தைச் சார்ந்த வத்தராயன் தெத்து, வடப்பாக்கம் முதலான ஊர்களில் தீமிதி வழிபாடு நடைபெறுகின்றன. நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் வட்டம் நன்செய் இடையார் என்னும் ஊரிலுள்ள மாரியம்மன் கோயிலிலும் ஆண்டுதோறும் பங்குனி மாதம் தீமிதி வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் சில முருகன் கோயில்களிலும், நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரியில் உள்ள தேனாடு, நெடுகுளா ஆகிய ஊர்களிலும் உதகையிலுள்ள மேலூர், மஞ்சக்கொம்பை ஆகிய ஊர்களிலுள்ள சிவன் கோயில்களிலும் தீமிதித் திருவிழா நடத்தப்படுகின்றன.

தமிழர்கள் வாழ்கின்ற வெளிநாடுகளிலும் தீமிதி விழாக்கள் நடைபெறுகின்றன. பிஜி நாட்டில் மகாதேவி மாரியம்மன் கோயிலில் தீமிதித் திருவிழா நடைபெறுகிறது. துரோபதையம்மன் தீமிதி நிகழும் இடத்தில் வைத்து வழிபடப்பெறுகிறது. இலங்கையில் தீமிதி விழா பத்தினி வழிபாட்டோடு நடத்தப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்திலும் அருகமைந்த மாவட்டங்களிலும் மாரியம்மன், துரோபதையம்மன் போன்ற தெய்வங்களின் திருவிழாக்களில் தீமிதி வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இறை உணர்வாளர்கள் ஆயிரக்கணக்கில் தீமிதி நிகழ்வில் பங்கேற்கின்றனர். தெய்வங்களை வழிபட்டு அருட்பேறு பெறுகின்றனர்.

மக்களின் வாழ்க்கை நெறிகளை விளக்குவதாகவே பண்பாட்டு வெளிகள் அமைந்துள்ளன. நாட்டுப்புற மக்களின் வாழ்வியக்கத்தில் வழிபாடுகள்–விழாக்கள்–வழிபாட்டுச் சடங்குகள் போன்றவற்றின் அடிப்படையில் வெளிச்சமாகும் பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறியும் நோக்கில் இவ் ஆய்வு மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

**தமிழர் வழிபாடுகளில் தீமிதி** என்னும் பொருளடியாக அமைந்த இவ்ஆய்விற்கு ஆறு.இராமநாதன், தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலில் எழுதியுள்ள 'வழிபாட்டு முறைகள்–தீமிதி' என்னும் ஆய்வுக்

கட்டுரையும், சி.மா.இரவிச்சந்திரன், தமிழரின் பெருமரபும் சிறுமரபும் என்னும் நூலில் எழுதி வெளியிட்டுள்ள 'தீமிதி விழா—ஒரு மருத்துவச் சடங்கு' என்னும் ஆய்வுக் கட்டுரையும், ஆறு.இராமநாதன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள் என்னும் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு நூலில் எவலின் மாசிலாமணி மேயர் எழுதியுள்ள 'நாட்டுப்புறச் சமய ஆய்வு நெறிமுறைகள்' என்னும் ஆய்வுக் கட்டுரையும் முன்னாய்வுகளாக அமைகின்றன.

தஞ்சாவூர் அருகமைந்த வல்லம் ஏகௌரியம்மன், தஞ்சாவூர் விளார் சாலை, அண்ணாநகர் அங்காள ஈஸ்வரியம்மன், மேலவஸ்தாச் சாவடி அண்ணாநகர்—எம்.ஜி.ஆர்.நகர் அங்காள ஈஸ்வரியம்மன், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் துரோபதையம்மன், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர், நன்செய் இடையார் மாரியம்மன் முதலான நாட்டுப்புறத் தெய்வக் கோயில்களில் நடைபெறும் வழிபாடுகள், குறிப்பாகத் தீமிதி வழிபாடுகள் தொடர்பான தரவுகள் களப்பணி வாயிலாகச் சேகரிக்கப்பெற்று ஆய்வுக்குட்படுத்தப் பெற்றுள்ளன.

கள ஆய்வில் தகவலாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பெற்ற ஆய்வுத் தரவுகளும், தொடர்புடைய நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகளும் சான்று மூலங்களாகக் கொள்ளப்பெற்றுள்ளன. ஆய்வுக்களத்தில் களப்பணி மேற்கொள்கையில் தகவலாளர்கள் கூறிய வழிபாட்டுச் செய்திகள் முதன்மைத் தரவுகளாகவும், நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகளில் இருந்து தொகுக்கப்பெற்ற தகவல்களைத் துணைமைத் தரவுகளாகவும் கொண்டு ஆய்வு நிகழ்த்தப்பெற்றுள்ளது.

ஆய்விற்காகச் சேகரிக்கப்பெற்ற தரவுகள் இயற்கைச் சூழலிலும் செயற்கைச் சூழலிலும் சேகரிக்கப்பெற்று ஆய்வுக்குப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. வல்லம் ஏகௌரியம்மன் கோயில் தீமிதி வழிபாடு, தஞ்சாவூர், அண்ணாநகர், அங்காள ஈஸ்வரிம்மன் தீமிதி வழிபாடு, மேலவஸ்தாச்சாவடி, அண்ணாநகர்—எம்.ஜி.ஆர். நகர் அங்காள ஈஸ்வரியம்மன் தீமிதி வழிபாடு முதலானவை தொடர்பான கள ஆய்வுத் தரவுகள் இயற்கைச் சூழலிலும், நீடாமங்கலம் துரோபதையம்மன் தீமிதி வழிபாட்டுச் செய்திகள் செயற்கைச் சூழலிலும் சேகரிக்கப் பெற்றன.

நாட்டுப்புறத் தெய்வங்கள் மூன்றின் வழிபாட்டு மரபுகளை விளக்குகின்ற வகையில் ஏகௌரியம்மன் வழிபாடு, துரோபதையம்மன் வழிபாடு, அங்காள ஈஸ்வரியம்மன் வழிபாடு என்னும் உள்ளடக்கப் பகுப்பில் ஆய்வு அமைப்புற்றுள்ளது.

ஏகௌரியம்மன் வழிபாடு என்னும் பகுதியில் அம்மன் தோற்றக் கதை, வடிவ அமைப்பு, கோயிலமைப்பு, காலம், கட்டடக்கலை, சிற்பங்கள், நாள் வழிபாடு, வார வழிபாடு, மாத வழிபாடு, ஆண்டு விழாக்கள், தீமிதி வழிபாடு, நம்பிக்கைகள், வேண்டுதல்கள், நிர்வாகம், மேல்நிலையாக்கம் முதலான உட் தலைப்புகளில் கோயில் பற்றிய தரவுகளும் விழாக்கள்—வழிபாட்டு முறைகளும் ஆய்வுக்குட்படுத்தப்பெற்றுள்ளன.

துரோபதையம்மன் வழிபாடு என்னும் பகுப்பில் அம்மன் தோற்றம் குறித்த வாய்மொழிக்கதை, கோயிலமைப்பு, அம்மன் வடிவ சிற்ப அமைதி, கருவறை விமானம், சிற்பங்கள், வழிபாடுகள், விழாக்கள், தீமிதி வழிபாடு, வேண்டுதல்கள், நிர்வாகம், மேல்நிலையாக்கம் முதலான உட்பகுப்பில் கருத்து விளக்கங்கள் இடம் வகிக்கின்றன.

அங்காள ஈஸ்வரியம்மன் வழிபாடு என்னும் பகுதியில் தஞ்சாவூர், அண்ணாநகர் மற்றும் மேலவஸ்தாச்சாவடி அங்காள ஈஸ்வரியம்மன் கோயில்கள் பற்றிய செய்திகள் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. கோயிலமைப்பு, அம்மன் வடிவமைப்பு, சிற்பங்கள், வழிபாடுகள், தீமிதித் திருவிழா போன்ற பொருண்மைகள் பற்றிய கருத்துக்கள் விவரிக்கப் பெற்றுள்ளன.

முடிவுரைக்குப் பின் அமைந்துள்ள துணைநூற்பட்டியலை அடுத்து பின்னிணைப்பில் ஏகௌரியம்மன் வழிபாட்டுப் பாடல்கள், ஆய்வுக்குப் பயன்படுத்தப்பெற்ற வினாநிரல், தகவலாளர்கள் பட்டியல், தீமிதி வழிபாடு தொடர்பான புகைப்படங்களும் இணைக்கப்பெற்றுள்ளன.

**தமிழர் வழிபாடுகளில் தீமிதி** என்னும் தலைப்பில் ஆய்வு நிகழ்த்துவதற்கு வாய்ப்பளித்து உதவிய தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மதிப்புயர் **முனைவர் ம.இராசேந்திரன்** அவர்களுக்கும், இவ்வாய்வை நூலாக்கம் செய்வதற்கு ஆணையிட்ட துணைவேந்தர் மதிப்புயர் **முனைவர் க.பாஸ்கரன்** அவர்களுக்கும், இந்த நூலை அச்சாக்கம் செய்து வெளிக்கொணர துணைநின்ற தமிழ்ப்

பல்கலைக்கழகப் பதிப்புத் துறை இயக்குநர் பேராசிரியர் **முனைவர் க.இரவீந்திரன்** அவர்களுக்கும் நன்றிதெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆய்வு முழுமையடைவதற்குத் துணைநின்ற, தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை முனைவர் பட்ட ஆய்வாளர்கள் க.செந்தில்குமார், க.சிவக்குமார் மற்றும் இலக்கியத்துறை முனைவர் பட்ட ஆய்வாளர் இரா.தருமராசன் ஆகியோருக்கும் நன்றிகள் உரித்தாகும். களஆய்வில் தரவுகள் தந்துதவிய தகவலாளர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– ஆ.சண்முகம் பிள்ளை

# 1. ஏகௌளியம்மன் வழிபாடு

தமிழகத்தின் நெற்களஞ்சியமாகத் திகழும் தஞ்சை மாவட்டத்தில் காவிரி பாய்ந்து கழனிகளை வளம்காணச் செய்கிறது. தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளில் வாழும் மக்கள் பலர் செழுமை கருதி தஞ்சைக்கு இடம்பெயர்ந்து வருகைதந்து வளமான வாழ்க்கை வாழ்ந்து வருவதை இன்றும் காணமுடிகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த மக்கள் பலர் தஞ்சாவூரை அடுத்துள்ள மாரியம்மன் கோயில் பகுதியிலும் மற்றும் கும்பகோணம் பகுதியிலும் ஏராளமாக வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய வந்தாரை வாழவைக்கும் தன்மையைத் தஞ்சை பெறுவதற்குக் காரணமாக அமைவது காவிரியே ஆகும் என்றால் அது மிகையாகாது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் காவிரி ஆற்றால் தமிழகம் பெற்ற நீர்வளமும் நிலவளமும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. 'மேற்றிசைக் குடகிலிருந்து காவிரி தோன்றி எம்முடைய சோணாட்டினை வளப்படுத்துகின்றது' என்கிறார் ஆவூர் மூலங்கிழார்என்ற புலவர்.

**. . . . . சூடா அது**
**பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பின்**
**பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்**
**தண்புனற் படப்பை எம்மூர் . . .** **(புற. 166:26–29)**

இவ்வாறு மலையில் தோன்றும் காவிரியாறு எங்கு சென்று முடிகிறது? காவிரிப்பூம்பட்டினத்தில் அது கடலோடு கலக்கிறது (பேராசிரியர் குழு, 1990:2).

சைவநாயன்மார்களில் ஒருவராகிய திருஞானசம்பந்தர் திருவையாறு, வடகரை, குரங்காடுதுறை, சீர்காழி, சக்கரப்பள்ளி, துருத்தி, கண்டியூர், திருநல்லூர், திருநாகேச்சுரம், திருநெய்த்தானம்,

திருப்பாண்டிக்கொடுமுடி, திருப்புள்ளமங்கை, திருமயிலாடுதுறை, திருமாந்துறை, திருவலஞ்சுழி, திருக்குடந்தை ஆகிய தலங்களைக் குறித்த தம் தேவாரப் பாடல்களில் காவிரியின் வளத்தைச் சிறப்பிக்கின்றார்.

**காவிரி கதுப்பின் மடமங்கையர்**
**அகந்தொறும் நடந்து பலிதேர்**
**பாவிரி இசைக்குரிய பாடல் பயிலும்**
**பரமர் பழமை யெனலாம்**
**காவிரி நுரைத்து இருகரைக்கும்**
**மணிசிந்த வரிவண்டு கவர**
**மாவிரி மதுக்கிழிய மந்தி குதி**
**கொள்ளும் மயிலாடுதுறையே.**
**வரைவந்த சந்தொடு அகிலுந்தி வந்து**
**மிளிர்கின்ற பொன்னி வடபால்**
**திரை வந்து வந்து செறிதேறலாடு**
**திருமுல்லை வாயிலிதுவே**

இப்பாடல்கள் முறையே மயிலாடுதுறை, திருமுல்லைவாயில் ஆகிய கடைமடைப் பகுதியில் அமைந்த தலங்களுக்குரியன. காவிரியின் நீர்ப்பெருக்கு அதன் கடைமடை வரை பயன்பட்ட வரலாற்றை இவ்விலக்கியப் பகுதிகள் காட்டுகின்றன (பேராசிரியர்குழு, 1990:5–6).

**காவிரி தென்பெண்ணை பாலாறு–தமிழ்**
**கண்டதோர் வையை பொருநைநதி என**
**மேவிடும் ஆறு பல ஓடி**
**மேனி செழித்த தமிழ்நாடு**

எனப் பாரதியார் பாடுவார். ‘கங்கையைப் போல் காவிரி போல் கருத்துககள் ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்’ என்பார் பாவேந்தர் பாரதிதாசன் (பேராசிரியர் குழு, 1990:7).

இக்காவிரியளிக்கும் வளக்கொடையால்தான் ‘சோழநாடு சோறுடைத்து’ எனும் பெருமைக்குரியதாயிற்று. காவிரியில் வெள்ளம் வரும்போது மகிழ்ச்சிப் பெருக்கால்மக்கள் அதைக் கொண்டாடி மகிழ்கின்றனர். காவிரியின் கரையோரக் கிராமங்களில் வாழ்ந்துவரும்

மக்கள் 'ஆடிப்பெருக்கு' விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடுவதை இன்றளவிலும் தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளில் பரவலாகக் காணமுடிகிறது.

தமிழ் இலக்கியங்களில் புனலாடல் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. 'பருவ மாற்றங் காரணமாக மழைபொழிந்து ஆற்றில் நீரோட்டம் ஏற்பட அதனை வரவேற்கு முகத்தான் மகிழ்ச்சிப் பெருக்கால் நீராடி வழிபடுவது புதுப் புனலாடலின் நோக்கமாகும். புதுப்புனல் ஆடுதல் என்பது இன்றைய ஆடிப்பெருக்கினை நினைவுபடுத்தும். தங்களது வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கும் நீரை வாழ்த்தி வழிபடுவதும் வரம் வேண்டுவதும் வளமை வேண்டிச் செய்யப்பட்ட ஒன்றாகவே காட்சி தருகின்றது' (காந்தி, க., 2003:67–68).

பரிபாடலில் புனலாடுவதற்குக் காலையில் பறையறைவித்த–மையும், பொன்னாலாகிய சங்கு, நண்டு, இறவு, வாளை ஆகியவற்றைப் புதுப்புனலில் இட்டுப் பெண்டிர் விளையவும் பொலியவும் வேண்டியமையும் சுட்டப் பெற்றுள்ளன (காந்தி, க., 2003:68).

**வெந்நாற்று வேசனை நாற்றங் குதுகுதுப்ப**
**ஊரூர் பறையொலி கொண்டன் றுயர் மதிலில் (பரி. 20:13–14)**
**அவியம ரழலென வரைக்குநர்**
**நத்தொடு நள்ளி நடையறவு வயவாளை**
**வித்தி யலையில் விளைக பொலிகென்பார் (பரி. 10:84–86)**

கழார் பெருந்துறையில் நிகழ்ந்த நீராட்டு விழாவில் ஆட்டணத்தியைக் காவிரிப்புனல் வெளவ ஆதிமந்தி அலறிய திறம் அகநானூற்றுப் பாடல்களில் (45, 76, 135, 222, 236, 376, 396) குறிக்கப்பெற்றுள்ளன (காந்தி, க., 2003:68).

**மண் கனை முழவொடு மகிழ் மிகத் தூங்க,**
**தன் துறை ஊரன் எம் சேரி வந்தென**
**இன் கடுங் கள்ளின் அஃதை களிற்றோடு**
**நன் கலன் ஈயும் நாள் மகிழ் இருக்கை**
**அவை புகு பொருநர் பறையின், ஆனாது,**
**கழறுப என்ப, அவன் பெண்டிர்; 'அந்தில்,**

**கச்சினன், கழலினன், தேம் தார் மார்பினன்,**
**வகை அமைப் பொலிந்த, வனப்பு அமை, தெரியல்,**
**கரியல் அம் பொருநனைக் காண்டிரோ ?' என,**
**ஆதி மந்தி பேதுற்று இனைய,**
**சிறை பறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்,**
**அம் தண் காவிரி போல,**
**கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின், யானே. (அக. 76)**

என்றவாறு பரணர் பாடியுள்ளார்.

மார்ச்சனை செறிந்த மத்தளத்தோடு காண்பார் மிக மகிழுமாறு நாங்கள் கூத்தாடினோம்; குளிர்ச்சி பொருந்திய நீர்த் துறையையுடைய ஊரன் அதனைக் காண எமது சேரிக்கு வந்தான்.

அவன் பெண்டிர், இனிமையையும் கடுப்பினையும் கொண்ட கள்ளினையுடைய அஃதை என்பானது களிறுகளுடன் நல்ல அணிகலன்களையும் பரிசிலர்க்கு வழங்கும் மகிழ்ச்சி பொருந்திய நாளோலக்கத்தையுடைய அவையிடத்துப் புகும் கூத்தரது பறை இடைவிடாது ஒலிப்பது போன்று ஒழியாது என்னை இகழ்ந்து வசை பாடுகின்றாள் என்று கூறுகின்றனர்.

ஆட்டணத்தி கச்சினையும் கழலினையும், தேனொழுகும் தார் அணிந்த மார்பினையும் உடையவன்; பல்வேறு வகைத் தொழில்திறம் அமைந்து பொலிவுடன் திகழும் மாலையையுடையவன்; சுருண்ட தலை மயிரினையுடைய ஆடல் வல்லானாம் அவனைக் கண்டிரோ என வினவி, அவன் காதலியாகிய ஆதிமந்தி பெரிதும் மயங்கி வருந்துமாறு, அணை கடந்து கரைமோதி நேர்கிழக்கே பரந்தோடும் அழகிய குளிர்ந்த காவிரியாறு (அவள் கணவனாகிய ஆட்டணத்தியைத்) தன் திரைக் கையால்கவர்ந்து கொண்டமை போல, யானும் சூளினை மேற்கொண்டு ஊரனைக் கைப்பற்றிக் கொள்ளுதலை எண்ணியுள்ளேன் என்றவாறு பாடலடிகள் உரைவிளக்கம் பெறுகின்றன.

**வான்உற நிவந்த நீல்நிறப் பெருமலைக்**
**கான நாடன் உறீஇய நோய்க்கு, என்**
**மேனி ஆய்நலம் தொலைதலின், மொழிவென்;**
**முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்,**

கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்,
ஈட்டுஎழில்பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்,
ஆட்டன அத்தி நலன்நயந்து உரைஇ,
தாழ்இருங் கதுப்பின் காவிரி வவ்வலின்,
மாதிரம் துழைஇ, மதிமருண்டு அலந்த
ஆதிமந்தி காதலற், காட்டி
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி அன்ன மாண்புகழ் பெறீஇயர்,
சென்மோ–வாழி, தோழி!–பல்நாள்,
உரவுஉரும் ஏறொடு மயங்கி,
இரவுப்பெயல்பொழிந்த ஈர்ந்தண் ஆறே (அக. 222)

வானத்தைத் தொடும் அளவு ஓங்கி உயர்ந்த நீலநிறம் பொருந்திய பெரிய மலைக்கு அப்பால் உள்ள காட்டையுடைய நம் தலைவன் தந்த நோயால் தோழியரால் ஆராய்ந்து கூறப்பட்ட நின் மேனி அழகு அழிந்து படுதலால் யான் இதனைக் கூறுவேன், நீ கேட்பாயாக!

மிகுந்த அழகினையும் பொலிவினையும் நிமிர்ந்து திரண்ட தோளினையும் உடைய ஆட்டனத்தி என்பான், முழவொலி இடைவிடாது கேட்கும் ஆரவாரம் மிக்க கழாஅர் என்னும் ஊரிடத்து உள்ள பெரிய துறையின்கண் நிகழ்ந்த விழாவில் நடனம் ஆடினான். தாழ்ந்து தொங்கும் கருநிறக் கூந்தலையுடைய காவிரிப் பெண்ணாள், அவன் அழகினை விரும்பி அவனைக் கவர்ந்து சென்றாள்; அவன் மனைவியாகிய ஆதிமந்தி தன் கணவனைக் காணாது திசையெலாம் தேடி அலைந்து திரிந்து மதிமயங்கி வருந்தி வாட்டமுற்றாள். மருதி என்பவள் கடலிற் சென்று ஆதிமந்திக்கு அவள் கணவனைச் சுட்டிக்காட்டிப் பின்னர் உயிர் துறந்தாள். அதனால் மருதியும் புலவரால் பாடப்பெறும் புகழினைப் பெற்றாள்.

மருதியைப் போன்று பெரும்புகழ் பெறுவதற்காகப் பலநாளும் வலிய இடியுடன் கூடிய பெருமழை இரவு முழுவதும் பெய்தலால், ஈரமிக்க சேற்று வழியில் நாமும் தலைவனைத்தேடிச் செல்வோமாக! என்றவாறு பரணர் பாடிய பாடலுக்குப் பொருள் விளக்கத்தை அறிந்துணரலாம்.

சிலம்பிலும் மேகலையிலும் பாவம் செய்தோர் தங்களது பாவத்தைப் போக்கிக் கொண்டதற்கு அடையாளமாகக் குமரியில்

நீராடியமை சுட்டப் படிருக்கக் காணலாம் (காந்தி, க., 1980:69).

**மன்னர் கோவே யான்வருங் காரணம்**
**மாமுனி பொதியின் மலைவலங் கொண்டு**
**குமரியம் பெருந்துறையாடி மீள்வேன் (சிலப். 27:67–69)**

**வார ணாசியோர் மறையோம் பாளன்**
**ஆரண வுவாத்தி யபஞ்சிக னென்போன்**
**பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து**
**கொண்டோற் பிழைத்த தண்ட மிஞ்சித்**
**தென்றிசைக் குமரி யாடிய வருவோள் (மணி. 13:3–7)**

என்றவாறு அடிகள் அமைந்துள்ளன.

காவிரியின் கருணையினால் நஞ்சையும் புஞ்சையும் தஞ்சையில் பசுமையோடு காட்சியளிக்கின்றன. 'தண்மை' என்னும் சொல்லுக்குக் 'குளிர்ச்சி' எனப் பொருள் பகரும் கழகத்தமிழ் அகராதி 'செய்' என்றால் 'வயல்', குளிர்ச்சி பொருந்திய நீர் நிறைந்த வயல் பகுதிகள் சூழ்ந்துள்ளதால் இவ்வூருக்குத் தண்செய் ஊர்–தஞ்சாவூர் எனப் பெயரமைந்தது. இவ்வூர்ப் பெயர் தோற்றத்திற்கான பல காரணங்களுள் இதுவும் ஒன்று.

இந்நகரின் முன்னைய பெயர் 'அளகாபுரி' என்று வடமொழியில் உள்ள 'தஞ்சாக்கூர் புராணம்' என்னும் நூல் விளம்பும். இந்நூலே 'தஞ்சாசுரன்' என்னும் அரசன் வாழ்ந்ததாகவும் அவனைத் தேவி வதைத்த பிறகு அவ்வசுரனின் வேண்டுகோள்படியே, அவன் பெயராலேயே அழைக்கப்பெற்றது எனக் கூறும். 'தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி' என்னும் நூல் இந்நகருக்கு 'கருடங் கோட்டை' என்ற பெயரினைக் கூறும். காரணம் இந்நகர் வான்வெளியில் இருந்து பார்த்தால் கருட உருவமாகத் தெரியும் என்பதால் ஆகும். 'தஞ்சாறை' (ஆறை–கோட்டை, மதில், அரண்) என்பதே பழைய பெயர் என்றும், அதுவே தஞ்சாவூர் என வழக்கில் மருவியது என்ற கருத்தும் உண்டு (சந்திரசேகரன், மெய்., 1983:34).

தஞ்சாவூர் பெயர்க்காரணத்திற்கான பௌராணிகக் கருத்தாக அமைந்துள்ள செய்தி ஒன்றினையும் ஆய்வாளர் கு.விஜயலெட்சுமி 'தமிழர் பண்பாட்டில் அளவைகள்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். 'சம்வனப்

பகுதியில் இருந்த தஞ்சாசுரன் என்பவனைத் தஞ்சபுரீஸ்வரர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆனந்தவல்லி எனும் தேவி சம்கரித்ததாகவும், அந்தச் சம்வனமே தஞ்சாசுரன் பெயரால் தஞ்சாபுரியாயிற்று என்று வராக மான்மியம் எனும் புராணம் எடுத்து விளக்குவதாகக் குடவாயில் பாலசுப்ரமணியன் கூறியுள்ள கருத்தைச் சுட்டியுள்ளார் (விஜயலெட்சுமி, கு., 2006:25).

காவிரி பாய்ந்தோடுதலால் தஞ்சையின் காவிரிக்கரைகளில் பண்பாட்டு நாகரிக வளர்ச்சியோடு கலைகளும் வளர்ந்தன. பல வகையான கலைகளும் கலைஞர்களும் தஞ்சாவூரில் வாழ்ந்து வந்தனர். காவிரியின் வடகரை–தென்கரைகளில் சைவத் திருக்கோயில்கள் பல தோன்றின. நாயன்மார்களின் பாடல் பெற்ற கோயில்களும் பலவுண்டு. திருவையாற்றுக்கு சம்பந்தர் பாடிய பதிகங்கள் ஐந்தும், அப்பர் பதிகங்கள் பன்னிரண்டும், சுந்தரர் பதிகம் ஒன்றும் தேவாரப் பாடல்களில் காணப்படுகின்றன. வைணவ ஆலயங்களும் ஆழ்வார்களால் பாடல்பெற்ற திருத்தலங்களும் காவிரிக் கரையோர ஊர்ப் பகுதிகளில் அமைந்துள்ளன.

தமிழகத்தில் இந்து மதத்தின் ஆதிக்கம் அதிகமாக இருந்த காலகட்டத்தில் பெருந்தெய்வ வழிபாடுகள் வளர்ச்சியடைந்தன. ‘பெருந்தெய்வம்’ என்ற சொல்லாட்சி புறநானூற்றிலேயே வந்துள்ளது. இரண்டு வேந்தர்களை ஒன்றாகக் கண்ட புலவர் ‘இருபெருந் தெய்வமும் உடன்நின்றா அங்கு’ (பாடல் 58) என்று பலராமனையும் திருமாலையும் நினைத்துப் பாடுகிறார். தமிழில் ‘சிறுதெய்வம்’ என்னும் சொல் வழக்கு முதலில் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் தேவாரத்தில்தான் பயின்று வந்துள்ளது. ‘சென்று நாம் சிறு தெய்வம் சேரோம் அல்லோம்’ என்றவாறு குறிப்பிட்டுள்ளார் (பரமசிவன், தொ., 2004:123). இந்துத்துவா கொள்கைகள் உச்சம் பெற்றிருந்த காலகட்டத்தில் சிறுதெய்வ வழிபாடுகளை ஒடுக்குவதற்கான–முடக்குவதற்கான முயற்சிகள் தமிழ்ச் சூழலில் மேற்கொள்ளப்பெற்றிருந்த நிலையினை அப்பர் பாடல் அடியின் வாயிலாக அறிந்துணர முடிகிறது. இதையும் மீறி இன்றளவும் சிறுதெய்வ–நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகள் மக்களிடம் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்றால் அதற்குக் காரணம் இவ்வழிபாடு வெகுஜன வழிபாடாகத் தமிழகத்தில் அமைப்புற்றுள்ளது என்பதை அறிந்து தெளியலாம். எனவே தமிழர் வழிபாட்டு மரபு என்பது நாட்டுப்புறத்தெய்வ வழிபாடுதான் என்னும் உண்மையும் வெளிச்சப்படுவதை உணரமுடிகிறது.

இத்தகைய வழிபாடுகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் தமிழ் மக்களால் நிகழ்த்தப்பெற்றமைக்கான சான்றுகள் பலவுள. 'பண்டைய தமிழகத்தில் சங்க காலத்தில் சிறு தெய்வ வழிபாடும் நடைபெற்று வந்தது. கள்ளிநிழற் கடவுள், கூளி, பேய் ஆகிய தெய்வங்கட்கும் மக்கள் வணக்கம் செலுத்தி வந்தனர்' (பிள்ளை, கே.கே., 2004:172).

**கார் நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்,**
**சூர்நவை, முருகன் சுற்றத்து அன்ன, நின்**
**கூர் நல் அம்பின் கொடுவில் கூளியர்**
**கொள்வது கொண்டு, கொள்ளா மிச்சில்**
**கொள்பதம் ஒழிய வீசிய புலனும் (புற. 23:3–7)**

மழைக்காலத்தின் புதிய மணமுடைய கடம்பின் பசிய இலைகளுடன் விரவிய மலர்களால் கட்டப்பெற்ற மாலையை உடையவனும் சூரபன்மாவைக் கொன்றவனுமாகிய முருகவேள்; அவன் ஏவலராகிய கூளிச்சுற்றம் போன்ற கூர்மையான நல்ல அம்புடன் வளைந்த வில்லுடைய வீரர்கள் கைக்கொள்ளும் அளவு கொண்டபின் எஞ்சிய பொருளைப் பகைவர் கொண்டு உணவாக்காதவாறு விளைநிலங்கள் அழிக்கப்பட்டன எனும் பொருள்படும் பாடல் பகுதியில் கூளி பற்றிய செய்தி பதிவாகியுள்ளது.

**. . . . . . . . . . . . மனையோள்**
**உளரும் கூந்தல் நோக்கி களர**
**கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி (புற. 260:3–5)**

விரித்த கூந்தலை உடைய பெண் ஒருத்தி எதிர்ப்பட அதனை நிமித்தமாகக் கொண்டு களர்நிலத்திலுள்ள கள்ளிமர நிழலின் கீழ் உண்டான தெய்வத்தை வாழ்த்துவாய் என்றவாறு கள்ளி நிழற்கடவுள் வழிபாடு இப்பாடலில் சுட்டப் பெற்றுள்ளது.

சங்கப் பாடல்கள் குறிப்பிடும் நடுகல் வழிபாட்டு முறையும் பழங்கால மக்களின் வழிபாட்டு இயல்புகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். அவற்றில் பலியும் கள்ளும் பீலியும் துடியும் பயன்படுத்தியமை பண்டைத் தமிழரின் இயற்கையான வழிபாட்டு முறையினைத் தெரிவிப்பதாக உள்ளது. நடுகல் வழிபாட்டினை,

**நுழைவதி நெடுவேற் குறும்படை மழவர்**
**முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த**
**வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்**
**வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்**
**நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்**
**தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்**
**போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரம் (அக. 35:4–10)**

என்னும் பாடலில் அம்மூவனார் விவரித்துச் செல்வார். இங்குக் கரந்தை மறவர்க்கு நடுகல் நட்ட செய்தியும் வழிபட்ட மரபும் சுட்டப்பட்டிருக்கிறது. இப்பாடல் ஒன்றில் மட்டுமே செம்மறியாட்டுக் குட்டியினைப் பலியிட்டு நெல்லாற் சமைத்த கள்ளோடு படைத்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. பீலி சூட்டுவதன் காரணம் அழகுபடுத்தும் நிலையில் அமைந்த ஒன்றா அல்லது ஏதாவது குறியீட்டின் அடிப்படையில் பயன்கொண்ட ஒன்றா என்பது சிந்தித்தற்குரியது. துடி முழக்குதல் நடுகல் வழிபாட்டில் பேசப்பட்டுள்ளமை கொண்டு சிறுதெய்வ வழிபாட்டு நிலை புலப்படக் காண்கிறோம் (காந்தி, க., 2003:253–254).

நாட்டுப்புறத் தெய்வ வடிவங்களும் வழிபாட்டு முறைகளும் பெருமரபு நெறியிலிருந்தும் மாறுபட்டு விளங்குகின்றன. பயிரைக் காத்தல், கண்மாயிலிருந்து பாய்கின்ற நீரைக் காத்தல், விளைந்த பயிரைப் பகைவரிடமிருந்து காத்தல், அறுவடை செய்த தானியங்களைக் காத்தல், உழவுக்கு வேண்டிய கால்நடைகளைப் பகைவரிடமிருந்து காத்தல், ஊர்எல்லையில்நின்று எதிரிகளிடமிருந்து ஊரைக் காத்தல், இந்தக் காப்பு நடவடிக்கைகள்தாம் நேற்றுவரை கிராமப் பொருளாதாரத்தின் அடிப்படை. எனவே இந்த மக்களின் தெய்வங்களெல்லாம் இந்த மக்களைப் போலவே ஏதேனும் ஓர் ஆயுதம் ஏந்தி, காவலுக்குரிய வயல்களின் ஓரத்திலும் கண்மாய்க் கரையிலும் ஊர் மந்தையிலும் ஊர் எல்லையிலும் அயராது கண்விழித்து நிற்கின்றன. இந்த மக்களைப் போலவே இத்தெய்வங்களும் முறுக்கிய மீசையும் வரிந்து கட்டிய வேட்டியுமாகச் சட்டையில்லாமல் (சில நேரங்களில் தலைப்பாகையுடன்) கள்ளும் கறியும் உண்பவையாக வாழ்கின்றன என்பார் தொ.பரமசிவன் (2004:118–119).

தமிழகத்தின் ஊர்ப் பகுதிகளில் மரங்களையும் தெய்வங்களாகக் கருதி வழிபடும் வழக்கம் காணப்படுகிறது. கும்பகோணம் அருகமைந்த

அண்டகுடையான் கிராமத்தில் தேவேந்திரகுல வேளாளர்கள் அதிகமாக வசித்து வருகின்றனர். இவர்கள் இவ்வூர் கீழத்தெருவிலுள்ள ஒதியன் மரத்தை வீரன் சாமியாகக் கருதி வழிபட்டு வருகின்றனர். 'நன்மை நல்கும் மரங்கள் மீது மக்கள் கொண்ட நன்றியுணர்வும், நச்சு மரங்களைக் கண்டு அஞ்சியதால் ஏற்பட்ட அச்சவுணர்வும் தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிநல்கும் மரங்களைக் கண்டபொழுது அவர்களுக்கு ஏற்பட்ட வியப்புணர்வும் இது போன்றே வளத்தை நமக்கு இவை நல்கும் என்ற நம்பிக்கை உணர்வும் மரங்கள் இடம்விட்டு இடம் பெயரும் மனிதனுக்கு உணவளிக்கும் தாயாகவும், ஒய்வுகொள்ளும் உறைவிடமாகவும் இருந்தநிலையும் மரவழிபாட்டின் அடிப்படைக் காரணங்களாகும்.' அத்தகைய மரவழிபாட்டின் எச்சநிலையை இன்றும் அண்டகுடையான் சிற்றூரில் காணமுடிகிறது (சண்முகம், ஆ., 1999:63).

வீரன் சாமிக்கு உரிமையுடைய குடும்பத்தினர் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தும்போது சிவப்புத் துணியை மரத்தில்கட்டி, மாலையிட்டு, பழங்கள், சோறு, சாராயம் படைத்து வழிபாடு செய்வர். ஆடு, கோழி பலியிட்டு வழிபாடு நடைபெறுவதும் உண்டு.

நாட்டுப்புறத் தெய்வங்களுக்கான இயல்புகளாகச் சிலவற்றை சு.சக்திவேல் (1995:228–229) எடுத்துரைத்துள்ளார்.

அ. பிறப்பு இறப்பு உள்ளவை, மனித உணர்வில் தோன்றியவை, குறிப்பிட்ட ஆற்றலுடையவை, வட்டாரத்திற்கே உரியவை.

ஆ. மக்களால் தோற்றுவிக்கப்பெற்று பேணப்படுபவை, இவ்வுலகில் வாழ்வதாகக் கருதப்படுபவை, அண்டம் முழுவதும் தொடர்பு கொள்ளாமல் கிராம வாழ்க்கையோடு தொடர்பு கொண்டவை.

இ. நாட்டுப்புறத் தெய்வங்களில் பெரும்பாலானவை பெண் தெய்வங்கள்— திருமணமாகாதவை. தோற்றக்கதைகள் உண்டு, கொடூர உருவமுடையவை.

ஈ. பூசை திருவிழா முதலியவற்றில் வரையறை இல்லை. உயிர்ப்பலி உண்டு. பிராமணர் அல்லாதோர் பெரும்பாலும் பூசாரியாக இருப்பார். சைவ வைணவ வேறுபாடில்லை.

உ. பெரும்பாலும் கோயிலமைப்பு இல்லை. மாடங்கள், சுதைகள், கல், மரம், புற்றில் உறைபவை.

ஊ. நாட்டுப்புறத் தெய்வங்கள் வீட்டுத் தெய்வம், குலதெய்வம், சாதித் தெய்வம், ஊர்த் தெய்வம் போன்ற வகைப்பாடுடையவை.

மேற்குறிப்பிட்ட நிலைகளுக்கு மாறான இயல்புகள் உடையவை பெருந் தெய்வ நெறிகளாகும்.

இத்தகைய நாட்டுப்புறத் தெய்வங்களை ஊர்த் தெய்வங்கள், இன தெய்வங்கள், குல தெய்வங்கள், மாயைத் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள் என்றவாறு பகுத்துக் காண்கிறார் பேரா.துளசி இராமசாமி (1985:5). இவை தவிர எல்லைத் தெய்வங்கள்,காவல் தெய்வங்கள், வீட்டுத் தெய்வங்கள் போல்வனவும் நாட்டுப்புறத் தெய்வ வகைகளைச் சார்ந்தவைகள் ஆகும்.

தமிழகத்தில் தமிழர்களின் வழிபாட்டுக் கூறுகள் மலிந்து காணப்படுகின்றன. புலம்பெயர்ந்த தமிழர்கள் வெளிநாடுகளிலும் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகளையும் விழாக்களையும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வதைச் செய்தித்தாள்கள் வாயிலாக அறியமுடிகிறது. தஞ்சை மாவட்டத்திலும் அருகமைந்த ஊர்களிலும் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு விழாக்கள் ஏராளம் நடைபெறுகின்றன. தஞ்சாவூரை அடுத்துள்ள வல்லம் ஏகௌரியம்மன் வழிபாடும் தீமிதித் திருவிழாவும் ஆண்டுதோறும் மக்களால் விமரிசையாகக் கொண்டாடப் படுகின்றன.

**ஊரமைப்பு**

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடைச்சங்க காலத்தில் திகழ்ந்த சோழ நாட்டுக் கோநகரங்களான பூம்புகார், உறையூர், ஆரூர், ஆவூர், ஆற்காடு, குடவாயில் எனும் நகரங்களின் வரிசையில் வல்லமும் ஒன்று என்பதனைச் சங்கப் பாடல்கள் வாயிலாகவும், பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுகள், செப்பேடுகள் வாயிலாகவும் அறியமுடிகிறது (கோவிந்தராஜீ, டி., 2004:16).

**. . . . . . . . . . . . . . . நற்றேர்க்**
**கடும்பகட்டி யானைச் சோழர் மருக**
**னெடுங் கதிர் நெல்லின் வல்லங்கிழவோ**
**னல்லடி யுள்ளனாவும் . . . . . . . . . . . . . . (அக. 356:11–14)**

அகநானூற்றுப் பாடலடிகள், நல்ல தேரையும், கொடிய வலிமையுடைய ஆண் யானையையும் உடைய நல்லடி என்பானின் ஊராகிய வல்லம் நல்ல நெற்கதிர்கள் விளையும் ஊராக விளங்கியது என்பதை எடுத்துரைக்கின்றன. வல்லம் எனும் ஊர் வல்லம் கிழவன் நல்லடி போன்ற சோழ மரபைச் சார்ந்த மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்த ஊர் என்பதும் கோநகரமாகத் திகழ்ந்ததால் பாதுகாப்பு அரண்களாகக் காவற்காடுகளைப் பெற்றுத் திகழ்ந்தது என்பதையும் அறியமுடிகிறது.

இக்காலத்தில் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்து விளங்கும் வல்லம் என்னும் ஊர் பேரூராட்சி அதிகார வரம்பைப் பெற்றுத் திகழ்கிறது. தஞ்சாவூர்–திருச்சி சாலையில் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து தோராயமாக ஆறு கிலோமீட்டர் தொலைவில் வல்லம் அமைந்துள்ளது.

இவ்வூரில் கொட்டாரத்தெரு, நடுத்தெரு, வளையல்காரத் தெரு, அக்ரகாரம், காமாட்சி அம்மன் கோயில் தெரு, செட்டித்தெரு, சுப்பிரமணியன் கோயில் தெரு, தேசிய விநாயகர் கோயில் தெரு, நல்லதண்ணீர்க் கேணித் தெரு, வடக்குச் செட்டித் தெரு, மூப்பனார் தெரு, சமுத்திரக் குளத்தெரு, மேல முஸ்லீம் தெரு, கீழ முஸ்லீம் தெரு, கீரைக்காரத் தெரு போன்ற பல தெருக்கள் அமைந்து அழகுசெய்கின்றன.

இத்தெருக்களில் செட்டியார், மூப்பனார், அகமுடையார், வெள்ளாளர், உடையார், முஸ்லீம், கிறித்தவர்கள், ஆதிதிராவிடர்கள் எனப் பல சமூகத்தைச் சார்ந்த மக்களும் ஒன்றுபட்டு வாழ்ந்து வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்தவர் சுக துக்க நிகழ்வுகளில் பிற சமூகத்தைச் சார்ந்தவர்களும் பங்கேற்று, பங்களிப்புச் செய்து சமூக ஒற்றுமைக்கும் மத நல்லிணக்கத்துக்கும் சான்றாகக் கூறுமளவுக்கு மன ஒருமைப்பாட்டோடு மக்கள் இவ்வூரில் வாழ்ந்து வருவதைக் காணமுடிகிறது.

வல்லத்தில் வசிஷ்டர் கோயில், மாதவயோக நரசிம்மர் கோயில், நாராயண பெருமாள் கோயில், சிவன்கோயில், காமாட்சி அம்மன் போன்ற பெருந்தெய்வக் கோயில்களும் முனியாண்டவர், முத்துக்கண் மாரியம்மன் கோயில், முத்துக்காளியம்மன் கோயில் போன்ற நாட்டுப்புறத் தெய்வக் கோயில்களும் காணப்படுகின்றன.

வல்லத்தில் சிறிய பேருந்துநிலையம் ஒன்றும் கடைவீதியும் காவல் நிலையமும் உள்ளன. அடைக்கலமாதா கல்லூரியும், புகழ்மிக்க பெரியார் மணியம்மை பல்கலைக்கழகமும் இவ்வூரில் அமைந்து மக்களுக்குக் கல்விச் சேவையாற்றுகின்றன. வல்லத்தில் இருந்து வடக்குத் திசை நோக்கி ஆலக்குடிக்குச் செல்லும் சாலையில் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் ஏகௌரியம்மன் கோயில் அமைந்துள்ளது.

## ஏகௌரியம்மன் கோயில்

கோயிலைச் சுற்றிலும் மரங்கள் நிறைந்த தோப்புப் பகுதிகள் காணப்படுகின்றன. பசுமைப்பகுதியின் நடுவே ஏகௌரியம்மன் ஆலயம் அமைப்புற்றுள்ளது.

## அம்மன் தோற்றக்கதை

இன்று கோயிலமைந்திருக்கும் பகுதி முற்காலத்தில் மரங்கள் நிறைந்த வனப்பகுதியாக இருந்துள்ளது. அக்காலத்தில் அப்பகுதியில் நரிக்குறவர்கள் வாழ்ந்து வந்தார்கள். பகல் வேளையில் உணவுக்காகக் காடுகளில் அலைந்து திரிந்து விலங்குகள், பறவைகளை வேட்டையாடி சமைத்து உண்டு வந்தனர். இரவு வேளையில் வீடுகளுக்கு வந்து தங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவ்வாறு அவர்கள் வாழ்க்கை நடத்தி வருகையில் நரிக்குறவர் குடும்பத்தைச் சார்ந்த பெண் ஒருத்தி கருவுற்றுக் குழந்தை பெற்றெடுக்கும் நிலையில் இருந்தாள். ஒருநாள் திடீரென அவளுக்குப் பிரசவ வலி ஏற்பட்டது. அப்போது அவ்வூரில் மருத்துவ வசதிகள் இல்லாததால் குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு அவள் உயிரோடு போராடும் நிலை தோன்றியது. சூழ்நிலையைக் கண்ட அவ்வினத்து மக்கள் மிகுந்த மனத்துயர் அடைந்தனர். அச்சமயம் அந்த இடத்திற்கு வந்த ஒரு பெண் மருத்துவச்சி, பிரசவ வேதனையால் துடிக்கும் பெண்ணைப் பார்த்து ஆறுதல் கூறி அவளுடைய பிரசவத்தையும் கண்ணுற்று நல்லமுறையில் குழந்தை பெற்றெடுப்பதற்குத் துணைபுரிந்தாள். அவளுடைய உதவியால் குழந்தையும் நல்லவிதமாகப் பிறந்தது. தாயும் சேயும் நலமாக வாழ்ந்தனர். குறவின மக்கள் அனைவரும் பிரசவம் பார்த்த பெண்ணைக் கைகூப்பி வணங்கி, தங்களின் அன்பையும் மரியாதையையும் செலுத்தினர். இந்தப் பிரசவம் பார்த்த பெண் வழிபாடே பிற்காலத்தில் காளி வழிபாடாக வளர்ச்சிபெற்றது என்றவாறு அம்மனின் தோற்றக்கதையைக்

களப்பணியின்போது ஆய்வாளரிடம் கோயில் பூசகர் பொ.கேசவன் தெரிவித்தார் (கேசவன், பொ., 01.08.2008).

பிற்காலத்தில் கோயில் பெயரும் புகழும் அடைந்து பொருளாதார வளர்ச்சியடைந்த பின் நிறுவன சமயத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டு புராணக் கதைகள் புனையப் பெற்றுள்ளன.

இயற்கை வளம் சூழ்ந்த நதிக்கரையில் தஞ்சாசுரன் என்னும் அசுரன் கடுமையாகத் தவம் செய்து கொண்டிருந்தான். அவனது தவ அக்னி வானுலகம் வரை சுட்டது. அசுரனின் தவ உக்கிரத்தைப் பார்த்தால் அவன் பெரிதாக வரம் கேட்கப் போகிறான். அதனால் தங்களுக்கு என்ன ஆபத்துக்கள் வருமோ என்று தேவர்கள் நடுங்கினார்கள். சிவபெருமான் தஞ்சாசுரனுக்குக் காட்சி தந்தார். 'என்ன வரம் வேண்டும்' என்றார். அவனும் 'மும்மூர்த்திகளால் எனக்கு மரணம் ஏற்படக்கூடாது. எந்த ஓர் ஆணாலும் எனக்குச் சாவு வரக்கூடாது' என்று வேண்டினான். இறைவனும் அருள்பாலித்தார். மேலும் அவன், 'நான் தவம் செய்த இந்தப் பகுதி என்னுடைய பெயராலேயே வழங்கப்படவேண்டும்' என்றான். சிவனும் 'இந்த ஊர் இனிமேல் உன் பெயரால் 'தஞ்சாவூர்' என்று வழங்கப்படும்' என்றார்.

தஞ்சாசுரன் மகிழ்ச்சியடைந்தான். ஆணவத்தால் தேவர்களையும், முனிவர்களையும் துன்புறுத்தினான். பாதிக்கப் பட்டவர்கள் அனைவரும் சிவனிடம் சென்றார்கள். சிவனும் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது எனக் கூறி அருகிருந்த பார்வதி தேவியை—கௌரியைக் கனிவுடன் பார்த்தார். 'பெண்ணை—சக்தியை ஒரு பொருட்டாக மதிக்காத அவனை, ஒரு பெண்தான் கொல்ல வேண்டும். கௌரி நீ அந்த சம்ஹாரத்தைப் புரிவாயாக' என்றார். ஈசனின் வேண்டுகோளை ஏற்றாள் கௌரி.

கௌரி சிங்கவாகனத்தில் ஏறிச் சென்றாள். தஞ்சாசுரன் எருமைக் கடாவாக உருவெடுத்து கௌரி மீது பாய முற்பட்டான். கௌரி எட்டு கரங்களுடன் ஆயுதங்களுடன் உயர்ந்து நின்றாள். எருமை வடிவ அசுரனின் தலையை வெட்டி வீழ்த்தினாள். பின்பும் கௌரியின் சினம் தணியவில்லை. இதைக் கண்ட சிவன் 'ஏ கௌரி' சாந்தம் கொள் என்றார்.

அமைதியான கௌரி, பூங்காளிவனம் என்றழைக்கப்பட்ட தற்போதைய வல்லத்தில் சாந்தமாக அமர்ந்து கொண்டாள். ‘ஏகௌரி’ என்று ஈசன் அழைத்ததால் ‘ஏகௌரி’ என்ற திருநாமத்தைத் தாங்கி பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றாள் என்றவாறு புராணக்கதை புனையப் பெற்றுள்ளது (ப்ரியா கல்யாணராமன், 2004:53–56).

வல்லத்துக் காளியாக மக்களால் வணங்கப்பெற்று வந்த அம்மன் வழிபாடு பின்னர் புராணக்கதைகள் புனைந்துரைக்கப்பெற்று, கருத்துப் பரப்புதல் உத்தியின்வழி மக்களிடம் கொண்டு செல்லப்பெற்று, ஏகௌரியம்மனாக மாற்றமடைந்து சக்தியின் வடிவமாக இந்துத்துவத்தை ஏற்று நிறுவன சமயத் தெய்வமாகக் காட்சியளிக்கின்றது. வல்லத்தின் வடக்குத்திசை எல்லைக் காவல் தெய்வமாக விளங்கும் காளியம்மன் தோற்றம் குறித்த வாய்மொழிக்கதையும் புராணக் கதையும் வேறுபாட்டுடன் அமைந்திலங்குவதை அறியமுடிகிறது.

## அம்மன் வடிவ அமைப்பு

ஏகௌரியம்மன் கோயில் கருவறையில் நான்கடி உயரத்தில் சுதையுருவில் அம்மன் அமர்ந்த நிலையில் நாடிவரும் அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் எட்டுத் திருக்கரங்களுடன் வலது காலை மடக்கியும், இடதுகாலைத் தொங்கவிட்ட நிலையில் அம்மன் தோற்றமளிக்கிறாள். அம்பாளின் கால்கள், கைகள், இடுப்பு, கழுத்து, காது, மூக்கு, தலைப்பகுதிகளில் அணிகள் அழகுசெய்கின்றன. அன்னையின் எட்டுக் கரங்களிலும் கபாலம், மணி, பாம்பு, உடுக்கு, கத்தி மற்றும் ஆயுதங்கள் காட்சியளிக்கின்றன. ஒன்றன் மேல் ஒன்றாக அம்மன் இரண்டு முகங்களுடன் பொலிவு பெறுகின்றாள். அன்னையின் கீழ்முகம் கொடூரமாகவும் மேல்முகம் சாந்தமாகவும் திகழ்கின்றன. கொடியவர்களை அழிப்பதற்குச் சினத்துடன் ஒரு முகமும் நல்லவர்களை வாழ வைப்பதற்குச் சாந்தமுடன் மற்றொரு முகமும் அம்மனுக்கு அமைந்துள்ளன. அம்மன் காலடியில் தஞ்சாசுரன் என்னும் தஞ்சன் வீழ்ந்து கிடக்க அவன் நெஞ்சில் பதிந்த வண்ணம் அன்னையின் கையில் உள்ள திரிசூலம் அமைப்புற்றுள்ளது. அம்மன் காலடியில் ஸ்ரீசக்கரம் அமைந்துள்ளது. வடக்குத்திசை நோக்கிக் கொலு வீற்றிருந்து அறம் வளர்க்கும் ஏகௌரியம்மனின் இடப்புறம் இராகுவும் வலப்புறம் கேதுவும் காட்சியளிக்கின்றன.

**கோயிலமைப்பு**

கோயில் வாயில் வடக்குத்திசை நோக்கியுள்ளது. கருவறை முன்பாக அர்த்த மண்டபமும், மகாமண்டமும் காட்சியளிக்கின்றன. கருவறை வாயிலின் இரு புறமும் துவாரபாலகிகள் வடிவங்கள் சுதையால் வடிவமைக்கப்பெற்று வண்ணமேற்றப்பட்டுள்ளன. மகாமண்டபத்தின் வலது ஓரத்தில் முருகப் பெருமானுக்குத் தனிச் சன்னிதியுள்ளது. இச்சன்னிதி வெளியே வலப்பகுதியில் விநாயகர் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கின்றார். தொடர்ந்து சண்டிகேசுவரர், வராகி, பிரத்யங்கிராதேவி, ஆதிசங்கரர் முதலானோர் அமைக்கப் பெற்றுள்ளனர். மகாமண்டப வலப்புறத் தூணில் துர்க்கை அம்மனின் சிற்ப வடிவம் கவினுறத் தோற்றமளிக்கிறது.

கோயில் சுமார் மூன்று ஏக்கர் பரப்பளவில் இரண்டு திருச்சுற்றுக்களோடு அமைந்துள்ளது. முதல் திருச்சுற்றின் இடப்புறம் மடப்பள்ளியும் வலப்புறம் சரக்கறையும் அமைந்துள்ளன. இரண்டாம் திருச்சுற்றின் முகப்பு மண்டபத்தில் வாசலுக்கு எதிராக முன்னடியான், ஓமகுண்டம், கலசங்கள் வைப்பதற்கான வேதிகை, பலிபீடம், யோனிகுண்டம் முதலானவை அமைக்கப்பெற்றுள்ளன.

இத்திருச்சுற்றின் இடப்புறம் சாலியகாத்தான், லாடசன்னியாசி, மதுரை வீரன், கருப்புசாமி, ஏகாம்பரர், பட்டவர் ஆகிய தெய்வங்களுக்குச் சிறிய அளவிலான தனிச் சன்னிதிகள் காணப்பெறுகின்றன. இடப்புறம் முதல் திருச்சுற்றும் சுவரை ஒட்டிய நிலையில் சிறிய அளவிலான சிவனுக்கான தனிக்கோயிலும் உள்ளது. வடக்கு வாசல் வழியே கோயிலின் உள்ளே சென்றதும் இரண்டாம் திருச்சுற்று வலப்பகுதி மதில் சுவரில் சிறிய பீடமும், அதில் நீள்வடிவ சிவப்பு வண்ணக் குறியீடும் அமைந்துள்ளன. அம்மன் தோற்றத்திற்கான வாய்மொழிக் கதையில், குறத்திக்குப் பிரசவம் பார்ப்பதற்கு மருத்துவச்சியாக வந்து அன்னை துணைநின்ற செய்தி இடம்பெறுகிறது. 'குறவர்கள் அம்மனைத் தெய்வமாக வைத்து வழிபட்ட இடமே திருச்சுற்று மதிலில் அமைக்கப்பெற்றுள்ள பீடப்பகுதியாகும்' என்று கோயில் பூசகர் ஆய்வாளரிடம் களப்பணியின்போது எடுத்துரைத்தார் (கேசவன், பொ., 01.08.2008). ஆயின் சிலர் இரண்டாம் திருச்சுற்றின் இடப்புற மதிற்சுவரின் வெளிப்பகுதியில் தென்கிழக்கு மூலையில் காணப்பெறும் பீடப்பகுதியே

குறவரினமக்கள் அன்னையைத் தெய்வமாகக் கருதி வழிபட்ட இடம் என்கின்றனர்.

ஏகௌரியம்மன் கோயில் அம்மன் கருவறையின் அமைப்பு சிறப்புற அமைக்கப் பெற்று விமானத்துடன் பொலிவுறுகிறது. முதல் திருச்சுற்று வாயிலின் மேல் வாயில் கோபுரம் வடிவமைக்கப் பெற்றுள்ளது. இரண்டாம் திருச்சுற்று வாயிலின் மேல் கோபுரம் இடம்பெறவில்லை.

கோயிலுக்கு வெளியே வலப்பகுதியில் வீதியில் ஒரு பீடம் எழுப்பப்பெற்று அதில் ஒரு சூலம் நிறுத்தப்பெற்றுள்ளது. கோயிலின் உட்பகுதியில் காணப்பெறும் அனைத்துத் தெய்வங்களும் சூலத்தில் தங்குவதாக மக்கள் நம்புகின்றனர்.

முற்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏகௌரியம்மன் கோயிலினுள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பெற்ற நிலையில் இருந்துள்ளனர். அக்காலத்தில் அவர்கள் இச்சூலத்தையே ஏகௌரியம்மனாக நினைத்து ஆடு, கோழி பலியிட்டு வழிபாடுகள் செய்துள்ளனர். இதற்காகவே கோயிலுக்கு வெளியே சூலம் அமைக்கப் பெற்றுள்ள நிலையை ஆய்வாளரால் கண்டுணர முடிந்தது. இச்சூழல் தற்காலத்தில் மாற்றம்பெற்று அடித்தள மக்களும் அம்மன் வழிபாட்டிற்காகக் கோயிலினுள் அனுமதிக்கப் பெறுகிறார்கள்.

மேலும், அம்மன் கோயில் வாயில் மூடிய பின்னர் எவரேனும் வழிபட வந்தால், அம்மனாகச் சூலத்தைக் கருதி, மாலைகள் அணிவித்து வணங்கிச் செல்லும் முறையும் தற்காலத்தில் தென்படுகிறது. இக்கோயிலின் தலவிருட்சம் வேங்கை மரம் ஆகும்.

**காலம்**

கி.பி. 850–இல் விஜயாலய சோழன் தஞ்சையைத் தலைமை இடமாகக் கொண்டே பிற்காலச் சோழப் பேரரசை நிறுவினான். கி.பி. 1279 வரை தொடர்ந்து சோழராட்சிக் காலம் முழுவதும் வல்லம் அவர்களது கோநகரமாக விளங்கியது. முதல் பராந்தகச் சோழனின் நாற்பதாம் ஆட்சியாண்டில் (கி.பி. 947) அப்பேரரசனின் அலுவலர்களில் ஒருவரான அனந்தன்காரி எனும் பராந்தக முத்தரையன் வல்லத்துப் பட்டராகிக்கு (ஏகௌரி அம்மனுக்கு) வழங்கிய கொடை பற்றிக் கல்வெட்டொன்று எடுத்துக் கூறுகின்றது. ஏகௌரி அம்மன் கோயில் பண்டு ‘கரிகாற் சோழ

மாகாளி கோயில்' என அழைக்கப்பெற்றதை கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகிறது (குடவாயில் பாலசுப்பிரமணியன், 2004:19).

கி.பி. 1535–இல் செவ்வப்ப நாயக்கர் தஞ்சைக்கு அரசரானார். இவர் அரசாளும்போது இவரது மகன் அச்சுதப்ப நாயக்கரும் இளவரசராக இணைந்து அரசுச் செலுத்தினர். செவ்வப்ப நாயக்கரும் அச்சுதப்ப நாயக்கரும் இணைந்து வல்லத்துக் காளிகோயிலைப் (ஏகௌரியம்மன்) புதுப்பித்தனர். அவர்கள் செய்த திருப்பணியே இன்றளவும் நிலைத்துள்ளது. வல்லத்துக் காளி கோயிலின் கருவறை, அர்த்தமண்டபம் இவற்றோடு இணைந்து புதிய மகாமண்டபம் ஒன்றினை இவர்கள் கட்டினார்கள் (குடவாயில் பாலசுப்பிரமணியன், 2004:20).

**கட்டடக் கலை**

**அ. கருவறை விமானம்**

ஏகௌரியம்மன் கோயில் கருவறை விமானப்பகுதியில் ஆகம நெறியிலான அமைப்புகள் தென்படுகின்றன. கருவறையின் அடி முதல் முடி வரையிலான வடிவாக்கத்தில் கட்டடக் கலையம்சங்கள் எழிலூட்டுகின்றன. கருவறையின் அதிட்டானப் பகுதியில் அழகு வேலைப்பாடுகள் இடம்பெறவில்லை. சுவர்ப் பகுதியில் கிழக்கு, மேற்கு, தெற்குத் திசைகளில் அமைந்துள்ள தேவ கோட்டங்களில் அம்மன் சிற்ப வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. ஸ்தம்பப் பகுதியில் தடி, இதழ், பலகை போன்ற உறுப்புகள் காணப்பெறுகின்றன. பிரஸ்தரப் பகுதியில் உத்திரம் மற்றும் கபோதப் பகுதிகள் காணப்பெறுகின்றன. கபோதத்தின் தென் கிழக்கு மூலையில் மட்டும் இரண்டு காளை வடிவங்கள் சிற்ப நிலையிலுள்ளன. ஏனைய மூன்று மூலைப்பகுதிகளிலும் சிங்கச் சிற்பங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. விமானத்தின் கர்ணகூடுப் பகுதி இரு தளத்துடன் வடிவமைக்கப் பெற்றுள்ளது. முதல் தளத்தின் நான்கு பக்க மைய கோட்டப் பகுதிகளில் அன்னையின் சிற்பங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இரண்டு பக்கமும் இரு பெண்கள் வெண்சாமரம் வீசும் நிலையிலான சிற்பங்களும் காட்சியளிக்கின்றன. இரண்டாம் தளத்தின் நான்கு பக்க மைய கோட்டங்களிலும் அம்மன் சிற்ப அமைதிகள் பொருத்தப்பட்டுள்ளன. இரண்டாம் தளத்தின் மேல் பகுதியில் வடக்குத் திசை நோக்கிக் குறவன், குறத்தி சிற்பங்கள் அமைப்புற்றுள்ளன. குறவன் குறத்தி இருவரும் கைகளில் தகர டப்பாக்களை வைத்து இசை முழக்கம்

செய்வது போன்ற நிலையில் சிற்பங்கள் ஆக்கம் பெற்றுள்ளன. இதனைப் போன்று தெற்குத்திசை நோக்கியும் குறவன் குறத்தி சிற்பங்கள் தோற்றம் பெறுகின்றன. இப்பகுதியில் குறவன் வில் அம்புடனும் குறத்தி கையில் கவணுடனும் காட்சி தருகின்றனர். கிரீவத்தின் மேலாகக் கோபுரச் சிகரம் அமைந்துள்ளது. சிகரத்தின் மேலாகச் சந்திரவளைவும், கிழக்கு, மேற்குத் திசை நோக்கி சிம்ம வல்லாட கட்டடமும் அமைந்துள்ளன. நடுவே அம்மன் வடிவம் அமைந்துள்ளன. சிகரத்தின் மேலாகச் செம்பாலான மூன்று கலசங்கள் பொருத்தப் பெற்றுள்ளன.

## ஆ. இரண்டாவது வாயில் கோபுரம்

ஏகௌரியம்மன் கோயிலின் இரண்டாவது வாயில் கோபுரத்தின் அடிப்பகுதி உபபீடம், அதிட்டானப் பகுதிகளைப் பெற்றுத் திகழ்கிறது. அதிட்டானப் பகுதியில் உபானம், குமுதம், காந்தம், அக்ரப்பட்டியல் போன்ற உறுப்புகள் காணப்பெறுகின்றன. ஸ்தம்பத்தில் வேதிகை, கால், கலசம், குடம், இதழ், பலகை போன்ற பகுதிகள் அமைக்கப்பெற்று அழகுடன் கோபுரத்தின் அடிப்பகுதி அமைக்கப் பெற்றுள்ளது. பிரஸ்தரத்தில் உத்திரம், யராதகம், கபோதம், யாளம் முதலான உறுப்புகள் இணைப்புற்றுள்ளன. கர்ணகூடு இரண்டு தளத்துடன் காட்சியளிக்கிறது. இரு தள கர்ணகூட்டின் நான்கு திசை மைய கோட்டங்களிலும் அன்னையின் சிற்பங்கள் எழிலூட்டுகின்றன. கிரீவப்பகுதியின் நான்கு மூலைகளிலும் சிங்க வடிவங்கள் படுத்திருக்கும் நிலையில் உள்ளன. சிகரப் பகுதியின் மேலாக சந்திர வளைவுகளும் கிழக்கு மேற்கு திசை நோக்கி சிம்ம வல்லாட கட்டடங்களும் காட்சியளிக்கின்றன. ஸ்தூபிப் பகுதியில் ஐந்து செம்புக் கலசங்கள் பொலிவுடன் திகழ்கின்றன.

## இ. முதல் வாயில் கோபுர அடி

ஏகௌரியம்மன் கோயில் முதல் வாயிலின் மேல் கோபுரம் அமைக்கப் பெறவில்லை. ஆயின் கோபுரம் எழுப்பப்பெறுவதற்கான அடிப்பகுதி அமைக்கப் பெற்றுள்ளது. இப்பகுதியும் ஆகமநெறியிலமைந்த கட்டடக் கோயில்களின் வாயில் கோபுரங்களின் அடிப்பகுதியைப் போன்று கலைநயத்துடன் வடிவமைக்கப் பெற்றுள்ளது. உபபீடமும் அதன் மேல் அதிட்டானப் பகுதியும் காணப்படுகின்றன. அதிட்டானப் பகுதியில் உபானம், குமுதம், காந்தம், அக்ரப்பட்டியல் போன்ற உறுப்புகள் எழிலோடு ஆக்கம் பெற்றுள்ளன. இந்த அமைப்போடு கோபுர அடி திகழ்கிறது.

அதிட்டானத்தின் மேல் கோபுரம் எழுப்பப் பெறவில்லை. இக்கோபுர அடிப்பகுதியின் மேல் மதிற்சுவர் எழுப்பப்பெற்று அதன் மேற்பகுதியில் தஞ்சாசுரனை அம்மன் காலடியில் இட்டு சூலத்தால் குத்துவது போன்ற சிலை வடிவம் அமைக்கப்பெற்றுள்ளது. அம்மனின் வல–இடப் பகுதிகளில் படுத்த நிலையிலிருக்கும் இரண்டு சிங்க வடிவச் சிலைகள் அழகு செய்கின்றன.

**சிற்பங்கள்**

**அ. சாலியகாத்தான்**

சாலியகாத்தான் தெய்வத்தைக் காத்தவராயன் என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர். மேற்குத்திசை நோக்கி பீடத்தில் அமர்ந்த நிலையிலுள்ளார். வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலை மடக்கிய நிலையில் காட்சியளிக்கின்றார். கைவளையும் கழுத்தணிகளும் மாலையும் காதுகளில் குண்டலங்களும் அழகுசெய்ய இடுப்பில் பட்டு வேட்டியுடன் கழுத்தில் பட்டுத் துண்டைத் தொங்கவிட்ட நிலையில் காத்தவராயன் வீற்றுள்ளார். தலையில் தலைப்பாகை கட்டியிருக்க, அதன் மேல் பச்சை வண்ணக் கிளி அமர்ந்துள்ளது. வலது கையில் அரிவாளைப் பிடித்துக் கொண்டு இடது கையை இடது தொடையின் மீது வைத்துள்ளார். பெரிய மீசையுடன், அகன்ற கண்களோடு, நெற்றியில் திருநீற்றுப் பட்டைகள் துலங்க சாலியகாத்தான் தோற்றமளிக்கின்றார். சாலியகாத்தான் மற்றும் அவரது ஐந்து தேவியர்களின் சிற்பங்களும் சுதையால் வடிவமைக்கப் பெற்றுள்ளன.

சாலியகாத்தானின் இருபுறமும் இரு தேவியர்கள் அமர்ந்த நிலையிலுள்ளனர். மேலும் வலப்பக்கம் தெற்குத்திசை நோக்கி இரண்டு தேவியர்களும் இடப்பக்கம் வடக்குத்திசை நோக்கி ஒரு தேவியும் அமர்ந்த நிலையில் உள்ளனர். காத்தவராயனின் தேவியர்களான இவர்களை ஆரியமாலை, சாத்தழகி, வண்ணாரவல்லி, உகழ்ந்தழகி, கருப்பழகி என்றவாறு பெயரிட்டுக் குறிப்பிடுகின்றனர். இக்காலத்தில் இந்த ஐந்து தேவியர்களையும் 'பஞ்ச பூதங்கள்' எனக் குறிப்பிட்டு மக்களிடம் கருத்துப் பரப்புகின்ற முயற்சியும் கோயில் நிர்வாகத்தாரால் மேற்கொள்ளப்பெற்று வருகிறது. பஞ்சபூதங்களையும் அடக்கியாளும் வல்லமை பெற்றவர் சாலியகாத்தான் என்றவாறு இறைப்புகழ் மக்களுக்கு எடுத்து விளக்கப்பெறுகின்றது.

ஏகௌளரியம்மன் கோயில் இரண்டாம் திருச்சுற்று வடகிழக்கு மூலையில் சாலியகாத்தானுக்குத் தனிச் சிற்றாலயம் உள்ளது.

புகழேந்திப் புலவர் இயற்றிய 'பெரிய எழுத்து காத்தவராய சுவாமி கதை' என்னும் நூலின் எட்டாவது பகுதிக்கு 'வல்லத்து மாங்காளியம்மன் வனம்' எனப் பெயரிடப் பெற்றுள்ளது. இப்பெயரில் குறிக்கப்பெறும் 'வல்லத்து மாங்காளி' என்னும் 'வல்லத்துக்காளி' இக்காலத்தில் 'ஏகௌளரி' எனப் பெயரிடப்பெற்று வணங்கப்பெறும் அம்மனையே குறிக்கும்.

இந்நூலில், வல்லத்து மாங்காளியம்மன் வனப்பகுதியில், காத்தவராயனைக் கழுவேற்றுவதற்குரிய அறுபதடி வேங்கை மரத்தை வல்லத்துக் காளியம்மன் அருளியதாகவும் செய்தி இடம்பெற்றுள்ளது.

**என்னிலும் பெரியவளாயிருக்கின்றாள் காளியவள்**
**வல்லத்து மாங்காளி மயிலணையாளிருக்கிறாள் காண்**
**அவளாலேயாகுமடா அரியவையைச் சிறையெடுக்க**
**ஆச்சா வயிரமுள்ள அறுபதடி வேங்கைமரம்**
**தச்சனுளி நாடாமல் தானாய்ச் சமைந்ததப்பா**
**வாச்சுளிகள் நாடாமல் வளர்ந்த கழுமரந்தான்**
**சித்துளிகள் நாடாமல் சிலைபோல்வளருதங்கே**
**ஐந்து கிண்ணிப் பார்த்து அருங்கிளியாள் வளர்த்து வாறாள்**

மேற்குறிப்பிட்ட கதைப்பாடல் பகுதியில் குறிக்கப்பெறும் 'வல்லத்து மாங்காளி' என்னும் தெய்வம் ஏகௌளரியம்மனைக் குறிப்பதாகும்.

**ஆ. லாட சன்னியாசி**

மக்கள் சித்தராகக் கருதி வணங்கும் தெய்வமாக லாடசன்னியாசி காணப்பெறுகிறார். பீடத்தின் மேல் அமர்ந்த நிலையில் வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடக்கிய நிலையில் இச்சிற்ப அமைதி தோற்றமளிக்கிறது. வலக்கை முத்திரை காட்ட, இடக்கை தண்டத்தின் மேல் வைத்துள்ள நிலையிலுள்ளது. கைகளிலும் கழுத்திலும் உருத்திராட்ச மாலைகள் அணியப்பெற்றுள்ளன. முகத்தில் தாடியும், தலையில் நீண்டு வளர்ந்த முடியுடன் லாடசன்னியாசி காட்சியளிக்கிறார். நெற்றியில்

திருநீற்றுப் பட்டையுடன் தோன்றும் லாட சன்னியாசியின் வலப்புறம் கமண்டலம் ஒன்றும் தோற்றமளிக்கிறது. சன்னியாசி வடிவம் என்பதால் காவியுடை தரித்த கோலத்தை வெளிப்படுத்த காவி வண்ணமேற்றப்பட்ட சுதை சிற்பமாக லாடசன்னியாசி வடிவமைக்கப் பெற்றுள்ளார்.

இரண்டாம் திருச்சுற்று வடகிழக்கு மூலையில் சாலியகாத்தான் சிற்றாலயம் அருகில் லாடசன்னியாசிக்கும் தனிச்சன்னிதி அமைக்கப் பெற்றுள்ளது.

## இ. மதுரை வீரன்

மதுரைவீரன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். வலது கையில் அரிவாளை உயர்த்திப் பிடித்துள்ளார். இடது கையில் காணப்பெறும் கதையாயுதம் தரையில் ஊன்றிய நிலையில் உள்ளது. கைகளில் காப்புகளும் கழுத்தில் அணிகலன்களுடன் மாலையும் காதுகளில் குண்டலங்களும் அழகூட்டுகின்றன. இடுப்பில் வேட்டியுடன் தோளில் அங்கவஸ்திரமும் அணிவிக்கப் பெற்றுள்ளன. பெரிய மீசையுடனும் அகன்று விரிந்த கண்களோடும் தலைப்பாகையோடு மதுரை வீரன் காட்சிப்படுத்தப் பெற்றுள்ளார்.

மதுரைவீரன் வலப்பக்கம் வெள்ளையம்மாள் சுதை சிற்ப வடிவம் காணப்பெறுகிறது. கழுத்து, கை, காதுகளில் நகைகள் எழிலூட்ட தலையில் கொண்டையிட்ட தோற்றத்தோடு வடிவமைக்கப் பெற்றுள்ளது. வலக்கையைத் தொங்கவிட்டு இடக்கை அல்லிமலரைப் பற்றியிருக்க பச்சைப் பட்டுடுத்து நின்ற திருக்கோலத்தில் வெள்ளையம்மாள் தோன்றுகிறாள்.

மதுரைவீரன் இடப்பக்கம் பொம்மியம்மாள் வடிவம் காணப்படுகிறது. கழுத்து, கை, காதுகளில் நகையணிந்து இடக்கையைத் தொங்கவிட்டு, வலக்கையில் அல்லி மலருடன் கொண்டையிட்ட தலையோடு சிவப்புப் பட்டுடுத்து நின்ற நிலையில் பொம்மியம்மாள் காட்சியளிக்கின்றாள்.

மதுரை வீரன், வெள்ளையம்மாள், பொம்மியம்மாள் ஆகிய மூன்று சிலை வடிவங்களுமே சுதையால் ஆக்கப்பெற்றுள்ளன. வெள்ளையம்மாள் வலப்பகுதியில் நாய் ஒன்று உட்கார்ந்த நிலையில் இருப்பது போன்ற சுதை வடிவமும் உள்ளது. இச்சிற்பங்கள் அனைத்தும் தனிச்சன்னிதி பெற்று

இரண்டாம் திருச்சுற்றின் வடகிழக்குப் பகுதியில் லாட சன்னியாசி சிற்றாலயத்தை அடுத்துக் காணப்பெறுகின்றன.

**ஈ. கருப்புசாமி**

புலி மீது அமர்ந்த நிலையிலுள்ளார். கைவளையும் கழுத்தணிகளும் காதில் குண்டலங்களும் காணப்படுகின்றன. வலக்கையில் அரிவாளும் இடக்கையில் தரையில் ஊன்றிய நிலையில் கதையாயுதமும் காணப்பெறுகின்றன. இடுப்பில் வேட்டி அணிவிக்கப் பட்டுள்ளது. பெரிய மீசை, விரிந்த கண்கள், தலையில் கிரீடத்துடன் கருப்புசாமி சிற்ப அமைதி துலங்குகிறது. வலப்பக்கம் அமர்ந்த நிலையில் நாய் வடிவமும் இடப்பக்கம் கன்று பால்குடிக்கும் நிலையிலான பசு வடிவமும் இடம்பெற்றுள்ளன.

கருப்புசாமி சிலை வடிவம் சுதையால் வடிவாக்கம் பெற்றுள்ளது. மதுரை வீரன் தனிச்சன்னிதியையொட்டி கருப்புசாமிக்கும் தனிச்சன்னிதி அமைக்கப் பெற்றுள்ளது.

**வழிபாடுகள்**

ஏகௌரியம்மன் கோயில் நாள்தோறும் காலை பத்து மணி முதல் மாலை ஆறு மணி வரை மக்கள் வழிபாட்டிற்காகத் திறந்து வைக்கப் படுகிறது. கிழமைதொறும் வெள்ளிக்கிழமையிலும் மாதந்தொறும் அமாவாசை, பௌர்ணமி நாட்களிலும் காலை ஆறு மணி முதல் இரவு எட்டு மணி வரையிலும் அம்மன் கோயில் திறந்து வைக்கப்படுகிறது.

**அ. நாள் வழிபாடு**

நாள்தோறும் ஏகௌரியம்மனுக்கு ஒருகால பூசை—உச்சிக்கால பூசை மட்டும் நடைபெறுகிறது. அம்மன் காலடியில் எந்திரம் அடங்கியுள்ளதால் ஸ்ரீசக்கரத்திற்கும் பூசைகள் நடைபெறும். அன்னைக்குப் பதினாறு முழம் புடவை அணிவித்து, மலர் மாலைகள் சார்த்தி, தாம்பாளத்தில் தேங்காய், பழங்கள் வைத்து, வெள்ளிப் பாத்திரத்தில் பால் படைத்து பன்னிரண்டு மணியளவில் தீபாராதனை நடைபெறுகிறது. அம்மன் முன்பாகப் பஞ்சமுகத்திருவிளக்கு ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. மாலை ஆறு மணியளவில் கோயில் நடை சாத்தும் போது திருவிளக்கின் நான்கு முகங்கள் அமர்த்தப்பெற்று ஒரு முகம்

மட்டும் எரிந்து கொண்டிருக்கும். கருவறை வாயிலில் திரைபோட்டு நடை சாத்தப்படுகிறது.

## ஆ. வார வழிபாடு

ஏகௌரியம்மனுக்கு வாரந்தொறும் வெள்ளிக்கிழமை சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. அம்மாள் சிலை வடிவம் சுதையால் ஆக்கம் பெற்றுள்ளதால் மூலவருக்கு அபிசேகங்கள் நடைபெறுவதில்லை. அம்மனின் பாதத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீசக்கரத்திற்கே அபிசேகங்கள் நிகழ்த்தப்பெறுகின்றன. மகா மண்டபத்தின் வலப்புறத் தூணில் அமைப்புற்றிருக்கும் துர்க்கை அம்மனுக்குத்தான் அபிசேக வழிபாடுகள் நடத்தப்பெறுவது வழக்கமாகவுள்ளது.

வெள்ளிக்கிழமைதொறும் ஸ்ரீசக்கரத்திற்கும் துர்க்கை அம்மனுக்கும் எண்ணெய்க் காப்பு செய்வதோடு, திரவியப்பொடி, பழ வகைகள், மஞ்சள், சந்தனம், தேன், பால், தயிர், பன்னீர் போன்ற பொருள்களால் அபிசேகங்கள் நடைபெறுகின்றன. பின்னர் மலர் மாலைகள் அணிவித்து தேங்காய், பழம் வைத்து சர்க்கரைப் பொங்கல் படைத்து ஆராதனை நடைபெறுகிறது. இச்சிறப்பு வழிபாடு உபயதாரர் பூசையாக நடைபெறுகிறது.

## இ. மாத வழிபாடு

நாட்டு நலனுக்காகவும் ஊர் நலனுக்காகவும், மழைவேண்டியும் மாதந்தொறும் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் அம்மனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. உச்சிக்கால பூசையின்போது நீராடலுடன் எண்ணெய்க் காப்பு செய்து திரவியப்பொடி, எலுமிச்சம் பழம், நார்த்தம் பழம், மஞ்சள், சந்தனம், தேன், பால், தயிர், பன்னீர் முதலானவற்றால் ஸ்ரீசக்கரத்திற்கும் துர்க்கை அம்மனுக்கும் அபிசேகங்கள் நடைபெறுகின்றன. பின்பு அலங்காரங்கள் செய்யப்பெற்று மலர்மாலைகள் அணிவித்து தேங்காய் பழத்துடன் சர்க்கரைப் பொங்கல் படையல் செய்து ஆராதனை நடைபெறும். இவ்வழிபாடும் உபயதாரர் பூசையாகவே நடைபெற்று வருகிறது.

நூற்றியெட்டு மூலிகைப் பொருள்களால் யோனிகுண்டத்தில் வேள்வி நிகழ்த்தப்பெற்று, சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், தயிர் சாதம், புளியோதரை போன்ற உணவுப் பொருட்கள் இறையன்பர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்பெறும் வழக்கம் உள்ளது.

**ஈ. ஆண்டு வழிபாடுகள்**

இக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை பௌர்ணமியை முன்னிட்டு நான்கு நாள்கள் மகாசண்டி ஹோமமும், திருவிளக்குப் பூசையும் நடைபெறுகிறது. ஆடி மாதம் கடைசி வெள்ளிக்கிழமை தீமிதி விழா சிறப்பாக நடைபெறுகிறது. ஆடிப்பெருக்கு, ஆடி–தை மாத அமாவாசை வழிபாடுகள், நவராத்திரி விழாவும் மக்கள் வழிபாட்டிற்கெனச் சிறப்போடு கொண்டாடப்பெறுகின்றன.

**1. சித்திரை பௌர்ணமி**

சித்திரை பௌர்ணமி விழா நான்கு நாள்கள் நடைபெறுகின்றன. பௌர்ணமி நாளிற்கு மூன்று நாள்கள் முன்பாகவே திருவிழா தொடங்கப் பெறுகிறது.

முதல் நாள் காலை ஆறு மணியிலிருந்து ஒன்பது மணிக்குள் விநாயகர் பூசை நடைபெறும். கோயிலுட்பகுதியில் அமைக்கப்பெற்றுள்ள விநாயகருக்கு அபிசேகங்கள் ஆராதனைகள் நடைபெறும். இறைவனுக்குப் படைத்த கொழுக்கட்டை போன்ற பொருட்களைக் கோயில் யோனி குண்டத்தில் இட்டு வழிபாடு நிகழ்த்துவார்கள். வேள்வி முடிந்ததும் விநாயகருக்குக் கலசதீர்த்தம் ஊற்றி அபிசேகம் செய்து ஆராதனை வழிபாடுகள் நடைபெறும்.

அன்று மாலை ஆறு மணியிலிருந்து ஒன்பது மணி வரை முதல் கால பூசை நடைபெறும். மகாசண்டி ஹோமம் நிகழ்த்துவதற்காகவும், வேத மந்திரங்கள் ஓதுவதற்காகவும் வேதியர்கள் ஐவர் வரவழைக்கப் படுகின்றனர். அறுபத்துநான்கு கலசங்கள் வைத்து, அதிரசம், அப்பம் போன்ற இனிப்புப் பொருட்களையும், தேன், பன்னீர், திருநீறு, பச்சரிசி மாவு, திரவியப்பொடி, பழ வகைகள் முதலானவற்றையும் ஓம குண்டத்தில் இட்டு வேள்வி செய்வார்கள். ஓமப் பொருட்களான 108 மூலிகைப் பொருட்களையும் குண்டத்தில் போட்டு நெய்வார்த்து அம்மனுக்கு அர்ப்பணம் செய்வார்கள்.

இரண்டாவது நாள் காலை ஒன்பது மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரை இரண்டாங் கால பூசைகள் நடைபெறும். ஆலமரம், அரச மர விறகுகளை ஓமகுண்டத்தில் போட்டு நெய்யூற்றி, கற்பூரத்தால் நெருப்பேற்றி வேள்வியை நிகழ்த்துவார்கள். அந்தணர்கள்

வேதமந்திரங்களை ஓதிக்கொண்டு பூசைப் பொருட்களைக் குண்டத்தில் இட்டு தேவிக்குச் சமர்ப்பிப்பார்கள். அன்று மாலை ஆறு மணியிலிருந்து ஒன்பது மணி வரை மூன்றாங்கால பூசைகள் நடைபெறும்.

மூன்றாம் நாள் காலையிலும் மாலையிலும் வழக்கமான முறைப்படி நான்காம் காலம் மற்றும் ஐந்தாம் கால பூசைகள் நடைபெறுகின்றன. நான்காம் நாள் காலை ஏழு மணிக்குத் தொடங்கி நண்பகல் ஒரு மணி வரையிலும் ஆறாம் கால பூசைகள் நடைபெறும்.

### அ. கன்னிகா பூசை

ஏழு சிறிய பெண் குழந்தைகளுக்குப் புத்தாடைகளாகப் பாவாடை, சட்டை அளித்து வெற்றிலை, பாக்கு, மலர் மாலைகள் அளித்து சிறப்பிப்பதோடு பதினொரு ரூபாய் தட்சணையும் அளிப்பார்கள். பெண் குழந்தைகளைத் தெய்வமாகக் கருதிப் பூசைகள் செய்து வழிபடும் பழக்கத்தைக் 'கன்னிகா பூசை' என்று குறிப்பிடுகின்றனர். பின்னர் கோயில் பூசகர் தன் மனைவியுடன் குழந்தைகளுக்குப் பாதபூசைகள் செய்வது வழக்கம். இறுதியாக ஏழு பெண் குழந்தைகளும் கோயிலை வலம்வந்து அம்மனை வழிபட்டு அருள்பெறுகின்றனர்.

### ஆ. சன்னியாசி பூசை

சன்னியாசி ஒருவருக்குக் காவி உடை அளித்து, பூபோட்டு வெற்றிலை, பாக்கு அளித்து, பதினொரு ரூபாய் பணம் தட்சணையும் கொடுத்து கோயில் பூசகர் மனைவியோடு பாத வழிபாடு நிகழ்த்துவார். பின்னர் சன்னியாசி அம்மன் கோயிலை வலம்வந்து தேவியை வணங்கி அருள்பெறும் வழக்கம் காணப்படுகின்றது.

### இ. பிரம்மச்சாரி பூசை

பிரம்மச்சாரியாக வாழ்கின்றவர்கள் எழுவரை அழைத்து அவர்களுக்குப் புதிய வேட்டிகள், துண்டுகள் அளித்து, பூ போட்டு, வெற்றிலை, பாக்கு அளித்து, தட்சணையும் கொடுத்து கோயில் பூசகர் துணைவியாரோடு பாத வழிபாடு நிகழ்த்துவார். பின்பு பிரம்மச்சாரிகள் எழுவரும் கோயிலை வலம்வந்து அம்மனை வணங்கி மகிழ்வார்கள்.

**ஈ. சுமங்கலிப் பூசை**

மகாசண்டி ஹோம வழிபாட்டிற்கு வருகை தந்திருக்கும் சுமங்கலிப் பெண்களில் ஒருவரை அழைத்து, புதுப்புடவை, ஜாக்கட்டு துணியளித்து, பூமாலையுடன் வெற்றிலை, பாக்கு, தட்சணையும் அளித்து, கோயில் பூசகர் மனைவியுடன் பாதவழிபாடு நிகழ்த்தும் வழக்கம் உள்ளது. இறுதியில் சுமங்கலிப் பெண் கோயிலை வலம்வந்து தாயை வணங்கி ஆசி பெறுகின்றாள்.

**உ. தம்பதி பூசை**

வழிபாட்டிற்கு வருகை தந்திருக்கும் தம்பதியர்களில் ஒரு குடும்பத்தினரை அழைத்து, அவர்களுக்கு வேட்டி, துண்டு, புடவை, ஜாக்கட் துணி அளித்து, பூமாலை அணிவித்து, வெற்றிலை, பாக்குடன் தட்சணையும் அளித்து, பூசகர் மனைவியுடன் பாதபுசை செய்வார். பின்னர் தம்பதியர் ஏகௌரியம்மனை வலம் வந்து வணங்கி அருளாசி பெறுகின்றனர்.

**ஊ. கோ பூசை**

பசுவைக் கிழக்குமுகமாக நிற்கவைத்து, கழுத்தில் பூமாலை போட்டு, முதுகுப் பகுதியில் புதிய வேட்டியை விரித்துப்போட்டு, யோனிப் பகுதியில் மஞ்சள் தடவி, பொட்டு வைத்து தூப, தீப ஆராதனைகள் நடைபெறும். பூசகர் மனைவியுடன் கோமாதவை வழிபட்ட பின்னர் இறைநேசர்கள் வழிபடும் வழக்கம் உள்ளது.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பூசையின்போதும் வணங்கப் படுகிறவர்கள் தெய்வமாகக் கருதி வழிபடப்படுகிறார்கள். ஏகௌரியம்மன் கோயில் பூசகர் இல்லறத்தாராக இருக்க வேண்டும் என்னும் மரபு உள்ளது. எனவே ஒவ்வொரு பூசை முடிவிலும் கோயில் பூசகர் தன் மனைவியுடன் பாதவழிபாடு செய்யும் வழக்கம் காணப்படுகிறது. பூசகர் வழிபட்ட பின்னர் அன்னை வழிபாட்டிற்கு வருகை தந்திருக்கும் அனைவரும் பாத வழிபாடு மேற்கொள்ளும் பழக்கம் உள்ளது.

பாதபூசை வழிபாடுகள் முடிவுற்றதும் அம்மன் அளிக்கும் சீர் பொருள்களாகக் கருதப்பெறும் இனிப்பு வகைகள், பழவகைகள் முதலானவற்றை ஓமகுண்டத்திலிட்டு வேள்விகள் நடைபெறும். மகாசண்டி ஹோம ஒவ்வொரு காலபூசைக்கும் அம்மன் அளிக்கும் பட்டுப்

புடவை ஓமகுண்டத்திலிடப்பெற்று வேள்வி நிகழ்த்தப்பெறும். இறுதியாகக் கோயில் பூசகர் கலசத்தை எடுத்துச் சென்று அதிலுள்ள புனித நீரை அம்பாளுக்குத் தெளித்து ஆராதனைகள் செய்வார். இதனைத் தொடர்ந்து கோயில் வளாகத்தில் அமைந்திருக்கும் அத்தனை தெய்வங்களுக்கும் மகாசண்டி ஹோமத்தில் வைத்து வணங்கப்பெற்ற அறுபத்துநான்கு கலசங்களில் இருந்து சிலவற்றை எடுத்துச் சென்று புனிதநீர் தெளித்து, தேங்காய் உடைத்து வழிபாடுகள் செய்து வணங்கும் வழக்கம் காணப்பெறுகின்றது.

### எ. திருவிளக்குப் பூசை

மகாசண்டி ஹோமம் இறுதி நாளன்று இரவு திருவிளக்குப் பூசை நடைபெறும். அன்று சித்திரை மாதம் பௌர்ணமி நாளாக இருக்கும். இரவு ஏழு மணியளவில் திருவிளக்குப் பூசை தொடங்கும். மாங்கல்ய பலத்திற்காகச் சுமங்கலிப் பெண்களும், திருமணத் தடைகள் அகன்று நல்ல கணவன் அமைவதற்காகக் கன்னிப் பெண்களும் விளக்குப் பூசையில் பங்கேற்கின்றனர்.

கோயில் அர்த்தமண்டபத்திலிருந்து முதல் வாயில் வரையிலும் இரு பக்கங்களிலும் பெண்கள் அமர்ந்திருப்பார்கள். கூட்டம் அதிகமாக இருந்தால் முதல் திருச்சுற்றிலும் அமர்வர். தோராயமாக 300 பெண்கள் வரை விளக்குப் பூசையில் பங்கேற்பர். ஒவ்வொருவரும் தங்கள் முன் ஒரு தாம்பாளத்தில் திருவிளக்கு வைத்திருப்பர். கோயில் பூசகர் ஒவ்வொருவருக்கும் தேங்காய், பூ, எண்ணெய், குங்குமம், திரி போன்றவற்றை அளிப்பார். இதற்காக ஒவ்வொருவரிடமும் நூறு ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

கோயில் பூசகர் ஒலிபெருக்கியில் மந்திரங்களைக் கூற அதைக் கேட்டுப் பூசை செய்யும் பெண்களும் திரும்பக் கூறுவார்கள். அச்சமயம் ஒவ்வொருவரும் முன்பிருக்கும் விளக்கில் எண்ணெய் ஊற்றி, திரியிட்டு, விளக்கேற்றி, மலர்களாலும், குங்குமத்தாலும் விளக்குப்பூசை நிகழ்த்துவார்கள். இரவு ஒன்பது மணியளவில் பூசைகள் நிறைவுறும்.

அம்மன் வழிபாடு முடிந்ததும் அனைவருக்கும் இனிப்பு வகைகள், சர்க்கரைப் பொங்கல் போன்றவை பிரசாதமாகத் தொன்னையில் வைத்து வழங்கப்படும். இத்துடன் ஒவ்வொருவருக்கும் எவர்சில்வர் தட்டமும்,

சுமங்கலிப் பெண்களுக்குப் புடவையும் வழங்கப்படும். பின்னர் அனைவரும் கோயிலை வலம் வந்து இல்லம் செல்வர். திருவிளக்குப் பூசை முடிவடைவதோடு நான்கு நாள் சித்திரை பௌர்ணமி விழா நிறைவு பெறுகிறது.

## 2. தீமிதி வழிபாடு

நாட்டுப்புற மக்கள் எதிர்கால வாழ்க்கை சிக்கலின்றி அமைவதற்காக நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். தமிழகத்தின் பல பகுதிகளிலும் சுடலைமாடன், இசக்கியம்மன், வண்டிமலைச்சியம்மன், காளியம்மன், மாரியம்மன், துரோபதையம்மன், முனீஸ்வரன், காத்தவராயன், கருப்புசாமி, அய்யனார் எனப் பல்வேறு வகையான தெய்வங்களும் பல்வேறு வகையான வழிபாட்டு மரபுகளும் காணப்படுகின்றன. இத்தெய்வங்கள் குறித்து மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள் ஏராளம். வாழ்வில் இன்னல்களும் இடுக்கண்களும் துன்பங்களும் துயரங்களும் தொல்லைகளும் அகலுவதற்குப் பல்வேறு வகையான வேண்டுதல்களைத் தெய்வங்களின் முன்வைக்கின்றனர். இவை தெய்வங்களின் அருளால் நிறைவேறினால் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். கோயில்களில் அங்கப்பிரதட்சிணம் செய்தல், மாவிளக்குப் போடுதல், அலகுகுத்துதல், பால்குடம் எடுத்தல், ஆடு, மாடு, கோழி முதலானவற்றை உயிர்ப்பலியிட்டு வழிபடுதல் போன்றவாறு நேர்த்திக் கடன்கள் செலுத்துகின்றனர். சிலபகுதிகளில் மண்ணாலான உருவம் செய்து அளித்தல், மண் அல்லது வெள்ளியால் உடலுறுப்புகளைச் செய்து தெய்வங்களுக்குக் காணிக்கையாக்கி வேண்டுதல்களை நிறைவேற்றும் வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன. இத்தகைய நிலையில் வேண்டுதலை நிறைவேற்றும் ஒரு வழிபாட்டு மரபாகவே தீமிதி வழிபாடும் காணப்பெறுகின்றது.

தீ வழிபாடு உலகம் தழுவிய ஒரு வழிபாட்டு முறையாகும். ஜெர்மனி, அயர்லாந்து, ஸ்காட்லாந்து, போலந்து, சைபீரியா, இத்தாலி, செர்பியா, கிரீஸ் போன்ற பல நாடுகளிலும் மக்கள் தங்களையும் கால்நடைகளையும் காப்பாற்றிக் கொள்ளத் தீவிழா நடத்தியிருக்கின்றனர். இத்தாலி, செர்பியா, ஸ்காட்லாந்து போன்ற நாடுகளில் தீமிதி வழிபாட்டை மலையுச்சியில் நடத்தினர். இம்மக்கள் தீமிதி வழிபாட்டின்போது

கால்நடைகளைத் தீயின் மீதும் நடக்க வைத்தனர். ஸ்லாவ் இன மக்கள் நிர்வாணமாகத் தீமிதித்தனர். இசுலாமிய நாடுகளிலும் மக்கள் தீயை வழிபட்டிருக்கின்றனர். ஈரானில் முதல்நாள் தீபவழிபாடும் இரண்டாம் நாள் தீமிதி வழிபாடும் மூன்றாம் நாள் மாட்டுக் கொட்டகைகளில் ரோவான் என்ற மரக்கட்டைகளில் தீயேற்றியும் வழிபட்டனர். இவ்வாறு ஐரோப்பா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் தீ வழிபாடு நடைபெற்றதை ஆலசின் என்னும் அறிஞர் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார் (இரவிச்சந்திரன், சி.மா., 2004:91).

இந்தியாவில் வேதகாலந்தொட்டே தீவழிபாடு நடைபெற்று வருகின்றது. வேதத்தில் வருணன், இந்திரன், அக்னி ஆகியோர் சமமாகக் கருதப்பட்ட கடவுளர்கள். தீ வேத கால ஆரியர்களுக்கு வழிகாட்டியாக விளங்கியது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஆரியர்கள் குடிபெயரும்போது அடர்ந்த காடுகளைத் தீயிட்டு அழித்துக்கொண்டு செல்லத் தீ உதவியதால் அக்னியை 'வழிகாட்டி' என்றனர். 'யக்ஞம்' (தீ வளர்ப்பு) ஆரிய சமூகத்தின் உற்பத்திமுறையின் சின்னமாகும். ஆரியரின் கூட்டுத் தொழிலாக யக்ஞம் விளங்கியது. தீ ஆரிய வாழ்க்கையின் மையமாக விளங்கியதால் அதனைக் கடவுளாக வழிபட்டனர் (இரவிச்சந்திரன், சி.மா., 2004:91–92).

தமிழர்கள் தங்கள் வாழ்வில் நெருப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் நிலையைத் தொன்றுதொட்டே காணமுடிகிறது. 'தமிழகத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் அய்யனார் மலையிலுள்ள பாறை ஓவியங்களில் பசு ஒன்று தீ மிதிக்கும் காட்சி இடம்பெற்றுள்ளது. இந்த ஓவியத்தைத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கருதுகின்றனர்' (இரவிச்சந்திரன்,சி.மா.,2004:92). செம்மொழி இலக்கியங்களின்வழி தமிழர்களுக்கும் நெருப்புக்கும் இருந்த உறவுநிலையைக் கண்டுணர முடிகிறது. சங்க இலக்கிய வகையைச் சார்ந்த புறநானூற்றின் 246வது பாடலில் பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு கூறும் சில செய்திகள் இடம் பெற்றுள்ளன.

**பல் சான்றீரே! பல் சான்றீரே!**
**'செல்க' எனச் சொல்லாது, 'ஒழிக' என விலக்கும்,**
**பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே!**
**அணில் வரிக் கொடுங் காய் வாள் போழ்ந்திட்ட**

**காழ் போல் நல் விளர் நறு நெய் தீண்டாது,**
**அடை இடைக் கிடந்த கை பிழி பண்டம்,**
**வெள் எட் சாந்தொடு, புளிப் பெய்து அட்ட**
**வேளை வெந்தை, வல்சி ஆக,**
**பரற் பெய் பள்ளிப் பாய் இன்று வதியும்**
**உயவல் பெண்ணிரேம் அல்லேம்மாதோ;**
**பெருங் காட்டுப் பண்ணிய கருங் கோட்டு ஈமம்**
**நுமக்கு அரிதாகுகதில்ல; எமக்கு எம்**
**பெருந் தோட் கணவன் மாய்ந்தென, அரும்பு அற**
**வள் இதழ் அவிழ்ந்த தாமரை**
**நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே! (புற. 246)**

பலராகிய சான்றோரே உன் தலைவன் இறந்தான். அவனுடன் நீயும் உடன் செல் என்று கூறாது, செல்லாது தவிர்க என்று கூறி விலக்கும் பொல்லாத எண்ணத்தையுடைய பலராகிய சான்றோரே! அணிலின் மேலுள்ள வரிபோல் வரியை உடைய வெள்ளரிக்காயை அரிவாளால் அரிந்து இடப்பட்ட விதை; அவ்விதை போன்றதும் நல்ல வெண்மையான மணம்மிகுந்த நெய் தீண்டப் படாததும், கீரை இடையிடையே பயின்று கையால் பிழிந்து கொள்ளப் பட்டதுமான நீர்ச் சோற்றுத்திரள்; அதனுடன் வெண்மையான எள்ளுத் துவையலுடன் புளியுடன் சேர்த்த வேளைக் கீரையையும் வேகவைத்து உணவாகக் கொண்டு உண்பர் கைம்மை மகளிர். இவற்றை உணவாகக் கொள்வதுடன் பருக்கைக் கற்கள் அமைந்த படுக்கையின் மீது பாயுமின்றிக் கிடப்பர். இத்தகைய கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிராக யாம் விளங்கமாட்டோம். சுடுகாட்டில் உண்டாக்கியதும் கரிய விறகால் அடுக்கப்பட்டதுமான பிணப்படுக்கை உமக்கு அரியதாக இருக்கலாம். ஆனால் எங்களுக்குப் பெரிய தோளையுடைய எம் கணவன் இறந்தபிறகு மொட்டின்றி நிறைந்த இதழ் மலர்ந்த தாமரையை உடையதும், நீர் செறிந்ததுமான பெரிய பொய்கையும் தீயும் ஒரு தன்மைத்தே ஆகும் என்றவாறு பெருங்கோப்பெண்டு கூறுவதாகக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

சிலப்பதிகாரத்திலும் நல்லவர்களை விட்டுவிட்டு, தீயவர்களை அழிக்குமாறு நெருப்புக் கடவுளை கண்ணகி வேண்டிய செய்தி பதிவு செய்யப் பெற்றுள்ளது.

பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய
பொற்றொடி ஏவப் புகை அழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்
பொற்பு வழுதியும்தன் பூவையரும் மாளிகையும்
விற்பொலியும் சேனையும் மாவேழமும்—கற்பு உண்ணத்
தீத்தரு வெம் கூடல்தெய்வக் கடவுளரும்
மாத்துவத்தான் மறைந்தார் மாற்று (சிலப். மது. வஞ். 53—61)

பார்ப்பனர்கள், அறவழிச் செல்வோர், பசுக்கள், பத்தினிப் பெண்கள், முதியோர் குழந்தைகள் எனும் இவர்களை விட்டுவிட்டு, தீயவர்கள் பக்கமே தீ பரவட்டும் என்று கண்ணகி எரிநெருப்புக் கடவுளை ஏவ, தேர்மன்னன் பாண்டியன் திருநகர்—மாடக்கூடல்—மதுரையைப் பற்றிப் பரவியது தீ. வேந்தரை, மகளிரை, மாட மாளிகைகளை, வில்லேந்திய வீரர் படை வரிசையை, குதிரைகளை, யானைகளை, கண்ணகிப் பெண்ணின் கற்பென்னும் நெருப்பு உண்டு தீர்த்து விட்டது. கூடல் மதுரைத் தெய்வங்கள் கூட இதை மாற்ற வழியின்றி மறைந்தார்கள்.

மணிமேகலையில் சாதுவன் இறக்க அவன் மனைவி ஆதிரை தீ வளர்த்துத் தீப்புகுந்து தீயும் சுடாத் தீவினையாட்டியாகத் தன்னை நொந்து கொள்கிறாள்.

'ஊரிரேயோ! ஒள் அழல் ஈமம்
தாரீரோ ?' எனச் சாற்றினள் கழறி
சுடலைக் கானில் தொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளி எரி பொத்தி
'மிக்க என் கணவன் வினைப்பயன் உய்ப்பப்
புக்குழிப் புகுவேன்' என்று அவள் புகுதலும்
படுத்து உடன் வைத்த பாயல் பள்ளியும்
உடுத்த கூறையும் ஒள்ளெரி உறாஅது
ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலில்
சூடிய மாலையும் தொல்நிறம் வழாது

**விரைமலர்த் தாமரை ஒரு தனி இருந்த**
**திருவின் செய்யோள் போன்று இனிது இருப்பத்**
**'தீயும் கொல்லாத் தீவினையாட்டியேன்**
**யாது செய்கேன்?' என்று அவள் ஏங்கலும் (மணி. 16:23–36)**

'ஊரில் உள்ளவர்களே ஒள்ளிய தழல் பொருந்திய ஈமத்தினை எனக்குத் தரமாட்டீர்களோ' என்று கூறி ஆதிரை புலம்பினாள். சுடுகாட்டில் தோண்டப் பட்ட குழியில் முறுக்குடைய விறகுகளால் அழலைச் சிலர் மூட்டினர். 'தீவினை மிக்க என் கணவன், அவ்வினைப்பயனால் உயிர்பிரிந்து சென்றவிடத்தில் யானும் என் உயிர் பிரிந்து அவனுடன் செல்வேன்!' என்று கூறி, ஆதிரை அத்தீயில் இறங்கினாள். எரிகுழியில் அவளுக்கென அமைத்து வைத்த படுக்கையிடமும் உடுத்திய ஆடையும் ஆகியவற்றில் ஒள்ளிய தீ பற்றவில்லை! பூசிய சாந்தமும் அசையும் கூந்தலில் சூடிய மாலையும் பழைய நிறம் மாறாமல் அப்படியே திகழ்ந்தன. மணம்மிக்க தாமரை மலரில் ஒப்பின்றி வீற்றிருக்கும் திருமகளைப் போன்று இனிதே இருந்தாள். 'தீயினாலும் கொல்லப்படாத தீவினையுடைய நான் இனி யாது செய்வேன்?' என்று ஆதிரை ஏங்கிப் புலம்பினாள். கணவனின் இழப்பைத் தாங்கவியலாத பெண்கள் அழல் புகும் வழக்கம் உடையவர்களாக இருந்தனர். பழந்தமிழரிடையே தீப்புகும் வழக்கம் இருந்தது என்பதை இலக்கியச் சான்றுகள்வழி அறியமுடிகிறது.

முதல் இராசராசனின் தாய் வானவன்மாதேவி தன் கணவன் சுந்தரசோழன் இறந்தபோது உடன்கட்டை ஏறினாள். கி.பி. 1717–இல் கிழவன் சேதுபதி இறந்த போது அவனுடைய 47 மனைவியர் தீக்குளித்தனர் (காந்தி, க., 2003:97).

இந்துக்களிடம் தீ புனிதமானதாகக் கருதப்படுகிறது. திருமணத்தின்போது தீ வளர்த்து அக்னி சாட்சியாகத் தாலி கட்டப் படுகிறது. பெண்கள் கணவனோடு உடன்கட்டையேறித் தீப்புகுந்தால் அவர்கள் சொர்க்கம் செல்வர் என்று நம்பப் படுகிறது. அடுப்பு மேடையைத் தினமும் மெழுகிக் கோலமிட்ட பிறகே அடுப்பு பற்றவைக்கும் பழக்கம் கிராமப்புறத்தில் இன்றும் காணப்படுகிறது. அன்றாடம் விளக்கேற்றும் போது வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. விளக்குப் பூசைகள், தீபத் திருநாள்கள், சொக்கப்பனை கொளுத்தி வழிபடுதல், கோயில்களில் யாகம் வளர்த்தல் முதலான அனைத்தும் தீயின் தெய்வீகத்தன்மையை

விளக்குகின்றன. கண்ணேறு கழிக்கும்போது கண்ணேறு கழித்த மிளகாய் உள்ளிட்ட பொருட்களைத் தீயில் போடுவர். சீதை தன் தூய்மையை நிரூபிக்கத் தீயில் இறங்கி வெளிவந்ததாக இராமாயணம் கூறுகிறது. உயர்பிறப்பை அடைவர் என்ற நம்பிக்கையைப் பெரியபுராணம் நந்தன் கதை தெரிவிக்கிறது (இராமநாதன், ஆறு., 2006:90–91).

தமிழகத்தில் வாழ்ந்துவரும் நாட்டுப்புற மக்கள் தீவழிபாடுகளை மேற்கொண்டு வருவதை இன்றும் பரவலாகப் பல பகுதிகளிலும் காணமுடிகின்றது. மக்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டு மாவிளக்கிடுதல், தீமிதி வழிபாடுகள் செய்தல்போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். இத்தகைய வழிபாடுகளை, நாட்டுப்புறத் தெய்வக் கோயில் திருவிழாக்களில் மக்கள் பெருந்திரளாகக் கூடி நிறைவேற்றுவதைக் களப்பணியின் வாயிலாகக் கண்டறிய முடிந்தது.

Pierre Sonnerat என்பவர் 1782–இல் விவரித்துள்ள தீமிதி நிகழ்ச்சிகள் முதலாவது குறிப்பாகக் கிடைக்கிறது என்று அல்ப்ஹில்ட பைட்டல் குறிப்பிடுகிறார். அரசு உதவியோடு நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளில் தீமிதி குறித்த முதல் அறிக்கை 1854–இல் எழுதப்பட்டுள்ளதாகச் சுட்டும் ஹில்டபைட்டல் தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களில் பலரும் தீமிதி குறித்து எழுதி வந்துள்ளதைச் சுட்டுகிறார் (இராமநாதன், ஆறு., 2006:91–92).

வல்லம் ஏகௌரியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் ஆடிமாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று தீமிதி வழிபாடு நடைபெறுகிறது. இந்த விழாவை 'ஆடிக்கழிவு விழா' என்னும் பெயரால் சுட்டுகின்றனர். 15.08.2008 அன்று நடைபெற்ற தீமிதி விழா இக்கோயிலில் நடைபெற்ற 118ஆவது தீமிதி விழாவாகும் என்று கோயில் பூசகர் ஆய்வாளரிடம் கூறினார். ஏகௌரியம்மன் தஞ்சாசுரனை அழித்த நாளான ஆடிமாதம் கடைசி வெள்ளியன்று ஆடிக்கழிவு விழா நடைபெறுகிறது.

இக்கோயிலில் தீமிதி விழாவிற்காக விழாக்குழுவினர் அமைக்கப் படுகிறார்கள். வல்லம், ரெட்டிப்பாளையத்தைச் சேர்ந்த எம்.கணேசன், பொ.கலியபெருமாள், ரெ.மனோகர் ஆகியோர் விழாக் குழுவினராகப் பொறுப்பேற்று, பால்குடம் மற்றும் தீமிதி விழாவிற்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்கின்றனர். தீமிதி வழிபாட்டிற்குத் தேவைப்படும் விறகுகளை, ஊர்மக்களிடம் வசூலிக்கும் நன்கொடைப் பணத்தில் வாங்கி

விழாக்குழுவினர் சேகரிக்கின்றனர். அரசமரம், ஆலமரம், புளியமர விறகுகள் தீமிதி வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. மக்கள் வீட்டில் வளர்க்கும் சாமி மரங்கள் பட்டுப்போனால் அவற்றையும் வாரிசுகள் இல்லாத குடும்பத்தினர் பயன்படுத்த ஆளின்மையால் உலக்கை, மரஉரல் போன்ற பொருட்களையும் தீமிதி வழிபாட்டிற்கான விறகுகளுக்காக அளிக்கின்றனர். ஏகௌரியம்மனைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள் விழாவிற்குத் தேவையான பழங்கள், நெய், விறகுகள் முதலானவற்றை அளித்து உதவுவதோடு பண உதவியும் செய்து விழா சிறப்பாக நடைபெறுவதற்குத் துணைநிற்கின்றனர். வல்லம்புதூர், ஆலக்குடி, வண்ணாரப் பேட்டை, கள்ளப்பெரம்பூர், மேலஉளூர், வளப்பக்குடி முதலான ஊர்களில் வாழும் முத்தரையர், அம்பலக்காரர், கள்ளர், மறவர், வெள்ளாளர், படையாச்சி, ஆதிதிராவிடர், உடையார் போன்ற சமூகத்தைச் சார்ந்த மக்கள் விழாவில் பெரும்பங்கு வகிக்கின்றனர். அம்மனுக்குக் காணிக்கையாக அன்பர்கள் அளிக்கும் விறகு வகைகளை விழாக் குழுவினர் சேகரித்து கோயிலுக்குக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். தீமிதி வழிபாட்டிற்காகத் தோராயமாகப் நான்கு டன் விறகுகள் சேகரிக்கப் படுகின்றன.

தீமிதி விழாவிற்கு முந்தைய நாள் பூக்குழி சீரமைக்கப்படுகிறது. ஏகௌரியம்மன் கோயில்வாயிலுக்கு வெளியே இடப்பகுதியில் பூக்குழி அமைக்கப்படுகிறது. பத்தடி நீளம், ஐந்தடி அகலம், இரண்டடி ஆழத்தில் பூக்குழி அமைக்கப்படும். பூக்குழி முன்பாக நான்கடி நீளம், நான்கடி அகலம், ஒரு அடி ஆழத்தில் நீர்க்குழி அமைக்கப்பெறுகிறது. விழாவிற்கு முதல்நாள் பூக்குழியை வடிவமைத்து அதில் விறகு வகைகளை அடுக்கி வைப்பார்கள். தீமிதி வழிபாடு நடைபெறும்போது நீர்க்குழியில் நிரம்ப நீரூற்றி வைத்திருப்பார்கள். தீமிதித்து வருபவர்கள் நீர்க்குழியில் கால்களை நனைத்துவிட்டு கோயிலுக்குள் செல்ல வேண்டும் என்பது மரபாக உள்ளது.

தீமிதி விழாவன்று காலை எட்டு மணியளவில் வல்லம் மாரியம்மன் கோயிலில் வைக்கப்பெற்றுள்ள ஏகௌரியம்மன் உற்சவர் வடிவத்தை வண்டியில் வைத்து ஏகௌரியம்மன் கோயிலுக்குக் கொண்டு வருவார்கள். ஏகௌரியம்மன் கோயில் கருவறைக்கு வெளியே அம்பாள் இடப்பக்கம் அமைக்கப்பெற்றுள்ள மேடையில் உற்சவர் வடிவம் வைக்கப்பெறும். அன்று காலை பத்து மணியளவில் உற்சவருக்குப்

பொங்கல் படைத்து அலங்காரம் செய்து ஆராதனைகள் நடைபெறும். பின்னர் கோயில் பூசகர் பூக்குழிக்கு வந்து எலுமிச்சம்பழம் அறுத்து, அதில் குங்குமம் தடவி வைத்து, தேங்காய் உடைத்து, கற்பூர ஆராதனை செய்து, அக்கற்பூரத்தை நெருப்போடு விறகுகளின் அடியில் வைத்து நெருப்பேற்றுவார். எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி அதில் குங்குமம் தடவி வைப்பதென்பது உயிர்ப் பலியிடுவதன் குறியீடாகக் கருதப்படுகிறது. இவ்வாறு செய்தால் தீமிதி வழிபாட்டின்போது எவருடைய உயிருக்கும் ஆபத்து வராது என்ற நம்பிக்கையுள்ளது. விறகுகள் எரிந்து கனலாகின்றன. அவற்றை மூங்கில் கம்புகளினாலும் கனல்களைப் பரப்புவதற்குப் பயன்படுத்தும் கருவியினாலும் பூக்குழி முழுவதும் பரப்பி சமப்படுத்துவர்.

மக்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டு தீமிதி வழிபாடு செய்கின்றனர். குடும்பத்தில் அமைதி நிலவவும், அனைவரும் நலமாக வாழவும், வேளாண்மையில் விளைச்சல் பெருகவும், திருமணம்/ குழந்தைப்பேற்றிற்காகவும் அம்மனிடம் வேண்டுதல்களை முன்வைக்கின்றனர். வேண்டுதல்கள் நிறைவேறினால் நேர்த்திக் கடன் செலுத்தும் வகையில் தீமிதிக்கின்றனர்.

பூக்குழி இறங்குவோர் கடைப்பிடிக்கவேண்டிய நோன்பு முறைகளும் உண்டு. இவர்கள் தீமிதி வழிபாட்டிற்காக 48 நாட்கள் விரதம் இருக்கின்றனர். இந்த நாட்களில் சைவ உணவே உண்கின்றனர். காலை, இரவு அரைவயிற்றுச் சாப்பாடும், மதியம் ஒரு வேளை மட்டும் முழு வயிற்றுச் சாப்பாடும் உண்கின்றனர். மதிய வேளையில் உணவு உண்பதற்கு முன் காகத்திற்கு உணவு வைத்த பின்னரே உணவு உட்கொள்கின்றனர். தங்களின் முன்னோர் காகத்தின் வடிவில் வந்து உணவு உண்பதாகக் கருதுகின்றனர். விரத நாட்களில் தம்பதியினர் தாம்பத்ய உறவும் வைத்துக் கொள்ளக்கூடாது என்னும் வரையறையும் உள்ளது. இச்செயலைத் தீட்டாகக் கருதுகின்றனர். எனவே, புனிதமான முறையில் விரதம் மேற்கொள்ள வேண்டும் என்கிற கொள்கையும் இவ்வழிபாட்டில் காணப்பெறுகிறது. இத்தகைய முறையில் விரதம் கடைப்பிடித்து 48ஆவது நாளில் பூக்குழியில் இறங்குகின்றனர்.

தீமிதி வழிபாடன்று தீமிதிப்போர் அனைவரும் வல்லத்திலிருந்து பால் குடத்துடன் ஊர்வலமாக வருவார்கள். வல்லத்தில் அமைந்துள்ள

வச்சிரேஸ்வரர் கோயிலில் உள்ள வச்சிரதீர்த்தக் குளத்தில் அனைவரும் நீராடுவர். அன்று பெண்கள் மஞ்சள் அல்லது சிவப்பு வண்ண நூல் ஆடை அணிந்திருப்பார்கள். ஆண்கள் மஞ்சள் அல்லது காவி வேட்டி உடுத்திருப்பார்கள். வெள்ளை வேட்டியைப் பயன்படுத்துவதும் உண்டு. விழாக் குழுவினர் வரவழைத்துள்ள பூசகர் தீமிதிப்போர் அனைவருக்கும் காப்புகட்டும் நிகழ்ச்சி நடைபெறும். பின்னர் நூறு ரூபாய் கட்டணம் பெற்றுக் கொண்டு பால்குடம் எடுக்க விரும்புவோருக்கு விழாக்குழுவினர் ஒப்பனை செய்து அணியமாக வைத்துள்ள பால் குடங்களை அளிப்பார்கள். ஐந்து லிட்டர் பால் கொள்ளும் அளவிலான எவர்சில்வர் அல்லது பித்தளைக் குடத்தில் பால்நிரப்பி அதன் மேல் வேப்பிலைக் கொத்தை வைத்து அதன் மேல் தேங்காய் வைத்து பால்குடம் அணியப் படுத்தியிருப்பார்கள். பால்குடத்தைச் சுமந்தபடி தீமிதிப்போர் வரிசையாக நின்று ஊர்வலமாகப் புறப்பட்டு வருவதற்குத் தயாராவார்கள். அலகுக் காவடி, செடல் காவடி எடுத்து வருபவர்களும் ஊர்வலத்துடன் வருவதுண்டு. குடத்தில் பாலிற்குப் பதிலாகப் பன்னீர், சந்தனம், மஞ்சள் பொடி கலந்த நீர் முதலானவற்றை ஊற்றி நிரப்பியும் தலையில் வைத்து தீமிதி வழிபாடு நிகழ்த்துவோர் எடுத்து வருவதுண்டு.

தீமிதி வழிபாடு நடைபெறும் நாளன்று பன்னிரண்டு மணியளவில் வல்லம் வச்சிரேஸ்வரர் கோயிலில் இருந்து பக்தர்களின் ஊர்வலம் புறப்படும். ஏகௌளியம்மன் அருள்பெற வேண்டி நூற்றுக்கணக்கானோர் தலையில் பால்குடம் சுமந்தபடி ஊர்வலத்தில் பங்கேற்பர். பால்குடம் எடுக்காத பலரும் விரதம் மேற்கொண்டு தீமிதி நிகழ்வில் மட்டும் கலந்து கொள்கின்றனர். வழிபட வருவோர் ஊர்வலம் வல்லம் கடைவீதி வழியே வந்து, இரண்டு மணியளவில் வல்லம் அருகிலுள்ள ரெட்டிப்பாளையம் காமாட்சியம்மன் கோயிலை வந்தடையும். இந்த அம்மனை ஏகௌளி அம்மனின் தங்கையாகக் கருதுகின்றனர். காமாட்சியம்மனுக்கும் அபிசேகங்களுடன் அலங்கார ஆராதனைகள் நடைபெறும். பின்னர் பால்குட ஊர்வலம் புறப்பட்டு நான்கு மணியளவில் ஏகௌளியம்மன் கோயிலை வந்தடையும். கோயில் முன்பாக அமைக்கப் பெற்றிருக்கும் பூக்குழி அருகில் ஊர்வலத்தினர் தீமிதிப்பதற்காகக் காத்து நிற்பார்கள். பூக்குழியில் தீக்கனல்கள் பக்குவமான நிலையில் பரப்பப் பெற்றிருக்கும்.

ஏகௌளியம்மனுக்குச் சேவையாற்றும் கோயில் பூசகர் மருமகன் கோ.பாலு என்பவர்தான் அம்மனிடம் உத்தரவு பெற்று முதலில் தீமிதித்து

வழிபாட்டைத் தொடங்கி வைப்பார். கோயில் பூசகர் பொ.கேசவன் என்பவர் அன்னையிடமிருந்து ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து கோ.பாலுவிடம் அளிப்பார். அவ்வேளை அவர் உடம்பில் அருளிறங்கி ஆட, சுற்றி நிற்போர் அவரைத் கைத்தாங்கலாக அழைத்து வந்து பூக்குழி முன்பாக நிறுத்துவார்கள். அவரும் அம்மனை மனதில் எண்ணி வழிபட்டு பூக்குழியில் கிழக்கிலிருந்து மேற்குத் திசை நோக்கி தீமிதித்து ஓடுவார். அவரைத் தொடர்ந்து ஊர்வலமாக வந்தவர்கள் அனைவரும் ஒருவர்பின் ஒருவராகத் தீமித்து அம்மனை வழிபடுவார்கள். பிராமணர்கள் தீமிதி வழிபாட்டில் பங்கேற்பதில்லை.

தலையில் பால்குடத்தைச் சுமந்தபடி தீமிதித்து வருபவர்கள் நீர்க்குழியில் கால்களை நனைத்தவாறு ஏகௌரியம்மன் கோயிலுக்குள் செல்வார்கள். அங்கு அம்மன் பூசகர் பால்குடத்தை வாங்கி அம்பாள் உற்சவருக்குப் பால் அபிசேகம் செய்வார். குடத்தில் சிறிது பாலை மீதி வைத்து பிரசாதமாக வழங்குவார். அபிசேகப்பால் முதல் திருச்சுற்று வலப்பகுதியில் அமைக்கப்பெற்றிருக்கும் தொட்டிப் பகுதியில் பாய்ந்து மண்ணில் கலக்கிறது. அம்மனின் அபிசேகப்பால் யாருடைய காலிலும் மிதிபடக்கூடாது என்னும் எண்ணத்தில் இவ்வமைப்பை அமைத்துள்ளனர். பின்னர் பால்குடம் எடுத்து வந்தவருக்குப் பூசகர் திருநீறு பூசிவிட்டு, கையிலும் திருநீறு அளிப்பார். மேலும் அம்மனிடமிருந்து ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து பிரசாதமாக வழங்குவார். இந்த எலுமிச்சம் பழத்தைப் பிரசாதமாகப் பெற்றவர்கள் முழுவதுமாக உண்டு மகிழ்கின்றனர். பின்னர் கையில் கட்டியுள்ள காப்பை அறுத்துவிட்டு, பால் கொணர்ந்த குடங்களை விழாக் குழுவினரிடம் ஒப்படைத்துவிடுவர். இக்குடங்களை வருமாண்டு விழாக்களில் விழாக்குழுவினர் பயன்படுத்திக் கொள்வர். அன்றைய தினம் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டு மக்கள் பலர் ஆடு, கோழி, எருமைக் கடா, காளை மாடுகள் போன்றவற்றை அம்மனுக்குக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

வழிபட வந்தோர் அனைவரும் தீமிதித்து முடிந்ததும் அம்மனுக்கு ஆராதனைகள் நடைபெறும். அவ்வேளையில் தீமிதிவிழாக் குழுவினருக்கு மரியாதை செய்யும் வகையில் முதலில் அவர்களுக்கு அம்மனின் பிரசாதம் வழங்கப்பெறும். இதைப்போன்று அன்று காலை அம்பாளுக்கு நடைபெறும் ஆராதனை வழிபாட்டின்போது மரியாதை நிமித்தமாகக் கோயில் தக்கார்

மற்றும் செயல் அலுவலருக்கு முதலில் பிரசாதம் வழங்கும் வழக்கம் காணப்படுகிறது.

தீமிதி வழிபாடு நடைபெறும் நாளன்று வல்லம் காவல் நிலையத்தைச் சார்ந்த காவலர்கள் பலர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருப்பார்கள். மக்கள் கூட்டத்தைக் கண்காணித்து ஒழுங்கு படுத்தும் பணிகளை மேற்கொள்கின்றனர். தீயணைப்புத் துறையைச் சார்ந்தவர்களும் நீர் நிரப்பிய நிலையில் தீயணைப்பு வண்டியைத் தயார் நிலையில் வைத்திருப்பார்கள். பூக்குழியில் ஓடுபவர்கள் தவறி விழுந்தால் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு ஆம்புலன்ஸ் வண்டி ஒன்றும் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பெற்றிருக்கும். மக்களுக்கு எத்தகைய இடையூறுகளும் இல்லாத வகையில் விழாக்குழுவினரும் செயல் அலுவலரும் இணைந்து விழாவை நல்முறையில் ஆண்டுதோறும் நடத்தி வருகின்றனர்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைத்துத் தரப்பினரும் பூக்குழி இறங்குவதால், இவ்வழிபாட்டு முறையைக் காண்பதற்கு அருகமைந்த கிராமங்களில் வாழும் மக்கள் குடும்பத்தோடு கூட்டம் கூட்டமாக வருகின்றனர். அன்று பெருந்திரளான மக்கள் கோயிலில் கூடுகின்றனர். இதன் காரணமாகத் திருவிழாக் கடைகளும் அன்று ஏராளமாக வருகின்றன. ஒரே நாளில் கூடுதல் வணிகம் செய்து வணிகர்கள் பெரிய அளவில் இலாபம் ஈட்டுகிறார்கள்.

ஆடிக்கழிவு நாளான அன்று தீமிதி வழிபாடு முடிவுற்றதும் தொடர்ந்து அம்மனுக்கு இரவுப் பூசைகள் தொடங்கப்பெறுகின்றன. அன்று இரவு பத்து மணியளவில் அம்மனுக்கு அபிசேகங்கள் செய்து அலங்காரத்துடன் ஆராதனைகள் நடைபெறும். தொடர்ந்து சாலியகாத்தானுக்கும் வழிபாடுகள் நடைபெறும். பின்னர் நள்ளிரவில் உயிர்ப்பலி கொடுப்பதற்கான எருமைக் கடாவைத் தெரிவு செய்வர். அம்மனுக்குக் காணிக்கையாக அளிக்கப்பெற்ற எருமைக் கடாக்களில் ஒச்சம் இல்லாத மூன்றைத் தெரிவு செய்வர். ஒவ்வொன்றுக்கும் குறியீடாக அமையும் வகையில் மூன்று தாள் பொட்டலங்களில் திருநீறு, குங்குமம், பூ வைத்து சாலியகாத்தான் முன் இட்டு அதில் ஒன்றைத் தெரிவுசெய்து அதற்குரிய எருமைக்கடாவைப் பலியிடுவர். இத்தகைய திருவுளச்சீட்டு முறையில் பலியிடும் கடாவைத் தேர்ந்தெடுப்பர்.

இரவு பன்னிரண்டு மணியளவில் ஏகௌளியம்மன் கோயில் வாயிலுக்கு எதிரே வளர்ந்திருக்கும் ஆலமரத்தின் பின்புறம் மண்தரையில் வைத்து எருமைக்கடா பலியிடும் நிகழ்ச்சி நடைபெறும். வல்லத்தில் வாழ்ந்து வரும் பறையர் சமூகத்தைச் சார்ந்தவர்களில் பெரியவர் ஒருவரை எருமைக்கடாவைப் பலிகொடுப்பதற்காகத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்ந்தெடுக்கப் பெறுபவர் அம்மனுக்குச் செய்யும் சேவையாகக் கருதி இப்பணியைச் செய்கிறார். சென்ற ஆண்டு வல்லம் சவேரியார் கோயில் தெருவில் வாழ்ந்துவரும் பா.மாணிக்கம் என்பவர் எருமைக்கடா பலிகொடுக்கும் பணியைச் செய்துள்ளார். இப்பணிக்காக இவர் ஆடி மாதம் முழுவதும் விரதம் மேற்கொள்கிறார். ஒருவேளை உணவு உண்பதே வழக்கம். ஆடி மாதம் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் அம்மன் கோயிலுக்கு வந்து அன்னையை வணங்குகிறார். இவரை ஆடிக்கழிவு விழா அன்று இரவு வீட்டிலிருந்து தப்படித்து கோயிலுக்கு அழைத்துவருவர். இவர் குடும்பம் மூன்று தலைமுறையாக இப்பணியைச் செய்து வருவதாகக் களப்பணியின்போது மா.மாணிக்கம் ஆய்வாளரிடம் தெரிவித்தார் (09.12.2008).

நள்ளிரவில் எருமைக்கடாவின் கால்களைக் கட்டி மண்டியிட்ட நிலையில் அமர்த்தியிருப்பர். கடாவுக்கு மாலைகள் அணிவித்துத் திருநீறு பூசுவர். கடாவை வெட்டுபவருக்கும் வேட்டி, துண்டு அளித்து மாலைகள் அணிவித்தபின் பூசகர் திருநீறு அளித்து கடாவை வெட்டுவதற்கான அரிவாளைச் சாலியகாத்தான் கோயிலிலிருந்து எடுத்தளிப்பார். இந்த அரிவாளால் எருமைக்கடாவின் தலை வெட்டப்படுகிறது. கடா வெட்டுவதற்காக மா.மாணிக்கம் என்பவருக்கு நூறு ரூபாய் தட்சணையாக வழங்கப்படுகிறது. பின்னர் கடாவை வெட்டிய இடத்திலிருந்து சிறிது தொலைவு பின்னால் சென்று குழி வெட்டி அதில் வெட்டப்பெற்ற கடாவின் தலைப் பகுதியை வால்பகுதியில் வைத்து புதைத்து விடுவர். அம்மன் தஞ்சாசுரனை வெற்றிகொண்ட நாளாக ஆடிக்கழிவுத் திருவிழா கொண்டாடப்படுகிறது. எனவே, புதைக்கப்படும் எருமைக்கடாவின் தலைப் பகுதியை முன்புறம் வைத்துப் புதைத்தால் தஞ்சாசுரன் உயிர்பெற்று எழுந்து மக்களைத் துயரப்படுத்துவான் என்னும் நம்பிக்கை மக்களிடையே காணப்படுகிறது. அம்மன் தோற்றம் குறித்து புனையப்பெற்றுள்ள புராணக் கதையில் ஏகௌளியம்மன் அசுரனை அழிக்க முற்படும்போது அவர் எருமைக் கடாவாக உருமாறி அன்னையைத் தாக்க முற்படும்போது

அம்மன் அவனை அழிப்பதாகக் கருத்துப் பதிவாகியுள்ளது. இதன் அடிப்படையில் ஆடிக்கழிவு விழாவில் நள்ளிரவில் பலியிடப்பெறும் எருமைக்கடா குறியீடாகத் தஞ்சாசுரனை அம்பாள் அழித்த நிகழ்வை நினைவுபடுத்தும் வகையில் அமைகிறது. கருவுற்ற பெண்கள் எருமைக் கடா பலியிடல் நிகழ்ச்சியைப் பார்க்கக்கூடாது என்னும் கட்டுப்பாடு கோயிலில் பின்பற்றப்படுகிறது. பலிநிகழ்வு அச்சம் தரும் வகையில் அமைவதால் கர்ப்பிணிகளுக்குக் கருக்கலைவு தோன்றுவதற்கான வாய்ப்புள்ளது என்பதால் அவர்கள் பலியைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

எருமைக்கடா பலிபெறும் பெண் தெய்வங்கள் மைசூர்ப் பகுதியில் உருவான மகிஷாசுரமர்த்தினி (எருமைத்தலை அரக்கனைக் கொன்ற காளி) வழிபாட்டில் இருந்து கிளைத்திருக்க வேண்டும். அலைந்து திரியும் சாதியரான நரிக்குறவர் இக்காலத்திலும் தங்கள் தெய்வத்துக்கு எருமைக்கடா பலி கொடுக்கின்றனர் (பரமசிவன், தொ., 2004:124).

எருமைக்கடா பலிமுடிவுற்றதும், இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஐம்பொன்னால் வடிவமைக்கப்பெற்ற அம்மன் உற்சவர் வடிவம் வீதியுலா வருவது வழக்கமாக நடைபெறுகிறது. ஊரில் தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும் வகையில் அம்மன் உலா ஊரில் நடைபெறுகிறது. வல்லம் தேரோடும் வீதிகளில் வலம்வந்து இரவு இரண்டு மணிக்கு மேல் ஏகௌரியம்மன் உற்சவர் மீண்டும் கோயிலை வந்தடையும். வல்லத்தில் உற்சவர் வீதியுலா வருகையில் தப்பு மேளம் முழங்க உலா வருவது வழக்கம். அப்போது வெள்ளாளத் தெருவில் வசிக்கும் சு.இராமலிங்க ஆசாரி வீட்டில் மட்டும் அர்ச்சனை வழிபாடு செய்கிறார்கள். மற்றவர்கள் அர்ச்சனை செய்வதில்லை. காரணம் அம்மன் அசுரனை அழித்து சினத்தோடு வருவதால் எதிர்கொள்ள அஞ்சுகிறார்கள். சு.இராமலிங்க ஆசாரி வீட்டில் மட்டும் அர்ச்சனை வழங்குவதற்கும் காரணம் கூறப்படுகிறது. காத்தவராயனைக் கழுவேற்றுவதற்கு அம்மன் வேங்கை மரம் அளித்த போது ஆசாரி சமூகத்தைச் சார்ந்தவர்களும் துணை நின்றதாகக் கூறப்படுகிறது. இந்த உறவு நிலையால் அம்மனை வழிமறித்து அர்ச்சனை செய்தாலும் அம்பாள் நம்மை ஒன்றும் செய்யமாட்டாள் என்னும் நம்பிக்கையில் அர்ச்சனை அளிக்கப் படுவதாகச் செய்திகள் பேசப் படுகின்றன. இவர் குடும்பத்தைச் சார்ந்த ஒரு சிலர் வீடுகளிலும்

அண்மைக் காலத்தில் அர்ச்சனை வழிபாடுகள் நிகழ்த்துகிறார்கள். தொடர்ந்து நான்கு மணியளவில் ஆட்டுக்கடா வெட்டி சாலியகாத்தான், மதுரைவீரன், கருப்புசாமி, ஏகாம்பரர் முதலான தெய்வங்களுக்கு அசைவப் படையல் இட்டு வழிபாடுகள் நடைபெறும். அப்போது கருவாடு மற்றும் கத்தரிக்காய் கலந்து சமைத்த குழம்பையும் தெய்வங்களுக்குப் படைப்பார்கள். ஆராதனைகள் முடிந்ததும் படையல் உணவுகள் வழிபட வந்திருப்போருக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் ஆடிக்கழிவு இரவு வழிபாட்டை வல்லத்தைச் சார்ந்த உடையார் சமூகத்தவர் அல்லது பிற சமூகத்தவர்கள் (பலபட்டடை) இணைந்து செய்கின்றனர். ஒரு ஆண்டு உடையார் சமூகத்தவர்கள் நடத்தினால் மறு ஆண்டில் பிற சமூகத்தவர்கள் இணைந்து நடத்துகிறார்கள். கிராம ஒழுங்கிற்காக இத்தகைய நெறிமுறைகள் தோற்றுவிக்கப் பெற்றுள்ளன.

சனிக்கிழமை காலை வல்லம் மாரியம்மன் கோயிலில் வைத்து, ஏகௌரியம்மனுக்குக் காணிக்கையாக வந்த ஆடு, மாடு, கோழி முதலான உயிரினங்களை ஏலமிடுவார்கள். கோயில் செயல் அலுவலர் மற்றும் கிராமத்துத் தலைவர்கள் அமர்ந்து ஏலத்தை நடத்துவார்கள். இதில் வரும் வருமானம் அறநிலையத்துறைக்கு உரியதாகும்.

விழாக்குழுவினர் சனிக்கிழமை காலை வண்டியில் வைத்து ஏகௌரியம்மன் உற்சவரை எடுத்துச்சென்று வல்லம் மாரியம்மன் கோவிலில் ஒப்படைத்து விடுவார்கள்.

மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை விடையாற்றி விழா நடைபெறும். அன்று அன்னைக்குப் பொங்கல், சுண்டல் போன்ற பொருட்களைப் படைத்து அபிசேகங்களும் அலங்கார ஆராதனைகளும் நடைபெறும்.

## 3. ஆடிப்பெருக்கு

ஆடிப்பெருக்கன்று புதுமணத் தம்பதிகள் ஏகௌரியம்மன் கோயிலுக்கு வந்து தாலிப்பெருக்கிப் போடுவார்கள். அன்று காலை பத்து மணியளவில் வல்லம் மாரியம்மன் கோயிலில் இருந்து ஏகௌரியம்மன் உற்சவர் புறப்பட்டு வீதியுலா செல்வது வழக்கம். தோரணங்கள், மாலைகளால் தேர் போன்று அலங்கரிக்கப் பெற்ற வண்டியில் உற்சவர் உலா வருவது வழக்கம். அவ்வமயம் வீடுகள்தோறும் அர்ச்சனைகள்

நடைபெறும். மறுநாள் காலை பத்து மணியளவில் உற்சவர் மீண்டும் மாரியம்மன் கோயிலை வந்தடைந்ததும் ஆராதனைகள் நடைபெறும்.

### 4. ஆடி–தை அமாவாசை

முற்காலத்தில் நரிக்குறவர்கள் ஒன்றன்மேல் ஒன்றாக ஏழு பானைகளை அடுக்கி வைத்துப் பொங்கலிட்டு அம்மனுக்கு வழிபாடுகள் செய்துள்ளனர். இவ்வழிபாட்டுமுறையை நினைவுகூரும் வகையில் ஆடி–தை அமாவாசை நாட்களில் வரிசையாக ஏழு பானைகளை வைத்துப் பொங்கலிட்டு அம்மனை வழிபடும் வழக்கம் உள்ளது. அம்மனுக்குப் படைக்கப்படும் பொங்கல் உணவுகள் வழிபாட்டிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் பிரசாதமாக வழங்கப்பெறும்.

### 5. நவராத்திரி

ஆண்டுதோறும் நவராத்திரி நாளன்று யோனி குண்டத்தில் வேள்வி நிகழ்த்தி அம்மனுக்கான வழிபாடுகள் நடைபெறுகின்றன. நண்பகல் ஒரு மணிக்கு வேள்வி தொடங்கப்பெற்று நான்கு மணிக்கு முடியும். வேள்வி முடிந்ததும் பூசகர் சிதறுகாய் உடைத்து, கலசத்தை எடுத்து வந்து, அம்மனை வலம் வந்து, கருவறைக்குள் சென்று கலசத்தில் உள்ள புனித நீரை அம்மன் தலையில் தெளித்து பஞ்சமுக ஆராதனை செய்யும் வழிபாட்டு முறையுள்ளது.

### 6. முதல் முழுக்கு–கடைமுழுக்கு

ஐப்பசி–கார்த்திகை மாதங்களில் அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் அன்னைக்குப் ‘புனித நீராடல்’ வழிபாடு நடைபெறும். ஐப்பசி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை நீராடலை ‘முதல் முழுக்கு’ என்றும், கார்த்திகை மாதம் இறுதி ஞாயிற்றுக்கிழமை நீராடலைக் ‘கடைமுழுக்கு’ என்றும் குறிப்பிடுவர். அன்றைய நாட்களில் அம்மனுக்குச் சிறப்பு அபிசேக, அலங்கார, ஆராதனைகள் நடைபெறும்.

கார்த்திகை மாதம் அனைத்துத் திங்கள் கிழமைகளிலும் அம்மனுக்குச் சோமவார வழிபாட்டு நிகழ்வுகளும் நிகழ்த்தப்பெறுகின்றன.

### 7. கார்த்திகை தீபம்

ஏகௌரியம்மன் கோயில் வாயிலின் மேல்பகுதியில் அமைக்கப் பெற்றிருக்கும் அம்மன் சிற்ப வடிவத்தின் இரு பக்கங்களிலும் கார்த்திகை

தீபத்தன்று விளக்குகள் ஏற்றப்படும். தோராயமாகப் பத்து லிட்டர் எண்ணெய் பிடிக்குமளவிலான இரண்டு புது மண்பானைகளில் எண்ணெய் ஊற்றி, பானைகளின் மேல் பகுதியை அலுமினிய தட்டுகளால் மூடுவார்கள். இத்தட்டுகளின் நடுவில் அமைக்கப்பெற்றிருக்கும் துளைகளின் வழியே திரிகளை இட்டு தீபங்களை ஏற்றுவார்கள். முதல் வாயிலின் கோபுர அடியின் மேற்பகுதியில் அலங்கார வளைவில் அமைக்கப்பெற்றிருக்கும் மாடத்தில் அமைந்து விளங்கும் அன்னையின் வல–இடப் பகுதிகளில் தீபப் பானைகளை வைத்து வழிபடுவார்கள். அன்றிரவு கோயிலின் எதிரே வளர்ந்து நிற்கும் ஆலமரத்தின் அருகில் வைத்துச் சுடலை கொளுத்தும் பழக்கமும் காணப்படுகிறது.

## 8. மாசி கடைசி வெள்ளி

ஆண்டுதோறும் மாசி மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று, அக்கம்பக்கத்துக் கிராமங்களில் வாழ்ந்துவரும் ஆதிதிராவிடர் சமூகத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து சாலியகாத்தானுக்கு வழிபாடுகள் நடத்துகின்றனர். இரவு பத்து மணியளவில் ஏகௌரியம்மன் கோயில் வாசலுக்கு வெளியே பச்சரிசிப் பொங்கலிட்டு, ஆடு, கோழி பலியிட்டு வழிபாடுகள் செய்கின்றனர். கோயில் பூசாரி ஆடு, கோழி பலியிடும் செயல்பாடுகளில் பங்கேற்கிறார். இதற்காக அவருக்குத் தட்சணைகள் வழங்கப்பெறுகின்றன. உயிர்ப்பலி நடைபெறும் வேளையில் அம்மன் கோயில் மகாமண்டபக் கதவை மூடி விடுவார்கள். அம்மன் சைவத் தெய்வமாகக் கருதப்படுவதாலும் உயிர்ப் பலிகளை அம்மன் ஏற்பதில்லை என்பதாலும் சன்னிதி வாயில் மூடும் வழக்கம் காணப்படுகிறது. பின்னர் அவ்வினத்தவர்களை ஒருங்கிணைத்து வழிபாடுகள் நிகழ்த்தும் நாட்டாமை கொண்டு வரும் அர்ச்சனைப் பொருட்களைப் பெற்றுப் பூசாரி முதல் ஆராதனை நிகழ்த்துவார். நாட்டாமைக்கு மரியாதை செய்யும் நிலையில் இச்செயல் நிகழ்கிறது. நாட்டாமைக்குப் பிரசாதம் வழங்கிய பின்னர் தொடர்ந்து அவ்வின மக்களின் அர்ச்சனையும் ஆராதனை வழிபாடுகளும் அம்மனுக்கு நடைபெறும். பலியிட்ட ஆடு, கோழிகளை வீட்டிற்கு எடுத்துச் சென்று சமைத்துண்ணும் வழக்கத்தை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

விழாக் காலங்கள் இல்லாமல் பொதுவான நாட்களிலும் அனைத்துச் சமூகத்தைச் சார்ந்த மக்களும் சாலியகாத்தானுக்கு ஆடு, கோழி பலியிட்டு வழிபடும் மரபு காணப்படுகிறது. கோயிலுக்கு வெளியே ஆடு, கோழி பலியிட்டு சமைத்து சாலிய காத்தான், மதுரை வீரன், கருப்புசாமி, ஏகாம்பரர் ஆகிய நான்கு தெய்வங்களுக்கும் படையலிட்டு வழிபடுகிறார்கள். இவ்வழிபாட்டுப் பொருட்களில் மதுபானங்கள் இடம்பெறுவதும் உண்டு. உயிர்ப்பலி மற்றும் படையல் வழிபாடுகள் நடைபெறும்போது அன்னை ஏகௌரி சன்னிதி வாயிலை அடைத்து விடுவார்கள். பின்னர் கோயில்இரண்டாம் திருச்சுற்றில் அமைந்துள்ள உணவு உண்ணும் கூடத்தில் அமர்ந்து அனைவரும் உண்டு மகிழ்கின்றனர். கோயிலில் தெய்வங்களுக்குப் படையலிட்டு வழிபட்ட அசைவ உணவு வகைகளை வீட்டிற்கு எடுத்துச் செல்வதில்லை.

அசைவ உணவு உண்டவர்கள் அம்மன் கோயில் மகா மண்டபத்தின் உள்சென்று வழிபட அனுமதி மறுக்கப்படுகின்றது. மக்கள் அம்மனைச் சுத்த தெய்வமாகக் கருதுகின்றனர்.

**நம்பிக்கைகள்**

அ. ஏகௌரியம்மன் கோயில் உட்பகுதியில், இரண்டாம் திருச்சுற்றில், வலப்புறம் பெரிய வேப்பமரம் ஒன்றுள்ளது. இம்மரத்தையும் மக்கள் தெய்வமாகக் கருதி வழிபடுகிறார்கள். இம்மரத்தில் குழந்தை இல்லாதவர்கள் குழந்தைப்பேறு வேண்டி சிறியளவிலான மரத் தொட்டில்களைக் கொண்டு வந்து கட்டுகிறார்கள். சில பெண்கள் அணிந்துவரும் புடவையின் முந்தானைப் பகுதியில் இருந்து சிறியளவில் கிழித்தெடுக்கும் புடவைத் துணியில் கோயிலிலிருந்து எடுக்கும் சிறிய கல்லை வைத்துக் கட்டி வேப்பமரத்தில் கட்டி வைக்கிறார்கள். தொட்டிலில் குழந்தை தூங்குவதன் குறியீடாகக் கருதி இச்செயல் மக்களால் செய்யப்பெறுகிறது. இவ்வாறு செய்து இறைவியை வழிபட்டால் குழந்தை பிறக்கும் என்றும் மக்கள் நம்புகிறார்கள்.

ஆ. இந்த வேப்பமரத்தில் வளையல்கள் மற்றும் மஞ்சள் கட்டிய தாலிக் கயிற்றைக் கட்டினால் திருமணம் நடைபெறாத பெண்களுக்குத் திருமணம் நடைபெறும் என்ற நம்பிக்கையும் பக்தர்களிடையே காணப்பெறுகிறது.

இ. வாழ்க்கையில் நடக்க விரும்பும் நல்நிகழ்வுகளை ஒரு துண்டுச்சீட்டில் எழுதி, அச்சீட்டை மடித்து நூலால் கோயில் வேப்பமரத்தில் கட்டி வைத்தால் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையும் இறைநேசர்களிடம் காணப்படுகிறது.

ஈ. நெடுங்காலமாகவே 'பிராது கட்டும் வழக்கம்' இக்கோயிலில் இருந்து வருகிறது. மக்களுக்கு ஏதாவது பிரச்சனைகள் முடிவுக்கு வர வேண்டும் என்றால் அல்லது வாழ்க்கையில் நற்செயல்கள் நிகழ வேண்டுமென்றால் அம்மனிடம் எடுத்துக்கூறி, அச்செய்தியை ஒரு துண்டுச்சீட்டில் எழுதி மடித்துப் பூசகரிடம் அளிக்கிறார்கள். அச்சீட்டைப் பூசகரும் அம்பாள் கையில் நூலினால் கட்டி வைக்கிறார். பிரச்சனைகள் முடிவுக்கு வந்ததும் அல்லது நல்லது நடந்ததும் உரியவர்கள் கோயிலுக்கு வருகை தந்து அன்னையை வழிபட்டு பூசகரிடம் செய்திகளைக் கூற, அவர் உரியவர்களுக்குரிய துண்டுச் சீட்டைக் கண்டெடுத்து, அதை அம்மனுக்கு ஆராதனை செய்த கற்பூர நெருப்பில் இட்டு எரித்து விடுகிறார். இத்தகைய பிராது கட்டும் வழக்கம் இன்றும் இக்கோயிலில் காணப்படுகிறது.

உ. குழந்தைச் செல்வம் இல்லாத தம்பதியர்கள் ஏகௌரியம்மன் கோயிலுக்கு வந்து அம்பாளிடம் முறையிடுகிறார்கள். அம்மன் ஆராதனை முடிந்ததும் பூசகர், குங்குமத்துடன் அன்னைக்கு அளித்து வழிபட்ட எலுமிச்சம் பழம் ஒன்றையும் அத்தம்பதிகளுக்குப் பிரசாதமாக வழங்குகிறார். இந்த எலுமிச்சம் பழத்தை முழுவதுமாகக் கோயில் வளாகத்தின் உள் அமர்ந்து குழந்தைப்பேறு கிட்டாத பெண் உண்ணவேண்டும். இவ்வாறு செய்தால் குழந்தை இல்லாதவர்களுக்குக் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை அப்பகுதி மக்களிடையே காணப்படுகிறது.

ஊ. வேதங்கள் நான்கு, அம்மனின் திருக்கரங்கள் எட்டு. எனவே, அம்மனை வழிபடும்போது நான்கு முறை அல்லது எட்டுமுறை திருச்சுற்றில் சுற்றிவந்து வழிபட்டால் நற்பலன்கள் கிட்டும். அவ்வாறு சுற்றி வருகையில் மனதில் எதை நினைத்து வழிபடுகிறோமோ அச்செயல் விரைவில் நடந்தேறும் என்னும் நம்பிக்கையும் இறையன்பர்களிடம் காணக் கிடைக்கின்றது.

எ. அம்மன் கோயில் முகப்பு வாயில் சுவர்ப் பகுதியில் இரண்டு பல்லி சிற்பங்கள் காணப்பெறுகின்றன. ஒன்று மேல் நோக்கி ஏறுவது போன்றும், மற்றொன்று கீழ்நோக்கி இறங்குவது போன்றும் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. அம்மனை வழிபட்டு வருகையில் வாழ்க்கையில் நல்ல நிகழ்ச்சிகள் ஏதேனும் நடக்க வேண்டும் என மனதில் நினைத்துக் கொண்டு இப்பகுதியில் நிற்கும்போது உயிருள்ள பல்லிகள் எழுப்பும் ஒலி ஏதாவது கேட்டால் அதை நல்ல சகுனமாக மக்கள் கருதுகின்றனர். அம்மன் உத்தரவு அளித்துவிட்டதாக நினைக்கின்றனர். மனதில் எண்ணியது உறுதியாக வாழ்வில் நடைபெறும் என்று மக்கள் நம்புகின்றனர்.

## வேண்டுதல்கள்

அ. ஏகௌரியம்மன் கோயில் அமைந்திருக்கும் பகுதியைச் சுற்றிலும் சிறிது தொலைவில் கிராமங்கள் பலவுள்ளன. அப்பகுதிகளில் வேளாண்மையே மக்களின் மூலமான தொழிலாகக் காணப்படுகிறது. இத்தொழிலில் கிட்டும் வருமானத்தைக் கொண்டே அவர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். வேளாண்மையே அவர்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கிறது. எனவே, வேளாண்மையில் நல்ல பலன் கிட்டவேண்டும் என்று அம்மனை வேண்டுகின்றனர். நல்ல மகசூல் கிடைத்தால் மாவிளக்குப் போடுவதாக வேண்டுதல்களை முன்வைக்கின்றனர். அறுவடை முடிந்து நல்ல இலாபம் கிடைத்தால் அன்னைக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

ஆ. நிலக்கடலை பயிரிட்டவர்கள் கடலை மாவில் மாவிளக்குப் போடுகிறார்கள். கடலைப் பருப்பை வறுத்து உரலில் இட்டு இடித்து மாவாக்கி, அதனுடன் வெல்லத்தைக் கலந்து பிசைந்து மாவு உருண்டையாக்குகின்றனர். அதன் நடுவே குழி போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதில் பசு நெய் ஊற்றி, நூல் திரியிட்டு விளக்கேற்றி அம்மன் முன் படைத்து, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்குடன் மலர் மாலைகளும் அளித்து அம்மனை வழிபடுகின்றனர்.

இ. எள் பயிரிட்டவர்கள், நல்லவிளைச்சல் கண்டிருந்தால் எள்ளினாலான மாவிளக்குப் போடுகிறார்கள். எள்ளை வறுத்து இடித்து மாவாக்கி, வெல்லம் கலந்து பிசைந்து, அதில்குழி போன்ற வடிவைத்

தோற்றுவித்து, பசுநெய் ஊற்றி, நூல் திரியிட்டு விளக்கேற்றி அம்மன் முன் வைப்பார்கள். தேங்காய், பழம், வெற்றிலை பாக்குடன், மலர் மாலைகளையும் அம்பாளுக்கு அளித்து வணங்கி மகிழ்வார்கள்.

ஈ. நஞ்சை நிலங்களில் நெற்பயிரிட்டு இலாபம் ஈட்டியவர்கள் பச்சரிசி மாவுடன் வெல்லம் கலந்து, அதில் குழி ஏற்படுத்தி பசு நெய் ஊற்றி, நூல் திரியிட்டு அம்மன் முன் வைத்து வணங்கி மகிழ்வார்கள். தேங்காய், பழம், மலர் மாலைகள், எலுமிச்சம் பழம் மாலைகள் ஆகியவற்றை அன்னைக்கு அளித்து வேண்டுதலை நிறைவேற்றுவார்கள்.

மேற்குறிப்பிட்ட வழிபாடுகள் ஆடிமாதம் அத்தனை வெள்ளிக் கிழமைகளிலும் நடைபெறும். ஆடி மாதம் கடைசி வெள்ளியன்று பால்குடம் எடுத்து தீமிதித்து வேண்டுதல்களை நிறைவேற்றும் வழிபாடு ஏகௌரியம்மன் கோயிலில் நடைபெறுகிறது.

மக்கள் பல்வேறு வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டு ஆடு, மாடு, கோழி முதலான உயிரினங்களையும் அம்மனுக்குக் காணிக்கையாக்குகின்றனர்.

## நிர்வாகம்

தமிழக அரசின் இந்துசமய அறநிலையத்துறை 1974ஆம் ஆண்டு முதல் ஏகௌரியம்மன் கோயிலை நிர்வகித்து வருகிறது. இக்கோயில் தக்காராக ப.முத்தையா அவர்கள் பொறுப்பேற்றுச் செயலாற்றுகிறார். செயல் அலுவலராக டி.கோவிந்தராஜு என்பவரும், எழுத்தராக எஸ்.பாலாஜி என்பவரும் பணியாற்றி வருகின்றனர்.

கோயில் பூசகராக பொ.கேசவன் என்பவர் பணியாற்றி வருகிறார். தலைமுறை தலைமுறையாக இவர் குடும்பத்தைச் சார்ந்தவர்களே கோயில் பூசைகளைச் செய்துவருகின்றனர். யாதவர் சமூகத்தைச் சார்ந்தவர்களே அன்னையின் பூசகராகப் பணியாற்ற வேண்டும் என்னும் மரபு கோயிலில் பேணப்படுகிறது. காவல்துறையில் காவலராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற ச.குணசேகரன் என்பவர் கோயில் காவலராகப் பணியாற்றி வருகிறார்.

இக்கோயில் உண்டியலின் மூலம் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய் கோயிலுக்கு வருமானம் கிட்டுகிறது. ஆடு, மாடு, கோழி போன்ற

காணிக்கைப் பொருட்களை ஏலம் விடுவதன் மூலம் ஆண்டுக்கு 25,000 ரூபாய் கிட்டும். மேலும் வழிபாட்டுக் கட்டணங்கள் வழியாகவும், வருமானங்கள் வருகின்றன. இந்தக் கோயிலுக்கென்று தனியாகச் சொத்துகள் எதுவும் இல்லை.

கட்டளை அர்ச்சனைத் திட்டத்திற்கு 240 ரூபாயும், நித்ய ஆராதனைக் கட்டளை திட்டத்தில் சேர விரும்புவோரிடம் 3000 ரூபாயும் அர்ச்சனைச் சீட்டுக் கட்டணமாக 2 ரூபாயும் பெறப்படுகின்றன.

கோயில் திருப்பணிக்குழுவினர் மக்களிடம் பணம் வசூலித்து மூன்று இலட்சம் ரூபாய் செலவில் ஏகௌளியம்மன் கோயிலுக்கு 31.03.2002 அன்று குடமுழுக்கு விழாவைச் சிறப்பாக நடத்தியுள்ளனர்.

ஏகௌளியம்மன் உற்சவர் வடிவம் பாதுகாப்பு வசதிக்காக வல்லம் மாரியம்மன் கோயிலில் வைக்கப்பெற்றுள்ளது.

## மேல்நிலையாக்கம்

நாட்டுப்புறத் தெய்வமாகவும் தமிழர்கள் வழிபாட்டு மரபுகளையும் கொண்டிருந்த வல்லத்துக் காளியானவள் ஏகௌளியம்மனாகக் கால ஓட்டத்தில் பெயர் மாற்றம் பெற்றதோடு வழிபாட்டு முறைகளிலும் மேல்நிலையாக்க முயற்சிகள் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பெற்று வருவதைக் கோயிலில் காணமுடிகிறது.

அ. கோயில் மகாமண்டப வாயிலில் ‘வல்லத்து மாகாளி’ என்ற பெயரே முதலில் எழுதப்பெற்றுள்ளது. இப்பெயருக்குச் சற்றுப் பின்னால் தற்காலத்தில் ‘ஏகௌளியம்மன்’ என்னும் பெயரும் எழுதி வைக்கப் பெற்றுள்ளது. கல்வெட்டிலும் காத்தவராய சுவாமி கதைப்பாடலிலும் அம்மன் பெயர் ‘காளி’ என்றே குறிக்கப் பெற்றுள்ளன.

ஆ. அம்மன் தோற்றம் குறித்த வாய்மொழிக் கதையில், அன்னை குறப் பெண்ணுக்கு மருத்துவச்சியாக வந்து குழந்தைப்பேறு பார்த்ததாகவும், இதனால் அவர்களின் வழிபடு தெய்வமாகியது என்ற செய்தியும் சுட்டப் பெற்றுள்ளன. அம்மன் பெயரும் புகழும் அடைந்த பின்னால் தஞ்சாசுரன் புராணக்கதை புனையப்பெற்றுள்ளது. வாய்மொழிக் கதை வழக்கொழிக்கப்பெற்று, சக்தியின் அவதாரமாகிய ஏகௌளியம்மன் புராணக்கதை மக்களிடம் பரப்பப் பெற்று வருகிறது.

இ. கோயிலமைப்பும் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகப்பு மண்டபங்களோடு காணப்பெறுகிறது. அம்மன் கருவறை விமானத்தோடமைந்த வடிவாக்கமாகவுள்ளது. இரண்டாவது வாயிற் கோபுரமும் பெருந்தெய்வக் கட்டடக் கோயில் கோபுர அமைப்புகளைப் பெற்றுத் திகழ்கிறது. ஆயின் குறவர்கள் அம்மனைத் தெய்வமாக வைத்து வழிபட்ட இடமாகக் கோயில் திருச்சுற்று மதிலில் அமைக்கப் பெற்ற சிறிய பீடப்பகுதி அமைந்து விளங்குகிறது.

ஈ. சாலியகாத்தான் என்னும் காத்தவராயன் அருகில் அமர்ந்திருக்கும் ஐந்து தேவியர்களும் பஞ்சபூத சக்திகள் என்னும் கருத்துப் பரப்புதலோடு அம்மன் பீடத்தின் இருபுறமும் அமைந்துள்ள பாம்பு வடிவங்கள் இராகு, கேது வடிவங்கள் என்னும் கருத்தாக்கமும் தோற்றுவிக்கப்பெற்று மக்களிடையே பரப்பப்பெறுகின்றன. சிவன், முருகன், விநாயகர், ஆதிசங்கரர் சிற்ப வடிவங்களும் ஆலயத்தினுள் அமைக்கப் பெற்றுள்ளன.

உ.கோயிலுக்கு வெளியே வீதியில்தான் உயிர்ப்பலிகள் நடைபெறுகின்றன. உயிர்ப் பலியிடுவதை அம்மன் பார்க்கக்கூடாது என்பதால் அவ்வேளைகளில் அம்மன் நேரெதிரே அமைந்திருக்கும் மகாமண்டபக் கதவை மூடிவிடுகிறார்கள். சாலியகாத்தான், மதுரை வீரன், கருப்புசாமி, ஏகாம்பரர், சன்னிதிகளிலேயே அசைவப் படையல்கள் போடப்படுகின்றன. அம்மன் அசைவப் படையல் ஏற்பதில்லை. ‘அசைவ உணவுகள் சாப்பிட்டவர்கள் கோயிலினுள் வரக்கூடாது’ என்றவாறு கோயில் மகாமண்டப வாயில் இடப்புறச் சுவரில் எழுதி வைக்கப் பெற்றுள்ளது.

எ. அம்மன் பிராமணர்களால் வழிபடப்பெற்ற தெய்வம் என்றவாறும் கருத்து பரப்பப்படுகிறது. காத்தவராயன் பறையர் சாதியைச் சார்ந்தவன். ஆரியமாலை பார்ப்பனக் குலப் பெண். ஆரியமாலையை விரும்பிய குற்றத்திற்காகக் காத்தவராயன் கழுவேற்றிக் கொல்லப் பட்டான். காத்தவராயனைக் கழுவேற்றுவதற்கான வேங்கை மரத்தை வல்லத்துக் காளி அளித்ததாகக் காத்தவராயன் கதைப்பாடலில் பதிவு உள்ளது. இதனால் அம்மன் ஆரியச் சார்புடைய தெய்வமாகவும் பிராமணர்கள் வழிபட்ட தெய்வமாகவும் கோயிலுக்கு வழிபட வந்தோர் சிலர் கருத்துத் தெரிவித்தனர். எனவே உயிர்ப்பலிகள் தடையும்

அசைவப் படையல் தடையும் அம்மனுக்கு உள்ளதாகச் செய்திகள் கூறப்படுகின்றன.

ஏ. ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமியை ஒட்டி நடைபெறும் மகாசண்டி ஹோமப் பூசைகளுக்காக வேதியர்கள் வரவழைக்கப்படுகின்றனர். வடமொழியில் மந்திரங்கள் முழங்க யாக பூசைகளும் ஆராதனை வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

ஐ. வேதங்கள் நான்கு என்பதால் ஏகௌரியம்மனை நான்கு முறை சுற்றி வலம் வந்து வணங்கவேண்டும் என்றும், அவ்வாறு வழிபட்டால்தான் அம்மன் அருள் கிட்டும் என்றவாறும் செய்திகள் பரப்பப்பெறுகின்றன.

ஒ. குறவர்கள் ஒன்றன் மேல் ஒன்றாக ஏழு பானைகளை அடுக்கி வைத்துப் பொங்கலிட்டு அம்மனை வழிபட்ட வழிபாட்டின் நினைவாக, ஆடி–தை அமாவாசை நாட்களில் ஏழு பானைகளை வரிசையாக வைத்துப் பொங்கலிட்டு அம்மனை வழிபடும் வழக்கம் ஏழு கன்னிமார் வழிபாட்டோடு தொடர்புபடுத்தப்படுகிறது.

'ஏகௌரியம்மன் வழிபாடு' என்னும் பொருண்மையிலமைந்த இப்பகுதியில் அம்மன் எழுந்தருளியிருக்கும் கோயிலமைப்பு, அம்மன் சுதைசிற்ப வடிவமைதி, காலம், கட்டடக்கலை, சிற்பங்கள், வழிபாடுகள்– தீமிதி வழிபாடு, நம்பிக்கைகள், சமஸ்கிருதநெறிப்படுகை முதலான கருத்துக்கள் விளக்கமாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

## 2. துரோபதையம்மன் வழிபாடு

தஞ்சை மாவட்டத்திலும் அருகமைந்துள்ள மாவட்டங்களிலும் மாரியம்மன், காளியம்மன், துரோபதையம்மன் போன்ற நாட்டுப்புறத் தெய்வங்களுக்குத் தீமிதி வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவ்வழிபாட்டை ஆண்டுதோறும் திருவிழாவாக மக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். இவ்வகையில் நீடாமங்கலம் துரோபதையம்மன் கோயிலிலும் ஆண்டுதோறும் தீமிதித் திருவிழா நடைபெற்று வருகிறது.

**ஊரமைப்பு**

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டத்தைச் சார்ந்த ஊராக நீடாமங்கலம் அமைந்துள்ளது. தஞ்சாவூரில் இருந்து திருவாரூர் செல்லும் சாலையில் முப்பத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் நீடாமங்கலம் அமைப்புற்றுள்ளது.

நீரட்டுமங்கலம் என்பதே இவ்வூரின் பழைய பெயர். இவ்வூரை அடுத்து 'கோயில் வெண்ணி' என்றழைக்கப்படும் பெரும் கிராமம் உள்ளது. இவ்வூரே சங்க இலக்கியங்களில் கூறப்படும் 'வெண்ணிப் பறந்தலை' என்னும் புகழ்பெற்ற ஊராகும். இவ்வூரே இளமையில் தன் பகைவர்களைக் கரிகாற்சோழன் போரிட்டு வென்ற இடமாகும். இக்கோயில் வெண்ணியில்–வெண்ணிப்பறந்தலையில் போர் முடித்த கரிகாலன் அருகில் இருந்த நீடாமங்கலத்தில் வெற்றிக்குக் காரணமாய் இருந்த தன் வாளுக்கு–வாள்மங்கலம்–அதாவது நீராட்டு மங்கலம் செய்வித்தமையாலேயே இவ்வூருக்கு நீராட்டு மங்கலம் என்ற பெயர் வந்தது என்றும், அதுவே நாளடைவில் நீடாமங்கலம் ஆயிற்று என்றும் மெய்.சந்திரசேகரன் எழுதி வெளியிட்டுள்ள 'தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்கள்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார் (1983:24).

இவ்வூரின் மற்றொரு பெயர் 'யமுனாம்பாள்புரம்' என்பதாகும். ராஜ பிரதாபசிங் என்பவனால் அவன் மனைவியருள் ஒருத்தியான யமுனாம்பாள் என்பவளுக்காக இவ்வூரில் அரண்மனையும் சத்திரமும் கட்டப்பெற்றமையின், அம்மாதரசியின் பெயரால் யமுனாம்பாள்புரம் என்றழைக்கப்பெற்றது. கி.பி. 1761 இல் ராஜபிரதாபசிங் என்பவரால் கட்டப்பட்டதாகக் கூறப்படும் யமுனாம்பாள் சத்திரம் இன்றும் இவ்வூரில் காணப்படுகிறது (சந்திரசேகரன், மெய்., 1983:25).

நீடாமங்கலம் ஊரில் பாமணி ஆறு, கோரையாறு, வெண்ணாறு முதலான ஆறுகள் ஓடுவதால் வேளாண்மைத் தொழில் செழித்தோங்குகிறது. உரைச் சுற்றிலும் வயல்பகுதிகளும் தோப்புப் பகுதிகளும் பசுமையாகக் காணப்படுகின்றன.

நீடாமங்கலத்தில் கீழராஜவீதி, மேலராஜவீதி, வடக்குராஜவீதி, தெற்கு ராஜ வீதி, மோதிலால் தெரு போன்ற பல தெருக்கள் காணப்படுகின்றன. ஊரில் பழமையான சந்தனராமசாமி கோயிலும் அமைந்துள்ளது. அகமுடையார், வெள்ளாளர், நாடார், செட்டியார், கள்ளர், உடையார், கோனார், வண்ணார், அம்பலக்காரர், வேளார், ஆதி திராவிடர்கள் முதலான சமூகத்தைச் சார்ந்தமக்கள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். அனைத்துச் சமூகத்தைச் சார்ந்த மக்களும் மன வேறுபாடுகளின்றி ஒற்றுமை உணர்வோடு வாழ்ந்து வருகின்றனர். இவ்வூரில் வாழ்ந்து வரும் மக்களில் பெரும்பாலோர் வேளாண்மைத் தொழிலைச் சார்ந்தே வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

## அம்மன் தோற்றக் கதை

மக்களிடத்தில் மகாபாரதக் கதை தோற்றுவித்த பாதிப்பாலேயே துரோபதையம்மன் வழிபாடு தோற்றம் பெற்றுள்ளது. இவ்வம்மன் வழிபாடு நீடாமங்கலத்தில் தோற்றம் பெற்றமைக்கான வாய்மொழிக் கதை மக்களிடத்தில் வழக்கில் உள்ளது.

முற்காலத்தில் – பத்து தலைமுறைக்கு முன்னர் – நீடாமங்கலம் கோரையாற்றில் வெள்ளப்பெருக்குத் தோன்றியுள்ளது. ஊர்மக்கள் பலரும் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடுவதைக் கண்டு அஞ்சி, ஊருக்குள் வெள்ளம் புகுந்து அழிவுகளை ஏற்படுத்திவிடக்கூடாதே என்றெண்ணி, மனம் கலங்கி, வருத்தத்தோடு தெய்வங்களை நெஞ்சில் நினைத்து

வேண்டுதல்களோடு வணங்கியுள்ளனர். ஓரிரு நாள்களில் வெள்ளப் பெருக்குக் குறைந்துவிட்டது. வெள்ளப்பெருக்கில் ஒரு பெட்டி கோரையாற்றின் மண் படித்துறையில் கரையொதுங்கிக் கிடந்துள்ளது. அவ்வழியாக வந்த மக்கள் கரையொதுங்கியுள்ள பெட்டியைக் கண்டெடுத்துள்ளனர். அதைத் திறந்து பார்த்தபோது உள்ளே ஒரே வெள்ளெருக்கு மரத்தால் செய்யப்பெற்ற, மூன்றடி உயரத்திலான துரோபதையம்மன் சிற்பம் இருப்பதை அனைவரும் கண்டார்கள். அம்மன் எந்த இடத்தில் கண்டெடுக்கப்பெற்றதோ அதே இடத்தில் அம்மனை வைத்து வழிபடத் தொடங்கியுள்ளனர். அம்மன் கண்டெடுக்கப்பெற்ற இடமாகக் கருதப்பெறும் கோரையாற்றின் கீழ் கரையிலேயே துரோபதையம்மனுக்குக் கோயில் எழுப்பப் பெற்றுள்ளது. வெள்ளெருக்கு மரத்திலான துரோபதையம்மன் சிற்ப வடிவமே, இன்றும் இக்கோயிலில் உற்சவர் வடிவமாகக் காட்சிதருகிறது. இவ்வுற்சவர் வடிவத்தையே விழாக் காலத்தில் வீதியுலாவிற்கு எடுத்துச் செல்வார்கள் என்று கோயில் பூசகர் கோ.வெங்கடாசலம் ஆய்வாளரிடம் தெரிவித்தார் (வெங்கடாசலம், கோ., 02.05.2009).

துரோபதையம்மனைக் கோரையாற்றின் கீழ் கரையில் வைத்து மக்கள் வழிபடத் தொடங்கிய பின்னர், ஆற்றில் எவ்வளவு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடினாலும் ஊருக்குள் வந்து அழிவை ஏற்படுத்துவதில்லை என்றும், அம்மன் ஆற்றின் கரையில் நின்று வெள்ளத்தால் ஊருக்குள் தீங்குகள் நேராதவாறு காத்து வருகிறாள் என்றும் மக்கள் நம்புகின்றனர்.

## கோயிலமைப்பு

துரோபதையம்மன் கோயில் தொடக்க காலத்தில் கீற்றுக் கொட்டகையாக இருந்துள்ளது. பின்பு ஓட்டுக் கட்டடமாக மாற்றம் பெற்றுள்ளது. பிற்காலத்தில் கருவறை விமானத்துடன் கட்டடக்கோயிலாக மாற்றம் பெற்றுள்ளது.

முற்காலத்தில் வெள்ளெருக்கு மரத்தாலான அம்மன் வடிவமே வழிபாட்டில் இருந்துள்ளது. இவ்வடிவத்திற்கு அபிசேகங்கள் நிகழ்த்த முடியாது என்பதால் இக்காலத்தில் கற்சிற்பத்திலான அம்மன் வடிவத்தைக் கருவறையில் நிலைநிறுத்தியுள்ளனர். கோயில் மகாமண்டபத்தில் வெள்ளெருக்கு அம்மன் வடிவம் இடம்பெற்றுள்ளது.

துரோபதையம்மன் கோயில் கருவறையில் பத்மபீடத்தில் நின்றவாறு கற்சிற்ப அமைதியாக காட்சியளிக்கின்றாள். கருவறை முன்பாக அர்த்த மண்டபமும் மகாமண்டபமும் அமைக்கப்பெற்றுள்ளன. அர்த்தமண்டபத்தில் அம்மன் வாயில் இருபுறமும் துவாரபாலகிகள் வடிவம் அமைக்கப்பட்டுள்ளன.

மகாமண்டபத்தின் இடப்பகுதியில் துரோபதை சபை அலங்காரம் இடம் பெற்றுள்ளது. இப்பகுதியில் வெள்ளெருக்கு மரத்தாலான அம்மன் வடிவம் இடம் பெற்றுள்ளது. அம்மன் இடப்புறம் கருடாழ்வார் மேல் கிருட்டிணன் அமர்ந்திருப்பது போன்ற மரச்சிற்பம் காணப்படுகின்றது. அம்மன் வலப்பகுதியில் அர்ச்சுனன், வீமன், நகுலன், சகாதேவன் ஆகியோர் மரச்சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. குதிரையில் மேல் அமர்ந்த நிலையில் முத்தால் ராவுத்தர் சிற்ப வடிவமும் இடம்பெற்றுள்ளது. அம்மனுக்குப் பாதுகாவல் தெய்வமாக அகோர வீரபத்திரர் கருதப்படுகிறார். இவருடைய ஆயுதத்தின் பெயர் 'சூலகுந்தம்' எனப்படும். இவ்வாய்தமும் அம்மன் அருகில் இடம்பெற்றுள்ளது. நல்லத்தி மரத்தால் செய்யப்பெற்ற இச்சிற்பங்கள் அமைக்கப் பெற்றுள்ள இடம் துரோபதை சபை என்றழைக்கப்படுகிறது. மகா மண்டபத்தின் வலப்பகுதியில் துரோபதை, அர்ச்சுனன், கிருட்டிணன் ஆகிய மூன்று ஐம்பொன் சிலை வடிவங்களும் இடம்பெற்றுள்ளன. மகாமண்டபத்தின் முன்பாக வழிபாட்டு மண்டபம் அழகு செய்கிறது.

ஒரு ஏக்கர் பரப்பளவில் ஒரு திருச்சுற்றுடன் விளங்கும் இக்கோயில் திருச்சுற்றுப்பகுதியில் அம்மன் சன்னிதிக்கு நேரெதிரே பாரத மேடையும், வீரபத்திரர் சிலையும், பலிபீடமும், கொடிமரமும் இடம்பெற்றுள்ளன. திருச்சுற்றின் இடப்பகுதியில் நல்லரவான் தலையின் சுதை வடிவமும், வலம்புரி விநாயகருக்கான சிற்றாலயமும் காட்சியளிக்கின்றன. தென்மேற்கு மூலையில் கமலக்கண்ணியும் வடமேற்கு மூலையில் அகோர வீரபத்திரர் சுதை வடிவங்களும் இடம் பெற்றுள்ளன. திருச்சுற்றின் வலப்பகுதியில் குதிரை மேலமர்ந்த முத்தால் ராவுத்தர் வடிவமும், அருகில் மதுரைவீரன் சுதை சிற்பமும் அமைக்கப் பெற்றுள்ளன.

கிழக்குத் திசை நோக்கியுள்ள கோயில் வாயிலின் இடப்புறம் மடப்பள்ளியும் வலப்புறம் நந்தவனமும் அமைக்கப்பெற்றுள்ளன. வழிபாட்டு

மண்டபத்தின் மேல்பகுதியில் நடுவில் எழுப்பப்பெற்றுள்ள கூடப்பகுதியில் துரோபதை, அர்ச்சுனன், தருமர், வீமன், நகுலன், சகாதேவன், கிருட்டிணன் ஆகிய சுதை சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வல–இடப் பக்கங்களில் விநாயகர், மாரியம்மன் வடிவங்களோடு பூத வடிவங்களும் காட்சிப்படுத்தப்பெற்றுள்ளன. கோயில் வாயில் அலங்கார வளைவின் மேல் பகுதியில் நடுவில் துரோபதை அம்மன் வடிவமும் இருபுறங்களிலும் கருடாழ்வார் இறக்கைகளோடு அமர்ந்திருக்கும் சிற்ப வடிவங்களும் பொருத்தப்பட்டு எழிலோடு திகழும் வகையில் அலங்கார வளைவு கட்டப்பெற்றுள்ளது.

## வெள்ளெருக்கு அம்மன் வடிவம்

இக்கோயிலில் துரோபதையம்மனின் தொன்மையான வடிவமாக வெள்ளெருக்கு அம்மன் வடிவமே கருதப்படுகிறது. அம்மன் வடிவம் நின்ற திருக்கோலத்தில் வடிவமைக்கப் பெற்றுள்ளது. அம்மன் வலக்கை வெள்ளியாலான கிளியைப் பற்றியுள்ள நிலையிலும் இடக்கை தொங்கவிடப்பெற்றுள்ள நிலையிலும் உள்ளன. கைகளில் வளைகளும், இடுப்பில் ஒட்டியாணமும், கழுத்தில் திருமாங்கல்யமும், காதில் கல்பதித்த தோடும், மூக்கில் மூக்குத்தியும், தலையில் கிரீடமும் அணிசெய்கின்றன. தலைமுடி கொண்டையிட்ட நிலையில் காட்சியளிக்கிறது. சிகப்பு வண்ணத்திலான பட்டாடை அணிந்து, வணங்க வரும் மக்களுக்கு அருளாசி வழங்கி வருகிறாள் துரோபதையம்மன். வெள்ளெருக்கு மரத்தில் வடிவமைக்கப்பெற்று வண்ணமேற்றிய நிலையில் மூன்றடி உயரத்தில் தோற்றமளிக்கும் அம்மன் சிற்பத்தின் இரு பக்கங்களிலும் வெண்சாமரம் வீசும் நிலையில் பதுமைகள் அமைக்கப்பெற்றுள்ளன.

விழாக் காலத்தில் திருவீதியுலாவின்போது வெள்ளெருக்கு அம்மன் வடிவமே முதலில் செல்கிறது. இதனைத் தொடர்ந்த நிலையில் அர்ச்சுனன், துரோபதை, கிருட்டிணன் ஐம்பொன் வடிவங்கள் உற்சவர்களாக வீதியுலாச் செல்கின்றன.

## கருவறை விமானம்

கோயில் கருவறை விமானம் பெருந்தெய்வக் கோயில் கருவறை கற்றளிகளைப் போன்ற சாயலைப் பெற்றுத் திகழ்கிறது. கருவறையின் அடிப்பகுதி அலங்காரமில்லாத உபபீடத்தையும், அதிட்டானத்தையும்

பெற்றுத் திகழ்கிறது. ஸ்தம்பத்தின் சுவர்ப்பகுதியில் அரைத் தூண்கள் காட்சியளிக்கின்றன. கர்ணகூடுப் பகுதியில் கால், கிரீவம், சிகரம், ஸ்தூபி உறுப்புகள் எழிலூட்டுகின்றன. ஏகதள விமானமாகக் காட்சியளிக்கும் விமானத்தின் முதல் தளத்தின் மேல் நான்கு மூலைகளிலும் ஆண், பெண் பூத கணங்கள் கையில் கத்தியுடன் அமர்ந்துள்ள நிலையிலான சிற்ப வடிவங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஸ்தூபிப் பகுதியில் செப்புக் கலசம் கவினுறக் காட்சியளிக்கிறது.

## சிற்பங்கள்

### அ. கமலக்கண்ணி

கமலக்கண்ணியம்மன் நின்ற திருக்கோலத்தில் சிற்பமாக வடிவமைக்கப் பெற்றுள்ளாள். அம்மனின் நான்கு கைகளில் வலப்பகுதி மேல் கை வெங்காயத் தாமரை மலரைப் பற்றியுள்ளது. கீழ்க் கையில் கத்தி காணப்படுகிறது. இடப்பகுதி மேல் கையில் வெங்காயத் தாமரையும் கீழ்க்கையில் திரிசூலமும் காணப்படுகின்றன. கைகள், கழுத்து, காதுகள், மூக்குப் பகுதிகளில் அணிகலன்கள் அணிந்த நிலையில் அம்மன் சுதை சிற்பம் வடிவமைக்கப்பெற்றுள்ளது. நெற்றித் திலகத்துடன் தலையில் கிரீடம் அணிந்து, பச்சைப் பட்டுடுத்த நிலையில் அம்மன் அருள் பாலிக்கின்றாள்.

### ஆ. அகோர வீரபத்திரர்

துரோபதையம்மன் கோயில் வடமேற்கு மூலையில் அமைக்கப் பெற்றிருக்கும் அகோர வீரபத்திரர் தெய்வம் மூலமானதாகக் கருதப்படுகிறது. இத்தெய்வத்தை அம்மன் காவல் தெய்வமாக மக்கள் நம்புகின்றனர். எட்டுக் கைகளுடன் அகோர வீரபத்திரன் நின்றநிலையில் வடிவப்படுத்தப் பெற்றுள்ளார். வலப்பகுதியில் அமைந்துள்ள நான்கு கைகளில் கீழிருந்து மேலாக முறையே தலைமுடியைப் பற்றிய நிலையில் ஒரு தலைவடிவமும், திரிசூலமும், கத்தி, வேல் போன்ற ஆயுதங்கள் காணப்படுகின்றன. இடப்பக்கக் கரங்களில் கீழிருந்து மேலாக முறையே கதையாயுதமும், கேடயம், கத்தி, வேல் போன்ற கருவிகளும் தென்படுகின்றன. கால்களில் தண்டைகளும், கைகளில் வளைகளும், கழுத்து மற்றும் காதுகளிலும் அணிகலன்கள் எழிலூட்டும் வகையில் அகோர வீரபத்திரர் சிற்ப வடிவம் தோற்றம் பெறுகிறது. மார்பில் பூணூலுடன் வயிற்றுப்பகுதி, கைகள், நெற்றியில் நீற்றுப் பட்டைகளும்

உள்ளன. இடையில் பட்டுக்கரை வேட்டியும் கழுத்தில் துண்டும் அணிவிக்கப்பெற்றுள்ளன. தலையில் கிரீடம் அழகூட்டுகிறது. பெரிய மீசையுடனும் அகன்ற கண்களுடனும் கோரைப் பற்களுடனும் பார்ப்பவர் அச்சம் கொள்ளும் நிலையில், வண்ணமேற்றப்பட்ட நிலையில் அகோரவீரபத்திரர் சிலை வடிவம் தோற்றம் பெறுகிறது.

### இ. நல்லரவான்

நல்லரவான் வடிவமாகத் தலைப்பகுதி மட்டும் சிலை வடிவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கழுத்தணியோடு காதுகளில் குண்டலங்களும் தோன்றுகின்றன. தலையில் கிரீடம் சூட்டப்பெற்ற நிலையில் நெற்றியில் நாமம் தோற்றமளிக்கிறது. விரிந்த கண்கள் அகன்ற மீசையோடு கோரைப்பற்களைப் பெற்றுத் திகழ்கிறார் நல்லரவான். அரவானையே மக்கள் நல்லரவான் என்று குறிப்பிடுகிறார்கள்.

### ஈ. மதுரைவீரன்

துரோபதையம்மன் கோயில் திருச்சுற்றின் வலப்பகுதியில் முத்தால் ராவுத்தர் சிலை வடிவையடுத்து மதுரைவீரன் சிற்பம் அமைப்புற்றுள்ளது. நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். கால்களில் தண்டைகளும் கைகளில் வளைகளும் காணப்படுகின்றன. கழுத்தணிகளோடு காட்சியளிக்கும் மதுரை வீரனின் வலக்கை அரிவாளைப் பற்றியிருக்கிறது. இடக்கை கதையாயுதத்தைத் தரையில் ஊன்றிய நிலையிலுள்ளது. நெற்றிப்பட்டையோடு தலை மயிரைக் கொண்டையிட்ட நிலையிலுள்ளார். இடுப்பில் வேட்டி அணிவிக்கப் பெற்றுள்ளதோடு தலையிலும் துண்டு கட்டப்பெற்றுள்ளது. பெரிய கண்களோடு பரந்த மீசையோடு மதுரைவீரன் சுதை சிற்பம் வடிவமைக்கப்பெற்று வண்ணமூட்டப் பெற்ற நிலையில் தோற்றமளிக்கிறது.

## 2. முத்தால் ராவுத்தர்

ராவுத் என்ற சொல் குதிரையைக் குறிக்கும் ரபீது என்ற அரேபியச் சொல்லின் திரிபாகும். குதிரை வாணிபத்தில் ஈடுபட்ட இசுலாமியர்கள் ராவுத்தர் என்று அழைக்கப்பட்டுள்ளனர் (சிவசிப்பிரமணியன், ஆ., 2007:25).

முத்தால் ராவுத்தர் துரோபதை படையின் காவலர் என்ற கருத்து மக்களிடம் மனப்பதிவாகியுள்ளது. எனவே இவரையும் வழிபடு கடவுளாகக் கருதி சிலை சமைத்து வழிபாடு நிகழ்த்தி வருகின்றனர்.

வெள்ளைக் குதிரைமேல் அமர்ந்து குதிரையைச் செலுத்தும் வகையில் முத்தால் ராவுத்தர் சிலை வடிவம் ஆக்கப்பெற்றுள்ளது. இடக்கை குதிரையின் சங்கிலியைப் பற்றியிருக்கிறது. வலக்கை சாட்டையால் குதிரையை அடித்தியக்கும் வகையில் ஓங்கிய நிலையிலுள்ளது. காலில் செருப்பும், இடுப்பில் வேட்டியும், தோளில் துண்டும் காட்சியளிக்கின்றன. கைவளைகளுடன் கழுத்தணிகளோடு தாடி, மீசையுடன் தலையில் குல்லா அணிந்த நிலையில் முத்தால் ராவுத்தர் தோற்றமளிக்கிறார். வண்ணமேற்றப்பட்ட சுதைவடிவத்தில் முத்தால் ராவுத்தர் காட்சிப்படுத்தப் பெற்றுள்ளார்.

## வழிபாடுகள்

துரோபதையம்மனுக்கு நாள் வழிபாடு, வார வழிபாடு, மாத வழிபாடும் மண்டகப்படி உபயதாரர்கள் முயற்சியில் நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் சித்திரை மாதம் தீமிதி விழாவும் ஐப்பசி மாதம் கேதார கௌரி நோன்பும் சிறந்த முறையில் நடைபெறுகின்றன. ஊரிலுள்ள அனைத்து மக்களும் வழிபடும் தெய்வமாகத் துரோபதை அம்மன் அமைந்துள்ளது.

### அ. நாள் வழிபாடு

ஒவ்வொரு நாளும் காலை, மாலையில் ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரை அம்மன் கோயில் வழிபாட்டிற்காகத்திறந்து வைக்கப்படுகிறது. நாள்தோறும் மாலை ஆறு மணிக்கு அம்மன் மூலவருக்கு அபிசேகங்கள் நடைபெறும். எண்ணெய், பால் போன்றவற்றால் அபிசேகம் செய்து, மலர் மாலைகள் அணிவித்து, சர்க்கரைப் பொங்கல் படைத்து அர்ச்சனையும் ஆராதனையும் நடைபெறுகின்றன. நாள்தோறும் அம்மனுக்கு ஒரு கால பூசை நடந்து வருகிறது.

### ஆ. வார வழிபாடு

வாரம்தோறும் திங்கள் கிழமை மாலை ஆறு மணிக்கு அம்மனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவ்வழிபாடு

உபயதாரர்கள் செலவில் நடைபெறுகிறது. அன்று அம்மனுக்கு எண்ணெய், திரவியப் பொடி, இளநீர், தேன், பஞ்சாமிர்தம், பால், நார்த்தம் பழம் போன்ற பொருள்களால் அபிசேகங்கள் நடைபெறும். பின்னர் அம்பாளுக்குப் புத்தாடைகள் அணிவித்து மலர்களால் அலங்காரம் செய்வர். சுண்டல், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை போன்ற உணவு வகைகளைப் படையல் செய்வர். தொடர்ந்து அர்ச்சனையுடன் தீபாராதனைகளும் நடைபெறும்.

## இ. மாத வழிபாடு

கோயில் வளாகத்தில் அமைந்து விளங்கும் விநாயகருக்கு மாதம்தோறும் சங்கரகட சதுர்த்தி வழிபாடு நடைபெறுகிறது. அன்று விநாயகருக்கு எண்ணெய், திரவியப்பொடி, பால் போன்றவற்றால் அபிசேகம் செய்து, மலர்கள் அணிவித்து, கொழுக்கட்டை படையல் செய்து ஆராதனைகள் நிகழ்கின்றன.

## ஈ. ஆண்டு விழாக்கள்

ஆண்டுதோறும் சித்திரை மாதம் பத்தொன்பது நாட்கள் தீமிதி விழாவும் ஐப்பசி மாத அமாவாசையன்று கேதார கௌரி நோன்பும் உபயதாரர்கள் முயற்சியில் நேர்த்தியாக நிகழ்த்தப்படுகின்றன.

சித்திரை மாதம் வருடப் பிறப்பன்று காலை பத்து மணிக்கு அம்மனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தும் முறை காணப்படுகிறது. அன்று அம்மனுக்கு அபிசேகங்கள் செய்து புதுப்பட்டு அணிவித்து மலர் அலங்காரம் செய்து படையலுணவுகளுடன் ஆராதனைகள் நடைபெறுகின்றன.

### 1. தீமிதி வழிபாடு

தீமிதி வழிபாட்டைத் தமிழகம் மட்டுமல்லாது தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் இந்தியாவின் சில பகுதிகளிலும் தென்னிந்தியர்கள்–குறிப்பாகத் தமிழர்கள்–குடியேறியுள்ள பிற நாடுகளிலும்கூட தீமிதி நடைபெறுவதை அறிய முடிகிறது. சான்றாக பிஜி நாட்டில் 1928 முதல் மகாதேவி மாரியம்மன் கோயிலில் ஆகஸ்ட் மாதத்தில் வியாழன் தொடங்கி திங்கள் வரை 12 நாட்கள் தீமிதித் திருவிழா நடைபெறுவதாகத் தெரிகிறது. துரோபதையம்மன் தீமிதி நடைபெறும் இடத்தில் நிறுத்தி வைக்கப்படுகிறது. பிஜியில் மட்டும் 40 கோயில்களில் தீமிதி நடைபெறுகிறது (இராமநாதன், ஆறு., 2006:90).

நீடாமங்கலம் துரோபதையம்மன் கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் தீமிதி விழா நடைபெறுகிறது. சித்திரை மாதம் முதல் திங்கள் கிழமையன்று விழாவிற்காகக் கோயிலில் கொடியேற்றம் நடைபெறும். அன்று தொடங்கிப் பத்தொன்பது நாட்கள் விழாநடைபெறும். பதினைந்தாம் நாள் தீமிதி விழா நடைபெறுகிறது. பின்னர் நான்கு நாட்களும் விழா நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெறுகின்றன.

பாஞ்சால மன்னன் துருபதன், தன்னை வெற்றிகண்ட மாவீரன் அர்ச்சுனனுக்குப் பெண் கொடுத்து மருமகனாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் துரோணரிடமிருந்து பிரிக்க வேண்டும் என்றும் யாகங்கள் செய்து இறைவனிடம் வேண்டுகின்றான். அதன்படி யாகத்தீயில் இருந்து திரௌபதி தோன்றுகிறாள். அவன் விருப்பப்படியே அர்ச்சுனனுக்கு மணம் செய்து கொடுக்கிறான். அவள் ஐந்து பேருக்கும் மனைவியாக, ஒவ்வொரு ஆண்டும் ஒருவரிடம் மனைவியாக விளங்குகிறாள். ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் செல்லும்போது தீ வளர்த்து அதில் தன்னைத் தூய்மையாக்கிய பின்தான் சென்று சேர்கிறாள். பாண்டவர்கள் நாடு துறந்து வடக்கு நோக்கிச் செல்லும்போது முதலில் திரௌபதி தீ உண்டாக்கி அதில் புகுந்து மறைந்து விடுகின்றாள். தீயிலே தோன்றித் தீயாக விளங்கித் தீயுள் மறைந்த திரௌபதியை மக்கள் தீக்கடவுளாக வழிபடுகின்றனர் (சுந்தரேசன், சி., 1999:208).

## அ. கொடியேற்றம்

கொடியேற்றத்தன்று காலை ஆறு மணியளவில் ஆற்றுக்குச் சென்று சக்திக் கரகம் எடுக்கும் நிகழ்ச்சி நடைபெறும். புதிய மண் தோண்டியில் நீர்நிறைத்து, எலுமிச்சம் பழம், நாணயங்கள் போட்டு மேலாக வேப்பிலைக் கொத்துகளைச் செருகி தேங்காய் வைத்து, திருநீற்றுப் பட்டைகள் போட்டு மலர் மாலைகளால் கும்பத்தை அலங்கரித்திருப்பார்கள். கோயில் பூசகர் மஞ்சள் வண்ண வேட்டி கட்டிக் கொண்டு, திருநீறணிந்து, கழுத்தில் மலர் மாலைகள் போட்டுக் கொண்டு மேள தாளத்துடன் சக்திக் கும்பத்தைக் கோயிலுக்கு எடுத்து வருவார். இக்கும்பம் துரோபதையம்மன் கோயில் கருவறையினுள், கீழே நெல் பரப்பி அதன் மேல் வைக்கப்பெறும். இதனுடன் முளைப்பாலிகைகளும் வைக்கப்படுகின்றன.

நீடாமங்கலத்திலுள்ள நான்கு இராஜ வீதிகளிலும் அனுமன் கொடி வலம் வந்த பின்னர் கோயிலிலுள்ள அனைத்துத் தெய்வங்களுக்கும் காப்பு

கட்டப்பெறும். விரலிமஞ்சளை மஞ்சள் நூலில் கட்டி இறை வடிவங்களின் கைகளில் கட்டுவார்கள். ஆண் தெய்வங்களுக்கு வலக்கையிலும், பெண் தெய்வங்களுக்கு இடக்கையிலும் கட்டுவார்கள். பின்னர் துரோபதையம்மன் மூலவருக்கு அபிசேகங்களும் அலங்கார ஆராதனைகளும் நடைபெறும். தொடர்ந்து காலை ஒன்பதரை மணியளவில் அம்மன் சன்னிதியில் அமைக்கப்பெற்றுள்ள கொடி மரத்தில் அனுமன் கொடியை ஏற்றுவார்கள்.

அன்று மாலை உபயதாரர் மண்டகப்படி ஆராதனைகள் நடைபெறும். அன்றிலிருந்து பதினைந்து நாட்கள் இரவு ஒன்பது மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரை, அம்மன் சன்னிதியில் வடிவமைக்கப்பெற்றுள்ள பாரத மேடையில் அமர்ந்து மகாபாரதக்கதை படிப்பார்கள். 27.04.2009 அன்று தொடங்கி நடைபெற்ற தீமிதி விழாவில் சீர்காழியைச் சார்ந்த த.பட்டாபிராமன் பாகவதர் பாரதக் கதை படித்துள்ளார். இவர் குழுவைச் சார்ந்த எஸ்.கலைச்செல்வன் பின்பாட்டுப் பாட, எம்.மாரிமுத்து என்பவர் பம்பை வாசித்துள்ளார்.

கொடியேற்றம் முடிந்ததும் கோயிலுக்கு முன்பாகப் போடப் பெற்றிருக்கும் பந்தலின் கீழ், பாரதமேடை எதிராக வெள்ளெருக்குத் துரோபதை அம்மனை அலங்கரித்து அமர்த்துவார்கள். பதினாறாவது நாள் இரவு கொடி இறக்கிய பின்புதான் மறுபடியும் அம்மன் கோயிலினுள் எடுத்து வைக்கப்பெறும். தீமிதி விழாவிற்காகக் கொடி ஏற்றப்பட்டதிலிருந்து பதினைந்தாம் நாள் தீமிதி நிகழ்ச்சி முடியும் வரை ஒவ்வொரு நாளும் மாலை ஆறு மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரை உபயதாரர்கள் மண்டகப்படி வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும்.

நீடாமங்கலம் எல்.திருவேங்கடம் செட்டியார் வகையறாக்கள், கோரையார் படுகை, தட்டித்தெருவாசிகள், நீடாமங்கலம் யாதவர்சங்கம், பெரியார் தெரு அம்பாள் பக்தர்கள், நீடாமங்கலம் அகமுடையார்கள், நீடாமங்கலம் வெள்ளாளர் சங்கம், ஐயப்ப சேவா சங்கம் என்றவாறு அமைப்பு முறையிலும் தனிப்பட்டவர்கள் செலவிலும் உபயதாரர்கள் மண்டகப்படி வழிபாடுகள் நிகழ்கின்றன.

### ஆ. திருக்கல்யாணம்

தீமிதி திருவிழாவில் ஐந்தாம் நாள் திருக்கல்யாண நிகழ்ச்சி

நடைபெறும். அன்று மாலை ஆறு மணியளவில் அர்ச்சுனனுக்கும் துரோபதைக்கும் திருக்கல்யாணம் நடைபெறும். கோயில் திருச்சுற்றில் அம்மன் சன்னிதி முன்பாகப் போடப் பெற்றிருக்கும் பந்தலில் வைத்து மண நிகழ்ச்சிகள் நடைபெறும். மணமேடை அமைத்து, அரசாணிப்பானை வைத்து, ஒதியன் போத்து ஊன்றி, வேதியர் யாகம் வளர்த்து மணமகனுக்குக் கங்கணம் கட்டி மணவிழா நிகழ்ந்தேறும். இறுதியில் மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டுவார். வாணிய செட்டியார் சமூகத்தைச் சார்ந்தவர்கள் மணமக்களுக்குப் பட்டம் கட்டி உரிமை கொண்டாடுகிறார்கள். உண்மையில் திருமண நிகழ்வுகள் எவ்வாறு நடக்குமோ அவ்வாறே அர்ச்சுனன்–துரோபதை திருக்கல்யாணம் நடைபெறுகிறது. திருக்கல்யாணம் நடைபெறும்போது மணமேடை அருகே வீமன், சகாதேவன், நகுலன், கிருட்டிணன், முத்தால் ராவுத்தர், காளி சிரசு போன்ற சிற்ப வடிவங்களை வைத்திருப்பார்கள். நல்லத்தி மரத்தால் செய்யப்பெற்ற இச்சிற்பங்கள் வண்ணமேற்றப் பெற்ற நிலையிலுள்ளன. திருமணம் முடிவுற்றதும் விழாக்காண வருகை தந்திருக்கும் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பெறும். திருக்கல்யாண மண்டகப்படி உபயதாரர்களாக நீடாமங்கலத்தைச் சார்ந்த எல்.திருவேங்கடம் செட்டியார் வகையறாக்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

**இ. பாஞ்சாலிசபதம்**

பாரதியார் 1912–இல் கீதையை மொழிபெயர்த்தார். மேலும் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற காவியங்கள் எழுதப்பெற்றன. பாஞ்சாலி சபதம் வெளியிடப்பெற்றதும் இந்த ஆண்டில்தான்.

பாஞ்சாலி சபதம் இடும் காட்சியை ஓவியமாகத் தீட்டியுள்ளார் பாரதி.

**தேவி திரௌபதி சொல்வாள்;–ஓம்**
**தேவிபராசக்தி ஆணை யுரைத்தேன்;**
**பாவி துச்சாதனன் செந்நீர்–அந்தப்**
**பாழ்த்துரியோதனன் ஆக்கை இரத்தம்,**
**மேவி இரண்டுங் கலந்து–குழல்**
**மீதினிற் பூசி நறுநெய் குளித்தே**

சீவிக் குழல் முடிப்பேன் யான்—இது
செய்யுமுன்னே முடியே னென்றுரைத்தாள்
ஓ மென்று றுரைத்தனர்தேவர்—ஓம்
ஓ மென்று சொல்லி உறுமிற்று வானம்
பூமியதிர்ச்சி உண்டாச்சு—விண்ணைப்
பூரிப்படுத்திய தாஞ்சுழற் காற்று
சாமி தருமன் புவிக்கே—என்று
சாட்சி யுரைத்தன பூதங்களைந்தும்!
நாமுங் கதையை முடித்தோம்—இந்த
நானில முற்றும் நல் லின்பத்தில் வாழ்க! (பா.ச. 307–308)

என்றவாறு பாஞ்சாலி சபதத்தை முடிப்பார் பாரதி.

துரோபதையின் சூளுரையைக் கேட்டுப் பூமி அதிர்ந்தது. விண்ணகம் மாசுபடும் அளவிற்குச் சுழற்காற்று அடித்தது என்றவாறு விவரித்துள்ளார் பாரதி.

நீடாமங்கலம் துரோபதையம்மன் கோயிலில் நடைபெறும் பத்தொன்பது நாள் தீமிதி விழாவில் ஒன்பதாவது நாள் பாஞ்சாலி சபதம் ஏற்கும் விழாவாகக் கொண்டாடப்பெறுகிறது. அன்றிரவு பத்து மணியளவில் கோயில் முகப்புப் பகுதியில் அமர்த்தப்பெற்றிருக்கும் வெள்ளெருக்குத் துரோபதையம்மனின் அலங்காரத்தைக் கலைப்பார்கள். அம்மனுக்கு அணிவிக்கப் பெற்றிருக்கும் பட்டாடையைக் கலைத்து விடுவார்கள். ஒப்பனைக்காகத் தேவியின் தலையில் பொருத்தியிருக்கும் சவுரியைக் கலைத்துவிட்டு, கூந்தலை அவிழ்த்துவிட்டுள்ள தோற்றத்தைக் கொணர்வர். அம்மன் கோலம் கலைந்த நிலையில் காட்சியளிப்பாள். அன்றிலிருந்து மீண்டும் அம்மன் கூந்தல் முடியும் நிகழ்ச்சி நடைபெறுவது வரையிலும் அம்பாளுக்குப் பூ அலங்காரங்கள் செய்வதில்லை. தீமிதி விழாவன்று காலையில் கூந்தல் முடியும் நிகழ்வு நடைபெறும்.

### ஈ. அரவான் படுகளம்

அர்ச்சுனனுக்கும் நாககன்னிக்கும் பிறந்தவனாக அரவான் கருதப்படுகிறான். போரில் வெற்றிபெற வேண்டும் என்னும் வேண்டுதலின் அடிப்படையில் பத்ரகாளி தெய்வத்திற்கு நரபலி கொடுத்து வழிபட்ட கருத்தில் அரவான் களப்பலி நடைபெறுகிறது. பாரதப்போர் தொடங்கும்

முன் அரவானைப் பலியிட்டு இறை வணக்கம் செய்துள்ளனர். இக்கதைக் கூற்றுப்படி அரவான் படுகள வழிபாடு நிகழ்கிறது. துரோபதையின் மீது அதிக அன்பும் மரியாதையும் கொண்டவன் அரவான் என்பதால் அன்னையின் வழிபாட்டைக் காண்பதற்காகத் துரோபதை வழிபாடு நிகழிடங்களில் அரவான் தலை அமர்த்தப்பெறுகிறது.

பதிமூன்றாம் நாள் இரவு அரவானைப் பலி கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. கோயில் முகப்புப் பகுதியில் பாரத மேடை வலப்பகுதியில் அரவான் வடிவம் அமைக்கப்படுகிறது. பதினைந்து அடி நீளம், ஐந்தடி அகலம், இரண்டடி உயரத்தில் அரவான் வடிவத்தை மண்ணால் தோற்றுவிப்பார்கள். அரவான் தலைப்பகுதி அம்மன் சன்னிதி பக்கம் வருமாறு தெற்கு–வடக்காக அரவான் நிமிர்ந்த நிலையில் படுத்திருப்பது போன்று மண் வடிவத்தை உருவாக்குவார்கள். வலது கையில் கத்தியும் இடது கையில் கேடயமும் அமைக்கப் படுகின்றன. கோயிலில் அமைக்கப் பெற்றிருக்கும் அரவான் தலைப்பகுதியைப் போன்றே மண் சிற்பத்திலும் அரவான் தலை அமைக்கப்படுகிறது. கோரப் பற்கள், காதுகளில் குண்டலங்கள், நெற்றியில் நாமம், தலையில் கிரீடத்துடன் நல்லரவான் தலை வடிவாக்கப்படுகிறது.

இரவில் காளி புறப்பாடு நடைபெறும். இறையன்பர் எஸ்.சண்முகம் என்பவர் காளி வேடம் புனைகின்ற வழக்கம் காணப்படுகிறது. இவர் அகமுடையார் இனத்தைச் சார்ந்தவர். ஆண்டுதோறும் இவரே காளிவேடம் அணிகிறார். இதன் காரணமாக இவர் பெயர் காளி சண்முகம் என்றாகிவிட்டது. ஊரில் யாரிடமாவது இவரைப் பற்றி விசாரித்தால் காளி சண்முகம் என்றவாறு இவர் பெயரைக் கூறி அடையாளப்படுத்துகிறார்கள்.

கோயிலில் பெரிய அளவில் மரத்தால் செய்யப்பெற்ற காளியின் சிரசு வடிவம் உள்ளது. பார்ப்பதற்கு அச்சம் தரும் வகையில் அமைந்த காளி சிரசு சிற்ப வடிவத்தில் சிவப்பு வண்ணம் பூசி வைத்துள்ளார்கள். காளி வேடமிடுபவர் நோன்புகள் மேற்கொண்டு தூய்மையான உடலோடும் உள்ளத்தோடும் வேடம் இடுகிறார். தன் தலையில் காளி சிரசைப் பொருத்திக் கொண்டு, வலப்பக்கம் இடப்பக்கமுமாக எட்டு மரக் கைகளையும் பொருத்திக் கொள்கிறார். மரத்தாலமைந்த இக்கைகளில் காளி தேவியின் ஆயுதங்கள் காணப்படுகின்றன. வேடமணிபவர் தன் வலது கையில் தீப்பந்தத்தையும் இடது கையில் சூலத்தையும்

வைத்திருப்பார். இடுப்பில் கருப்பு வண்ணத்திலான பாவாடை அணிந்து கொள்வார். வேடமிட்டவர் பின்னால் ஒருசிலர் நின்று வேடமிட்டவர் தாங்கி நிற்கும் காளி சிரசையும் எட்டு கைகளையும் கீழே விழுந்துவிடாமல் பாதுகாப்பாகப் பிடித்துக் கொள்கின்றனர்.

நீடாமங்கலத்திலுள்ள நான்கு இராஜவீதிகளிலும் காளி வீதியுலா வருவது வழக்கம். அப்போது மணியோசையுடன் சங்கொலியும் ஒலிக்க, ஒற்றைத் தப்பு இசை முழக்கத்தோடு காளி ஊர்வலம் நடைபெறும். உலா முடிந்து காலை மூன்று மணியளவில் காளிதேவி கோயிலுக்கு வந்ததும் அரவான் பலி நடைபெறும். மண்ணால் வடிவமைக்கப்பெற்றுள்ள அரவான் கழுத்துக்கு நேராக ஒரு சேவல் கோழியின் கழுத்தை அறுத்துப் பலியிடுவார்கள். கோயில் பணியாளர் கே.தர்மராஜ் என்பவர் மண்ணால் வடிவமைக்கப்பட்டுள்ள அரவானின் தலையைக் கத்தியால் அறுத்த பின்னர் சேவல் கோழியின் கழுத்தை அறுத்துப் பலியிடுவார். அவ்வேளை பாரதம் படிப்பவர் துரோபதை வேடமிட்டு மாரடித்து, ஒப்பாரி வைத்தழும் நாடகம் நடைபெறும். கோழியின் கழுத்தில் இருந்து பாயும் இரத்தத்தை ஒரு சட்டியில் பிடித்து, அதில் பச்சரிசிச் சோறு கலந்து இராஜ வீதிகளின் நான்கு மூலைகளிலும் காவு கொடுத்து வருவர். கோயிலில் அன்னையை வேண்டிக் கொண்டு, இரத்தம் கலந்த பச்சரிசிச் சோற்றைக் குழந்தை இல்லாதவர்கள் வாங்கி சாப்பிட்டால் குழந்தை பிறக்கும் என்னும் நம்பிக்கை இப்பகுதி மக்களிடையே காணப்படுகிறது.

### உ. தீமிதித்தல்

துரோபதையம்மன் கோயில் தீமிதி விழாவில் தீமிதி வழிபாட்டில் பங்கு பெறுபவர்கள் வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் பங்கேற்கிறார்கள். குடும்பத்தில் அமைதியான சூழல் தோன்றவும், குடும்ப உறுப்பினர்கள் யாருக்காவது உடல்நலம் குன்றியிருந்தால் அவர் நலம்பெறவும், குழந்தைப் பேறின்றி மனவேதனையோடு வாழ்வை நகர்த்துபவர்கள் குழந்தைப் பேற்றிற்காகவும், திருமணம் நடைபெறாமல் வயதாகிக் கொண்டிருப்பவர்கள் தடைகள் நீங்கி நல்லமுறையில் திருமணம் நடைபெறவேண்டும் என்னும் வேண்டுதலோடும், இவை போன்ற பல்வேறு நிலைகளிலமைந்த நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் வகையில் இறை உணர்வாளர்கள் தீமிதி வழிபாட்டில் கலந்துகொண்டு அம்மன் அருளைப் பெறுகின்றனர்.

துரோபதையம்மன் கோயில் பத்தொன்பது நாள் தீமிதி விழாவில் பதினைந்தாம் நாள் மூலமான விழாவாகத் தீமிதி வழிபாடு நடைபெறுகிறது. விழா நடத்தும் அறங்காவலர் குழுவினரே தீமிதி வழிபாட்டிற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர்.

விழாவிற்காக மக்களிடம் வசூலிக்கும் நன்கொடைப் பணம் மற்றும் உபயதாரர்கள் அளிக்கும் பணத்தில் தீமிதி வழிபாட்டிற்குரிய விறகுகளை வாங்குகின்றனர். இவ்வழிபாட்டிற்கு நாட்டுக் கருவை மரத்தை மட்டுமே பயன்படுத்துகின்றனர். தோரயமாக மூன்று டன் வரை விறகுகள் தேவைப் படுகின்றன.

முற்காலத்தில் கோயில் முன்புள்ள வீதிகளிலேயே தீமிதித்தல் நிகழ்ச்சி நடந்துள்ளது. இப்பகுதியில் தற்காலத்தில் மக்கள் நெருக்கடி கூடுதலாக இருப்பதாலும், தீமிதி வழிபாட்டிற்கு அதிக எண்ணிக்கையில் இறையன்பர்கள் வருவதாலும் நெருக்கடியைச் சமாளிப்பதற்காகத் தீமிதி வழிபாட்டிடத்தை மாற்றியுள்ளனர்.

கோயில் முன்பாக, வலப்பகுதியில் சற்றுத் தொலைவில் அமைந்திருக்கும் யமுனாம்பாள் சத்திரத் திடலில் வைத்து, இக்காலத்தில் தீமிதி வழிபாடு நடைபெறுகிறது. இத்திடலில் வடக்குத்திசையில் இருந்து தெற்குத் திசை நோக்கி ஓடும் வகையில் நெருப்புக்குழி அமைக்கப் பெறுகிறது. தீக்குழி பதினாறு அடி நீளம், ஐந்து அடி அகலம், ஒரு அடி ஆழத்துடன் வடிவமைக்கப்படுகிறது. இக்குழி முன்பாக மூன்று அடி நீளம், மூன்று அடி அகலம், ஒரு அடி ஆழத்தில் பால் குழியும் அமைக்கப்படும். தீமிதியன்று பாலும் நீரும் கலந்து பால்குழியில் ஊற்றி வைப்பார்கள்.

தீமிதி நாளன்று காலை ஒன்பது மணியளவில் துரோபதையம்மன் கூந்தல் முடியும் நிகழ்ச்சி நடைபெறும். பாரதம் படிப்பவர் துரோபதையம்மன் வேடமிட்டு கூந்தலை முடிவது போன்று நடிப்பார். பின்னர் வெள்ளெருக்குத் துரோபதையம்மன் தலையில் ஒப்பனைக்காக வைத்துள்ள சவுரி, அவிழ்த்து விடப்பட்ட நிலையில் இருப்பதைக் கோயில் பூசகர் முடிந்து வைப்பார்.

தொடர்ந்து கரகம் எடுக்கும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும். அனைவரும் கோரையாற்றுக்குச் செல்வார்கள். அங்குத் தீர்த்தம் வழங்கப்படும். நீரில் மஞ்சள் பொடியைக் கலந்த மஞ்சள் நீரைத் தீர்த்தமாகக் கோயில் பூசகர் அனைவருக்கும் வழங்குவார். பின்பு கரகத்

தோண்டியினுள் அரிசி, எலுமிச்சம் பழம், நாணயங்கள் முதலானவற்றைப் போட்டு, மேல் பகுதியில் வேப்பிலைகளைச் செருகிவைத்து அதன் மேல் தேங்காயை வைத்து மலர் அலங்காரம் செய்து எடுத்து வருவார்கள். கோயில் பூசகர் மஞ்சள் வேட்டியுடன் கழுத்து மாலைகள் அணிந்து கரகத்தை எடுத்து வருவார்.

கோயிலில் வெள்ளெருக்கு அம்மன் முன் கரகத்தை இறக்கி வைப்பார்கள். துரோபதையம்மன் கோயில் சன்னிதி மகாமண்டபத்தில் யாகம் வளர்த்து பூசைகள் நடைபெறும். வழிபாடுகள் முடிவுற்றதும் யாருக்கு அம்மன் அருள் இறங்குகிறதோ அவர் யாக குண்டத்திலிருந்து நெருப்பை அள்ளி அருகில் வைக்கப்பெற்றிருக்கும் மண் சட்டியில் வைப்பார். பின்பு கோயில் பூசகர் மண்சட்டியோடு நெருப்பை எடுத்துச் சென்று, தீமிதி குழியில் அடுக்கி வைக்கப்பெற்றிருக்கும் விறகுகளில் கொண்டு போட்டு தீமிதிக்காக விறகுகளை எரியூட்டுவார். அன்று காலை பன்னிரண்டு மணியளவில் விறகுகள் எரியூட்டப்பெறும்.

விறகுகளை எரித்து கனலாக்கும் பணிகளை நீடாமங்கலம் ஊரைச் சார்ந்த மரவேலை செய்கின்ற ஆசாரி சமூகத்தவர்கள் மேற்கொள்கின்றனர். விறகுகளை மூங்கில் கம்புகளால் புரட்டிப் போட்டு நன்கு எரியவிடுகின்றனர். பின்பு பச்சை தென்னை மட்டைகளால் எரிந்த விறகுகளை அடித்து கனலாக்குவார்கள். முறத்தால் வீசி நெருப்பில் நீறுபூக்காதவாறு கவனித்துக் கொள்வர். நீறுபூத்த நெருப்பு தீமிதிப்பவர்கள் கால்களில் கூடுதலான சூட்டைத் தோற்றுவிக்கும் என்னும் எண்ணத்தில் முறத்தினால் வீசி நீறுபூக்காதவாறு நெருப்புக் கனல்களைக் கவனித்துக் கொள்கின்றனர்.

துரோபதையம்மன் கோயில் தீமிதி விழாவில் தீமிதிக்க விரும்புபவர்கள் மூன்று நாட்களுக்கு முன்பாகவே கோயிலுக்கு வந்து விரதம் மேற்கொள்ள வேண்டும். மூன்று நாட்களும் பாய் படுக்கை இன்றி கோயிலிலேயே படுத்துறங்க வேண்டும். தாம்பத்ய உறவுகளைத் தவிர்ப்பதற்காகக் கோயிலில் வந்து தங்க வேண்டும் என்கின்றனர். விரதநாட்களில் அசைவ உணவுகளும் உண்ணக்கூடாது.

கோயில் பூசகர் விறகுகளுக்கு நெருப்பு வைத்ததும் தீ மிதிப்பதற்காகக் கோயிலில் தங்கி விரம் மேற்கொள்பவர்கள் அனைவரும் கங்கணம் கட்டிக் கொள்வார்கள். கோயிலில் அம்மன் சன்னிதியில்

கொடிமரம் அருகே அமைக்கப் பெற்றிருக்கும் பாரத மேடையில் வைத்து தீமிதிப்பவர்கள் அனைவருக்கும் கோயில் பணியாளர்கள் கங்கணம் கட்டுவார்கள். ஒரு தாம்பாளத்தில் மஞ்சள் கலந்த அரிசியையும் தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் முதலானவற்றை வைத்திருப்பார்கள். கங்கணம் கட்ட வருபவர்கள் இருபத்தொரு ரூபாய் தட்சணை வைத்துவிட்டு அரிசியோடு சேர்த்து தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழத்தை இரு கைகளாலும் எடுத்து அம்மனை வணங்குவார்கள். அச்சமயம் ஆண்களுக்கு வலது கையிலும் பெண்களுக்கு இடதுகையிலும் கோயில் பணியாளர்கள் கங்கணம் கட்டுவார்கள். விரலிமஞ்சள் கட்டப்பெற்ற மஞ்சள் நூலினையே கங்கணம் என்று குறிப்பிடுகின்றனர். தீமிதி வழிபாடு நிகழ்த்துவதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட இறையன்பர்கள் கங்கணம் கட்டிக் கொள்கின்றனர். மாலை ஐந்து மணியளவில் தீமிதிக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

தீ மிதிப்பதற்குப் புறப்பட்டுச் செல்வதற்காக அனைவரும் கோரையாற்றுக் கரைக்குச் செல்வார்கள். அங்கிருந்து சூலகுந்தமும், தீக்கரகமும் புறப்பட்டுச் செல்லும். நீடாமங்கலத்தில் வசித்துவரும் அகமுடையார் சமூகத்தைச் சார்ந்த கே.சரபோஜி என்பவர் சூலகுந்தம் எடுத்துக் கொண்டு வரும் உரிமை உடையவராகத் திகழ்கிறார். இவரது குடும்பத்தைச் சார்ந்தவர்களே தலைமுறை தலைமுறையாகச் சூலகுந்தம் எடுக்கும் மரியாதையைப் பெற்று வருவதாகக் களப்பணியின் வாயிலாக அறிந்துகொள்ள முடிந்தது. இவர் குடும்பத்தினர் துரோபதையம்மனைக் குலதெய்வமாகக் கருதி வழிபாடுகள் நிகழ்த்தி வருகின்றனர். சூலகுந்தம் எடுக்கும் உரிமை பெற்றுள்ளதால் இவரை ‘அரசு’ என்று ஊர்மக்கள் குறிப்பிடுகிறார்கள்.

சூலகுந்தம் அகோர வீரபத்திரரின் ஆயுதமாகக் கருதப்படுகிறது. அகோர வீரபத்திரர் அம்மனின் காவலாளரராகக் கருதப்படுகிறார். அவர் அனுமதியைப் பெற்ற பின்னரே விழா நிகழ்த்த வேண்டும் என்னும் நோக்கில் தீமிதி ஊர்வலத்தில் முதலில் சூலகுந்தமும் அதனைத் தொடர்ந்து தீக்கரகமும் தீமிதிப்பவர்களும் ஊர்வலமாகச் செல்கின்றனர். பித்தளையாலான திரிசூலத்தில் கத்தியும் கேடயமும் பொருத்தப்பெற்று அதில் ஒரு சாட்டையும் தொங்கவிடப்பெற்றிருக்கும். இதைச் சூலகுந்தம் என்று குறிப்பிடுகின்றனர். இதை மூங்கில் கம்பில் வைத்துக் கட்டியிருப்பார்கள்.

அரசு மஞ்சள்வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு, சந்தனம், திருநீறு பூசிக்கொண்டு, கழுத்தில் மலர் மாலைகள் அணிந்துகொண்டு சூலகுந்தத்தை வலது கையில் வைத்துக் கொண்டு முதலில் நடந்து செல்வார்.

அரசைத் தொடர்ந்து கோயில் பூசகர் கோ.வெங்கடாசலம் தீக்கரகம் எடுத்துச் செல்வார். பித்தளைக் கரகத்தினுள் பச்சரிசி, எலுமிச்சம் பழம், நாணயங்கள் போட்டு மேல் பகுதியில் வேப்பிலை, தேங்காய் வைத்து மலர்களால் அலங்கரிக்கப்பெற்ற கரகத்தைத் 'தீக்கரகம்' என்பர். இதைத் தூக்கிக் கொண்டு பூசகர் அரசின் பின் செல்வார். அடுத்து கோயில் பணியாளர் கே.தர்மராஜ் கையில் கத்தியுடன் செல்வார்.

தீமிதிப்பதற்காக விரதம் மேற்கொண்டிருப்பவர்களில் ஆண்கள் மஞ்சள் வேட்டியும், பெண்கள் மஞ்சள் வண்ணப் புடவையும் குழந்தைகளுக்கும் மஞ்சள் வண்ண ஆடைகள் அணிவித்து அனைவரும் கழுத்தில் மலர் மாலைகள் அணிந்துகொண்டு அரசு மற்றும் பூசகர் பின்னால் ஊர்வலமாகச் செல்வார்கள். அனைவரும் எலுமிச்சம் பழம் குத்தப்பெற்ற அரளிக்குச்சைக் கைகளில் வைத்திருப்பார்கள்.


நீடாமங்கலத்திலுள்ள நான்கு இராஜ வீதிகள் வழியாக ஊர்வலம் வந்து இறுதியில் தீமிதித் திடலை வந்தடையும். வெள்ளெருக்குத் துரோபதையம்மனும், ஐம்பொன்னால் ஆக்கப்பெற்றுள்ள அர்ச்சுனன், துரோபதை, கிருட்டிணர் இறை வடிவங்களும் இறையுணர்வாளர்களின் தீமிதி வழிபாட்டை ஏற்பதற்காகத் திடலின் முன்னர் வைக்கப் பெற்றிருக்கும்.

அன்று மாலை ஐந்து மணியளவில் துரோபதையம்மன் பார்வையில் அன்பர்கள் தீக்குழி இறங்கும் நிகழ்ச்சி நடைபெறும். முதலில் சூலகுந்தம் ஏந்தி வந்த அரசு தீக்குழியில் இறங்கி தீமிதி வழிபாடு நிகழ்த்துவார். அடுத்து கோயில் பூசகர் கோ.வெங்கடாசலம் தீமிதி வழிபாடு நிகழ்த்துவார். கையில் கத்தியுடன் கே.தர்மராஜ் தீமிதிப்பார். தொடர்ந்து இறையன்பர்கள் தீமிதித்து வழிபாடு செய்வார்கள். கோயில் தீமிதி விழாவில் பாரதக்கதை வாசித்த குழு உறுப்பினர்கள் மூவரும் தீமிதி வழிபாட்டில் பங்கேற்று தீமிதி மேற்கொள்கின்றனர். தீமிதிப்போர் அனைவரும் பால்குழியில் கால் நனைத்த பின்பே கரையேறுகின்றனர்.

இரவு எட்டு மணியளவில் தீமிதித்தவர்கள் அனைவரும் துரோபதையம்மன் கோயிலுக்கு வந்து அம்மனை வழிபட்டு விரதத்தை முடித்துக் கொள்கின்றனர். அவர்கள் கைகளில் கட்டியிருக்கும் கங்கணங்களைக் கோயில் பணியாளர்கள் அகற்றுவார்கள். வெள்ளெருக்குத் துரோபதையம்மன் கோயிலுக்குத் திரும்பி வந்ததும் ஆராதனை வழிபாடுகள் நடைபெறும்.

இக்கோயிலில் 04.05.2009 அன்று நடந்து முடிந்த தீமிதி வழிபாடு முப்பத்தொன்றாவது ஆண்டில் நடைபெற்ற வழிபாடாகும். இங்கு தொன்று தொட்டு தீமிதித் திருவிழா நடைபெற்று வந்தாலும் விமரிசையாகக் கொண்டாடத் தொடங்கி முப்பத்தொரு ஆண்டுகள் முடிவுற்றுள்ளன.

இவ்வாறு மகாபாரதக்கதை அடிப்படையில் தீமிதி விழா கொண்டாடப் பெறுகிறது. பக்தவத்சலபாரதி பாரதக்கதை பற்றிக் குறிப்பிடுகையில், சிறுமரபும் பெருமரபும் அதனதன் நிலையில் இரு துருவங்களாகச் செயல்படும் போக்கும், அதே நேரத்தில் இவ்விரண்டுக்குமான ஊடாட்டமும் அசைவியக்கமும் பரஸ்பரம் காணப்படுவதாகவும் இருக்கும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகப் பாரதக்கதை அமைகிறது.




தமிழகத்தில் பாரதம் காலங்காலமாகச் செல்வாக்குடன் விளங்கி வருவதற்குக் காரணம் இது இரண்டு மரபுகளிலும் தன் நிலைப்பாட்டைக்

கொண்டிருப்பதாகும். இதற்கு அதன் நெகிழ்வுத்தன்மை ஒரு காரணமாகும். இரண்டு மரபுகளிடையே பரஸ்பரம் ஊடாடுவதாலேயே இத்தகு நெகிழ்வுத் தன்மை காணப்படுகிறது. வியாசரின் பாரதத்திலும் பெருந்தேவனார், வில்லிப்புத்தூரார் பாரதங்களிலும் தெருக்கூத்தை இயற்றும் அண்ணாவியர்கள் பாரதங்களிலும் மாறுபாடுகள் உள்ளன. இவர்கள் தங்கள் தேவைக்கேற்ப பாரதக் கதையை நெகிழ்வுப் படுத்தியுள்ளனர். இந்நெகிழ்வுகள் இரு மரபுகளின் சமூக, சமய அசைவியக்கத்தோடு பொருந்தி நிற்கின்றன என்றவாறு விளக்கியுள்ளார் (பக்தவத்சலபாரதி, 2005:385–386).

**ஊ. மஞ்சள் நீராட்டு**

பத்தொன்பது நாள் தீமிதி விழாவில் பதினாறாவது நாள் மஞ்சள் நீராட்டு விளையாட்டு நடைபெறுகிறது. அன்று வெள்ளெருக்கு அம்மன் வடிவம் வீதிகளில் உலாவரும் வழக்கம் காணப்படுகிறது. நீடாமங்கலம் பகுதியில் வாழும் அம்பலக்காரர் சமூகத்தைச் சார்ந்த மக்கள் வாகனம் தூக்குகின்ற பொறுப்பை ஏற்றுப் பணியாற்றி வருகிறார்கள். அம்மன் திருவீதியுலா நடைபெறும்போது வீடுகளில் அர்ச்சனை வழிபாடுகள் நடைபெறுகின்றன. அப்போது வாகனம் தூக்குபவர்கள், மேளம் வாசிப்பவர்கள் மீது வீடுகளில் மஞ்சள்கொடி கலந்து வைத்திருக்கும் மஞ்சள் நீரை மக்கள் ஊற்றுவார்கள். விழா முடிந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் இவ்விளையாட்டு அமைகிறது. மஞ்சள் நீரில் சுண்ணாம்பு மற்றும் வாழை மரத்தின் சாறு கலந்து நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மீது ஊற்றி மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். மஞ்சள் நீரில் சுண்ணாம்பும் வாழைச்சாறும் கலப்பதால் மஞ்சள் வண்ணம் சிவப்பாக மாறிவிடும்.

மஞ்சள் நீராட்டு அன்று இரவு பட்டாபிசேகம் நடைபெறும். துரோபதையம்மனுக்கு முடிசூட்டும் நிகழ்ச்சி நடைபெறும். விழாவிற்காகக் கோயில் முன்பாகப் போடப்பட்டுள்ள பந்தலின் கீழ் எழுந்தருளியிருக்கும் வெள்ளெருக்குத் துரோபதையம்மன் தலையில் பூசகர் பரிவட்டத்தைச் சுற்றிக் கட்டுவார். இது அம்மனுக்கு முடிசூட்டும் நிகழ்வாகக் கருதப் படுகிறது. இரவு பன்னிரண்டு மணியளவில் கொடி இறக்கும் நிகழ்ச்சி நடைபெறும். இதனைத் தொடர்ந்து விழாவை முன்னிட்டுத் தெய்வங்களுக்குக் கட்டிய காப்பு கயிற்றைப் பூசகர் அவிழ்த்து அகற்றுவார்.

பின்னர் விழாவிற்காகக் கோயிலினுள்ளிலிருந்து பந்தலுக்கு எடுத்து வரப்பெற்ற வெள்ளெருக்குத் துரோபதையம்மன் மீண்டும் கோயிலுக்குள் குடியமரும்.

கொடிமரத்தில் இருந்து அனுமன் கொடியை இறக்கியதோடு, தெய்வங்களுக்குக் கட்டிய காப்புகளை நீக்கியபின், விழாத் தொடங்குவதற்காக முதல் நாள் எடுத்த கரகம், தீமிதியன்று காலையில் எடுத்த கரகம், பிற்பகல் எடுத்த தீக்கரகம் முதலானவற்றில் இருக்கும் நீர் மற்றும் அரிசி, எலுமிச்சம் பழங்கள், நாணயங்களைக் கோரையாறு அல்லது சந்தனராமசாமி கோயில் தெப்பக் குளத்தில் உள்ள நீரில் விட்டு விடுவார்கள். விழாத் தொடக்க நாளன்று அம்மன் அருளுக்காக வைக்கப் பெற்றிருந்த முளைப்பாலிகைகளையும் நீரில் கரைத்து விடுவார்கள்.

பதினேழாம் நாள் விடையாற்றி நடைபெறும். இரவு எட்டு மணியளவில் கோயிலில் உள்ள அனைத்துத் தெய்வங்களுக்கும் அலங்கார ஆராதனைகள் நடைபெறும். உபயதாரர்கள் செலவில் நடைபெறும் இவ்வாராதனை வழிபாடுகளையும் வழிபடவந்தோர் அனைவரும் கண்டு மகிழ்ந்து பயனடைவார்கள்.

### எ. பால்குடம்

பதினெட்டாம் நாள் காலை பால்குட ஊர்வலமும் இரவில் அம்மன் ஊஞ்சல் ஆடும் சடங்குகளும் நிகழ்த்தப்பெறுகின்றன.

அன்று காலை பத்து மணியளவில் இறை வழிபாட்டினர் பால்குடம் எடுக்கும் நிகழ்ச்சி நடைபெறும். சிறிய சில்வர் அல்லது பித்தளை குடம் முழுவதும் பாலால் நிரப்பி, மேல் பகுதியில் வேப்பிலை, தேங்காய் வைத்து, குடத்திற்குத் திருநீற்றுப் பட்டைகள் இட்டு அலங்கரித்திருப்பார்கள். பால்குடம் எடுப்பவர்கள் மஞ்சள் ஆடையணிந்து, திருநீற்றுப் பட்டைகளிட்டு பால்குடத்தைத் தலையில் சுமந்தவாறு ஊர்வலமாக நீடாமங்கலம் இராஜ வீதிகளின் வழி வந்து மீண்டும் கோயிலை வந்தடைவார்கள். பின்னர் அன்பர்கள் அளிக்கும் பால்குடப் பாலால் கருவறை அம்பாளுக்கு அபிசேகம் நடைபெறும். குடத்தில் சிறிது பாலை மிச்சம் வைத்து, பிரசாதமாக அடியவர்களுக்குப் பூசகர் அளிப்பார். தேவிக்கு அபிசேகம் செய்யும் பால் தீர்த்தத் தொட்டியைச் சென்றடையும். அம்பாளுக்கு ஆராதனைகள் முடிவுற்றதும், உபயதாரர்கள் செலவில்

அனைவருக்கும் அன்னதானமாகத் தயிர்சாதமும் பச்சரிசிக் கஞ்சியும் வழங்கப்பெறுகின்றன.

இரவு ஒன்பது மணியளவில் கோயில் மகாமண்டபத்தில் போடப் பெற்றிருக்கும் ஊஞ்சலில் வெள்ளெருக்கு அம்மனை வைத்து வழிபாடுகள் நிகழ்த்துவார்கள். இரண்டு மணி நேரம் அம்மன் ஊஞ்சலில் காட்சியளிக்கும். அவ்வேளை அம்மனை வழிபட வந்திருப்போர் ஊஞ்சல் பாட்டுப் பாடி அம்மனை வணங்கி அருள்பெறுவார்கள். ஆராதனைகள் முடிந்ததும் அனைவருக்கும் அம்மன் பிரசாதம் அளிக்கப்படும் வழக்கம் உள்ளது.

### ஏ. வீரன் வழிபாடு

தீமிதி விழாவின் இறுதிநாளான பத்தொன்பதாம் நாள் நிகழ்வாக மதுரை வீரன் வழிபாடு நடைபெறுகிறது. இரவு ஏழு மணியளவில் வீரன் பூசை நடைபெறும். வீரன் பூசகர் சா.ஜோதிலிங்கம் என்பவர் பூசைகள் செய்வார். அவல், கடலை, பொரி, மது, சுருட்டு படைத்து, ஆட்டுக்கடா பலியிட்டு வழிபாடுகள் நடைபெறும். கோயில் திருச்சுற்றில் அமைந்திருக்கும் கமலக்கண்ணி மற்றும் முத்தால் ராவுத்தர் போன்ற தெய்வங்களுக்கும் சேவல் கோழியைப் பலியிட்டு வணங்குவார்கள். வீரனுக்கு அசைவப் படையலிட்டு வணங்கிய பின்னர் அனைவருக்கும் கறிக் குழம்புடன் உணவளிக்கப்படுகிறது.

ஆடி மாதம் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் மாலை ஆறு மணியளவில் அம்மனுக்கு அபிசேக, அலங்கார, ஆராதனைகள் நிகழும். உபயதாரர்கள் மண்டகப்படியாக நடைபெறும் இவ்வழிபாட்டில் தேவிக்குப் படைக்கப்படும் உணவுப்பொருட்கள் வழிபாட்டிற்கு வருகை தந்திருக்கும் இறையன்பர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும் ஊரிலுள்ள மக்கள் பெருந்திரளாக வந்து அம்மனை வணங்கி அருள்பெறும் வழக்கமுள்ளது.

ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தியன்று கோயிலில் வீற்றிருக்கும் விநாயகர் பெருமானுக்குக் காலை பத்து மணியளவில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன.

ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் நவராத்திரி விழாவன்று மாலை ஆறு மணிக்கு அம்மன் வழிபாடு விமரிசையாகக் கொண்டாடப்பெறுகிறது.

## 2. கேதார கௌரி நோன்பு

ஐப்பசி மாதம் தீபாவளியன்று வரும் அமாவாசையில் கேதார கௌரி நோன்பு கொண்டாடப்பெறுகிறது. நீடாமங்கலம் பகுதியில் வாழும் அகமுடையார், வெள்ளாளர், செட்டியார், நாயக்கர் சமூகத்தைச் சார்ந்த பெண்கள் துரோபதையம்மன் கோயிலுக்கு வருகைபுரிந்து நோன்பு மேற்கொள்கின்றனர்.

நோன்பு அன்று கோயிலில் உள்ள வெள்ளெருக்கு அம்பாள் முன் அலங்கரிக்கப் பெற்ற கடம் வைக்கப்பெற்றிருக்கும். அன்று காலை செம்புக் குடத்தை ஆற்றுக்கு எடுத்துச் சென்று கரகம் எடுத்து வருவர். ஆற்றுநீர் நிரப்பப் பெற்றுக் கரகமாய் எடுத்து வரப்பெறும் செம்புக்குடத்தைக் 'கடம்' என்று கூறுகின்றனர். மேல் பகுதியில் மாவிலைகள் வைத்து, அதன்மேல் தேங்காய் வைத்து, மலர்களால் அலங்கரித்திருப்பார்கள். கோயிலில் வைக்கப் பெற்றிருக்கும் கடத்தின் முன்பாகப் பித்தளையாலான அம்பாள் முகம் அமைக்கப் பெற்றிருக்கும்.

கணவன் உடல்நலத்துடன் நீண்டநாள் வாழவேண்டும், தன் கழுத்தில் மாங்கல்யம் நிலைக்க வேண்டும் என்னும் வேண்டுதல்களோடு பெண்கள் கேதார கௌரி நோன்பைக் கடைப்பிடிக்கிறார்கள். நோன்பு இருப்பவர்கள் தேவி கோயிலுக்கு அதிரசம், பூவன்பழம், காதோலை கருகுமணி, வளையல்கள், வெற்றிலை பாக்கு முதலானவற்றை இருபத்தொன்று எண்ணிக்கையில் கொண்டு வந்து அம்மனை வழிபடுவார்கள். அரளிப்பூ, ரோஜா, செம்பருத்தி, மரிக்கொழுந்து போன்றவற்றைக் கலந்து மடியில் வைத்திருப்பார்கள். இம்மலர்களின் கலவையைப் 'பத்தரை புஷ்பம்' என்று குறிப்பிடுவர். அம்மனுக்கு அர்ச்சனை நடைபெறும் போது பெண்கள் மடியில் வைத்திருக்கும் பத்தரை புஷ்பத்தில் ஒவ்வொன்றாக எடுத்து கடத்தின் மேல் போட்டு வழிபடுவார்கள். ஆராதனை முடிந்ததும், பலவண்ணப் பட்டுநூலால் தயாரிக்கப்பெற்ற நோன்புக் கயிற்றை அனைவருக்கும் அர்ச்சகர் அளிப்பார். இக்கயிற்றை வீட்டுக்குக் கொண்டு சென்று சாம்பிராணி போட்டு வணங்கிக் கையில் கட்டிக் கொள்கின்றனர். நோன்பிருப்பவர்கள் அன்று உணவு உண்ணுவதில்லை. இரவுப்பூசை முடிந்து நோன்பு முற்றுப்பெற்றதும் உணவுண்ணும் வழக்கம் காணப்படுகிறது.

கார்த்திகை மாதம் திருக்கார்த்திகையன்று கோயிலில் தீப விளக்குகள் ஏற்றப்படும். மாலை ஆறு மணிக்கு மேல் அம்மனுக்குப் பொரி படைத்து ஆராதனை நடைபெறும். வழிபாட்டிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் பொரி பிரசாதமாக வழங்கப்பெறும். இரவில் கோயில் சன்னிதியில் அமைந்திருக்கும் கொடிமரம் அருகில் வைத்து சொக்கப் பனை கொளுத்தும் நிகழ்ச்சி நடைபெறும்.

மார்கழி மாதம் முழுவதும் காலை ஆறு மணிக்கு அம்மனுக்குத் தனுர் பூசை நடைபெறும். நாள்தோறும் வெண்பொங்கல் படைத்து தேவிக்கு அலங்கார ஆராதனைகள் நடைபெறுகின்றன.

தைப்பொங்கலன்று காலை ஒன்பது மணிக்கு உபயதாரர்கள் மண்டகப் படியாகத் துரோபதையம்மனுக்கு அபிசேக, அலங்காரங்கள் நடைபெறும். சர்க்கரைப் பொங்கல் படைத்து ஆராதனை வழிபாடுகள் நடைபெறும். படையலுணவு அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.

மாசி மாதம் சிவராத்திரியன்று மாலை ஆறு மணியளவில் அம்பாளுக்கு அபிசேகங்களுடன் அலங்கார ஆராதனைகள் செய்யும் வழக்கமும் காணப்படுகிறது.

வழிபாட்டு வேளைகளில் துரோபதையம்மன் புகழ்பாடும் வகையில்,

**அனலில் பிறந்தவர்க்குத் தேவியாய்**
**ஆதியாய் சோதியான**
**அகங்காரம் கொண்ட திரியோதனன்**
**தம்பிமாரனைவர்க்குங் காலனை**
**அன்புடையவர்க்கு மேவலாய் நின்று**
**மேமணி மகுடஞ் சூட்டிவைத்த**
**அத்திநகர் தேவியே நீடாமங்கலம்**
**யமுனாம்பாள் புரம்**
**கோரையாற்றங்கரை தன்னில்**
**வளரம்மை பாஞ்சாலியே**

என்னும் பாடல் வழிபாட்டுப் பாடலாகப் பாடப்பெறுகிறது.

இக்கோயிலில் வழிபட வருவோருக்குத் திருநீறுக்குப் பதில் 'வீரபண்டாரம்' பிரசாதமாக வழங்கப்படுகிறது. பச்சரிசி மாவையும் மஞ்சள் பொடியையும் கலந்து தயாரிப்பதை 'வீரபண்டாரம்' என்றழைக்கின்றனர். பூசகர் வீரபண்டாரத்தையும் குங்குமத்தையும் அனைவருக்கும் பிரசாதமாக வழங்குகிறார்.

### வேண்டுதல்கள்

துரோபதையம்மனை மனதில் நினைத்து வேண்டுதலோடு வழிபட்டால் நினைத்த செயல் உறுதியாக நடைபெறும் என்று மக்கள் நம்புகின்றனர்.

இவ்வூரில் வாழ்ந்த ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் நடைபெறாமல் வயதாகிக் கொண்டிருந்தது. திருமணம் தொடர்பாக எவ்வித முயற்சிகளை மேற்கொண்டாலும் தடங்கல்கள் வந்துள்ளன. மனவேதனை அடைந்த அப்பெண் துரோபதையம்மனை வேண்டி வழிபட்டிருக்கிறாள். தனக்குத்திருமணம் நடந்தால்அம்மனுக்குத் தங்கத்தால் தாலிசெய்து காணிக்கையளிப்பதாக வேண்டியிருக்கிறாள். சிறிது காலத்தில் திருமணம் நடைபெற்றுள்ளது. பின்னர் கணவனுடன் அம்மன் கோயிலுக்கு வந்து, தங்கத்தால் செய்து வந்த தாலியை அம்மனுக்குக் காணிக்கையாகச் செலுத்தி நேர்த்திக்கடன் முடித்துள்ள செய்தியைக் கோயில் பூசகர் ஆய்வாளரிடம் தெரிவித்தார் (வெங்கடாசலம், கோ., 02.05.2009).

குடும்பத்தில் அனைவரும் நோயின்றி நலமாக வாழவேண்டும், வேளாண்மையில் விளைச்சல் பெருகவேண்டும் போன்ற வேண்டுதல்களின் அடிப்படையில், விழாக்காலங்களில் தேவிக்கு மாவிளக்குப் போட்டு வேண்டுதல்களை நிறைவேற்றும் வழிபாட்டு முறைகளும் கோயிலில் காணப்படுகின்றன.

அம்மை நோய் வந்தால் மாரியம்மனை வேண்டி வழிபடும் வழக்கம் தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. இதைப்போன்று முற்காலத்தில் காலரா நோய் பரவும் வேளையில் துரோபதையம்மனை வேண்டி வழிபடும் மரபுகள் இருந்துள்ளதாக நீடாமங்கலம் பகுதியில் வாழும் மக்கள் தெரிவித்தனர்.

**நிர்வாகம்**

நீடாமங்கலம் ஊரில் வாழ்ந்துவரும் அகமுடையார் சமூகத்திற்கு உரிமையுடையதாகத் துரோபதையம்மன் கோயில் உள்ளது. அகமுடையார் இனத்தைச் சார்ந்தவர்களே அறங்காவலர்களாக உள்ளனர். ஆர்.இராஜசேகரன் என்பவர் அறங்காவல் குழுத் தலைவராகவுள்ளார். டி.சிவசுப்ரமணியன், எஸ்.என்.ஞானசேகரன், டி.சாமிநாதன், எம்.விஸ்வநாதன், ஜி.இராஜமகேந்திரன், ஜே.சரவணன் ஆகியோர் அறங்காவலர்களாக உள்ளனர். இவர்களில் எஸ்.என்.ஞானசேகரன் என்பவர் கோயில் வளர்ச்சிப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு உழைத்து வருகிறார்.

இக்கோயிலுக்கென்று தனியாகச் சொத்துக்கள் எதுவும் இல்லை. உபயதாரர்கள் செலவிலும் மக்களிடம் நன்கொடையாக வசூலிக்கும் பணத்திலுமே வழிபாடுகளும் திருவிழாக்களும் துரோபதையம்மனுக்கு நடைபெற்று வருகின்றன.

ஆர்.கீர்த்திவாசன் அம்மன் அர்ச்சகராகவும், கோ.வெங்கடாசலம் கோயில் பூசகராகவும், கே.தர்மராஜ் கோயில் மெய்க்காவலாகவும் பணியாற்றி வருகிறார்கள்.

வேளார் சமூகத்தைச் சார்ந்த கோ.வெங்கடாசலம் குடும்பத்தவர்களே தலைமுறை தலைமுறையாகத் துரோபதையம்மன் கோயிலில் பூசகராகப் பணியாற்றி வருகின்றனர். 'இன்றைய தமிழ்நாட்டின் தென்பகுதியில் மண்பாண்டத் தொழில் செய்யும் குயவர்களே சிறுதெய்வக் கோயில்களில் பூசாரியாகச் செயல்படுவதோடு குறி சொல்லுதல், பேயோட்டுதல் ஆகியவற்றையும் பகுதிநேரத் தொழிலாகக் கொண்டுள்ள நிலை பழந்தமிழ்ப் பண்பாட்டின் எச்சமாகக் கருதத்தக்கது' என்பார் க.சாந்தி (2003:58).

அண்மைக் காலத்தில்தான் அந்தணர் சமூகத்தைச் சார்ந்தவர் அர்ச்சகராக அமர்த்தப்பெற்றுள்ளார். அம்மனுக்கான அர்ச்சனையும் வடமொழியிலேயே நடைபெறுகிறது.

துரோபதையம்மன் கோயிலில் **30.08.1960** ஆம் ஆண்டு நடைபெற்ற குடமுழுக்கு விழாவிற்குப் பின்னர் **06.06.2008** அன்று குடமுழுக்குவிழா நடைபெற்றுள்ளது. மக்களிடம் நன்கொடையாகப் பெற்ற

பணத்தின் மூலம் நடைபெற்ற குடமுழுக்கு விழா காரணமாகக் கோயில் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது.

**மேல்நிலையாக்கம்**

துரோபதையம்மன் வழிபாட்டு நிலைகளும் மேல்நிலையாக்க நெறியில் பயணிப்பதைக் காணமுடிகிறது. அம்மன் கோயிலின் கருவறை விமானக் கட்டட அமைப்பு பெருந்தெய்வக் கோயில் கருவறை விமானக் கட்டடக்கலை சாயலைப் பெற்றுத் திகழ்கிறது. வேளார் சமூகத்தைச் சார்ந்த கோயில் பூசகர் துணை தெய்வங்களின் பூசகராக மாற்றப்பெற்று அந்தணர் வகுப்பைச் சார்ந்தவர் அம்பாளின் அர்ச்சகராக அமர்த்தப் பெற்றுள்ளார். அம்மன் வழிபாட்டின்போது அர்ச்சனையும் வடமொழியில் நடைபெறுவதைக் காணமுடிகிறது. நாட்டுப்புறத் தெய்வக் கோயில்கள் பெயர்பெற்று, பெரும்பான்மையான மக்களின் வழிபாட்டிடமாக மாற்றம் பெற்று, பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது மேல்நிலையாக்கப் போக்குகள் தோற்றம் பெறுகின்றன. இந்நிலையில் இந்துமதக் கடவுளர்களோடு நாட்டுப்புறத் தெய்வங்களின் உறவுநிலைகள் பின்னப்படுகின்றன. இதன் காரணமாக நாட்டுப்புறத் தெய்வங்கள் சுயஅடையாளங்களை இழக்க நேரிடுகிறது.

‘துரோபதையம்மன் வழிபாடு’ என்னும் பொருளடியாக அம்மன் தோற்றக் கதை, கோயிலமைப்பு, அம்மன் வடிவ அமைப்பு, நாள்–வார–மாத வழிபாடுகள் மற்றும் ஆண்டு விழாக்கள், வேண்டுதல்கள், கோயில் நிர்வாகம், மேல்நிலையாக்கம் போன்றவை தொடர்பான கருத்துகள் விளக்கமாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. இக்கோயிலில் பத்தொன்பது நாள்கள் நடைபெறும் தீமிதி விழா நிகழ்வுகளும் தெளிவாக விவரிக்கப் பெற்றுள்ளன.

## 3. அங்காள ஈஸ்வரியம்மன் வழிபாடு

தஞ்சாவூர், விளார் சாலையில் அமைந்துள்ள அண்ணா நகரில் காணப்பெறும் அங்காள ஈஸ்வரியம்மனுக்கு ஆண்டுதோறும் தீமிதி வழிபாடு நடைபெறுகிறது. தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அண்ணா நகர் அங்காள ஈஸ்வரியம்மன் கோயில் அமைந்துள்ளது.

1965ஆம் ஆண்டில் பர்மாவில் இருந்து அகதிகளாக வந்த மக்கள் அண்ணா நகரில் குடியமர்ந்துள்ளனர். தொடக்க காலத்தில் 'பர்மா காலனி' என்றழைக்கப் பெற்ற இப்பகுதி தற்காலத்தில் 'அண்ணா நகர்' என்றவாறு பெயர் மாற்றம் பெற்றுள்ளது. இந்த நகரில் இருபது தெருக்கள் அமைந்துள்ளன. வெள்ளாளர், முதலியார், அகமுடையார், கள்ளர், கோனார், ஆதிதிராவிடர் சமூகத்தைச் சார்ந்த மக்கள் அண்ணா நகர்ப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். கிறித்தவம் மற்றும் இசுலாமிய சமயத்தைச் சார்ந்த மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

விளார் சாலையில் அண்ணாநகர் பதினாறு மற்றும் பதினேழாவது தெருக்களின் இடைப்பட்ட பகுதியில் அங்காள ஈஸ்வரியம்மன் கோயில் கட்டப் பெற்றுள்ளது. இந்த நகரில் வசிக்கும் மக்கள் பர்மாவில் இருந்து அகதிகளாகத் தமிழ்நாட்டிற்கு வரும்போது பிடிமண் எடுத்து வந்து அங்காள ஈஸ்வரியம்மன் இருக்கும் இடத்தில் வைத்து அதில் ஒரு சூலமும் நட்டுத் தொடக்க காலத்தில் வழிபட்டு வந்துள்ளனர். அகதிகளாக வந்தவர்களின் முன்னோர்கள் பர்மாவில் அங்காள ஈஸ்வரியம்மனுக்குக் கோயில் கட்டித் தீமிதி வழிபாடுகள் நடத்தி வந்ததாகவும் அந்த அடிப்படையில் தமிழகத்துக்கு வரும்போது பிடிமண் எடுதது வந்து தற்போது அங்காளம்மன் இருக்குமிடத்தில் வைத்துச் சூலமும் நட்டு வழிபட்டு வந்ததாகவும் களப்பணியில் தகவலாளர் ஆய்வாளரிடம் தெரிவித்தார் (வீரப்பன், ஆர்., 24.05.2009).

முற்காலத்தில் கீற்றுக் கொட்டகையாக இருந்த கோயில் பின்னர் மண் சுவர்களால் எழுப்பப்பெற்ற கோயிலாக மாற்றம் பெற்றது. இப்போதைய கோயில் அமைப்பு, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஊர் மக்களிடம் நன்கொடையாகப் பணம் வசூலித்துக் கட்டப்பெற்றதாகும்.

கோயில் கருவறையில் அங்காள ஈஸ்வரியம்மன் கற்சிற்ப அமைதி தோற்றமளிக்கிறது. அம்மனின் வலப்புறம் ஐம்பொன் உற்சவர் வடிவம் வைக்கப் பெற்றுள்ளது. அம்மன் கோயில் கருவறை சிறிய விமானத்துடன் பொலிவு பெறுகிறது. விமானத்தின் நான்கு பக்கங்களிலும் மையப் பகுதியில் நான்கு திசை நோக்கி அம்மன் சுதை வடிவம் பொருத்தப் பெற்றுள்ளன. விமானத்தில் ஸ்தூபிப் பகுதியில் செம்புக் கலசம் காட்சியளிக்கிறது.

கருவறை முன்பாக வழிபாட்டு மண்டபமும் முகப்பு மண்டபமும் அமைந்துள்ளன. வழிபாட்டு மண்டபத்தின் வாயில் இடப்புறம் விநாயகர் வடிவமும் வலப்புறம் முருகன் வடிவமும் அமைக்கப்பெற்றுள்ளன. முகப்பு மண்டபத்தில் அம்மன் சன்னிதி எதிரே சிங்கச் சிற்பமும் கொடிமரமும் காட்சியளிக்கின்றன. முகப்பு மண்டபத்தில் வலப்பகுதியில் நவக்கிரகங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

கிழக்குத் திசை நோக்கியமைந்திருக்கும் அம்மன் கோயிலின் கருவறையைச் சுற்றி ஒரு திருச்சுற்று காணப்பெறுகிறது. திருச்சுற்றின் வடக்குப்பக்கம் விஷ்ணு துர்க்கையம்மன் காட்சியளிக்கின்றாள்.

அங்காள ஈஸ்வரியம்மன் கோயில் முகப்பு மண்டப வாயிலின் இடப்புறம் மதுரை வீரனும், வலப்புறம் பாவாடைராயனும் நிறுத்தப் பெற்றுள்ளனர். கோயிலுக்கு வெளியே இடப்புறம் முனீஸ்வரனுக்குத் தனிச் சிற்றாலயமும் வலப்புறம் முன்னடியானுக்குத் தனிச் சிற்றாலயமும் அமைப்புற்றுள்ளன. இத்தெய்வங்கள் எல்லாம் அங்காளம்மனின் காவல் தெய்வங்கள் என்ற கருத்து மக்களிடம் காணப்படுகிறது. முனீஸ்வரன் முன்பாக விநாயகருக்குத் தனிச் சிற்றாலயம் எழுப்பப்பெற்றுள்ளது.

கோயில் வாயிலின் மேல்பகுதியில் நடுவில் அங்காளம்மன் அமர்ந்த கோலத்தில் சிங்க வாகனத்தில் காட்சியளிக்கிறாள். வலப்பக்கம் இலக்குமி, விநாயகர், பூதவடிவமும் இடப்பக்கம் சரசுவதி, முருகன், பூதவடிவமும் தோன்றுகின்றன. அம்மனின் இருபுறமும் பதுமைகள் கைகளில் விளக்கேந்தியவாறு நிற்கும் வகையில் சுதை சிற்பங்கள்

வடிவப்படுத்தப் பெற்றுள்ளன. அம்மன் கோயில் முகப்பு மண்டபத்தைத் திருமணங்கள் நடத்துவதற்கு வாடகைக்கு விடுவதால் கருவறை பின்பாக உணவுக் கூடமும் கட்டப்பெற்றுள்ளது.

அங்காள ஈஸ்வரியம்மன் தோற்றம் பற்றிய வாய்மொழிக் கதைகள் எதுவும் மக்களிடம் வழக்கில் இல்லை. இவ்வம்மனைப் பார்வதி தேவியின் வடிவமாக மக்கள் கருதுகின்றனர். சக்தியாக எண்ணி வழிபட்டு வருகின்றனர்.

கோயில் கருவறையில் அம்மன் பீடத்தில் அமர்ந்த நிலையில் தோன்றுகின்றாள். வலது காலைத் தொங்கவிட்டு இடதுகாலை மடக்கிய நிலையில் ஈஸ்வரி அமர்ந்துள்ளாள். நான்கு கைகளுடன் திகழும் அம்மன் வலக் கரங்களில் மேல் கையில் உடுக்கும் கீழ்க்கையில் திரிசூலமும் பொருந்தியுள்ளன. இடப்புறத்தில் கீழ்க்கையில் குங்குமச் செப்பும் மேல் கையில் மழுவும் காணப்படுகின்றன. கைகள், காதுகள், கழுத்து, மூக்குப் பகுதிகளில் அணிகலன்கள் காணப்படுவதுடன் தலையில் கிரீடம் தோன்றுகிறது. நெற்றித் திலகத்துடன் முகமலர்ச்சியோடு நாடிவரும் அடியவர்களுக்கு அருள்புரிகின்றாள் அங்காள ஈஸ்வரி.

அங்காளம்மன் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நாட்டாரால் வழிபடப்படும் தெய்வம் என்றாலும் இசக்கியம்மனுக்கு இருப்பதுபோல் அதற்கென்று தனித்தன்மைகள் வாய்ந்த உருவச் சிலைகள் இல்லை. அங்காளம்மனுக்கு நான்கு கைகளுண்டு. இடது மேல் கையில் திரிசூலமும் இடது கீழ்க்கையில் கபாலமும் வலது மேல்கையில் உடுக்கையும் (டமருகம்) இந்த உடுக்கையில் இடைப்பகுதியில் பாம்பும் கயிறாகச் சுற்றப்பட்டிருக்கும். இடது கீழ்க்கையில் வாளும் வைத்திருப்பாள் (சில கோயில்கள் இவை மாறியுமிருக்கும்). அங்காளம்மன் புற்றிடங் கொண்டவாளகவும் வழிபடப்படுவாள் (லூர்து, தே., 1997:410).

அம்மன் கோயில் வாயில் இடப்புறம் காணப்பெறும் மதுரை வீரன் நின்ற நிலையில் தோற்றம் பெறுகிறார். வலது கையில் கத்தியுள்ளது. இடது கையில் காணப்படும் கதையாயுதம் தரையில் ஊன்றிய நிலையிலுள்ளது. இடுப்பில் வேட்டியும் துண்டும் கட்டிய நிலையில் கால்களில் கழல்களும் கைகள், காதுகள், கழுத்துப் பகுதிகளில் அணிகலன்கள் அலங்கரிக்கின்றன. தலையில் கிரீடம் உள்ளது. பெரிய மீசையுடன் நெற்றிப் பட்டையோடு வளர்ந்து பரந்த தலைமுடி கோலத்தில் மதுரைவீரன்

சிற்பம் உள்ளது. இதே தோற்றப்பொலிவோடு வாயில் வலப்புறம் பாவாடைராயன் நிறுத்தப்பெற்றுள்ளார்.

கோயில் முகப்பு மண்டபத்துக்கு வெளியே இடப்பகுதியில் புலியின் மேல் அமர்ந்த நிலையில் முனீஸ்வரன் சிற்பம் வடிவாக்கப் பெற்றுள்ளது. வலக்கையில் சூலமும் இடக்கை கதையாயுதம் தரையில் ஊன்றப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றன. கால்களில் கழல்களும் கைகளில் வளைகளும் கழுத்தணிகளும் காட்சிப்படுத்தப்பெற்றுள்ளன. கழுத்தில் சுற்றியவாறு படமெடுத்த நிலையில் பாம்பு உள்ளது. இடுப்பில் வேட்டியும் தலையில் துண்டும் கட்டப்பெற்றுள்ளன. அகன்ற கண்கள், மீசையோடு நெற்றியில் திருநீற்றுக் குறியோடு முனீஸ்வரன் தோற்றமளிக்கிறார். முனீஸ்வரன் முன்பாகப் பலிபீடமும் திரிசூலமும் உள்ளன.

கோயில் முன்பாக வெளிப்பகுதியில் வலப்பக்கம் முன்னடியானுக்குத் தனிச் சன்னிதியுள்ளது. நின்றநிலையில் முன்னடியான் சிற்பம் வடிவமைக்கப் பெற்றுள்ளது. வலக்கை பெரிய கம்பைப் படித்துத் தரையில் ஊன்றியுள்ளவாறு உள்ளது. இடக்கை தொங்கவிடப்பெற்ற நிலையில் உள்ளது. கைகள், காதுகள், கழுத்தில் அணிகள் அழகூட்டுகின்றன. இடுப்பில் வேட்டியும் தலையில் துண்டும் கட்டப்பெற்ற நிலையில் முன்னடியான் காட்சிதருகிறார். இச்சுதை சிற்ப வடிவம் ஐந்தடி உயரத்தில் வடிவமைக்கப் பெற்றுள்ளது.

அங்காளம்மன் கோயில் அடியவர்கள் வழிபாட்டிற்காக நாள்தோறும் காலை ஆறு மணி முதல் பன்னிரண்டு மணி வரையிலும், மாலை நான்கு மணியிலிருந்து ஒன்பது மணி வரையிலும் திறந்து வைக்கப்படுகிறது.

நாள்தோறும் அம்மனுக்கு இரண்டுகால பூசை நடைபெறுகிறது. காலை ஒன்பதரை மணிக்கும், மாலை ஆறரை மணிக்கும் பூசைகள் நடைபெறுகின்றன. காலையில் நடைபெறும் பூசை வேளையின்போது அம்பாளுக்கு அபிசேகங்கள் நடைபெறுகின்றன. மஞ்சள் பொடி, திரவியப் பொடி, பால், இளநீர், தேன் போன்றவற்றால் அம்மனுக்கு அபிசேகங்கள் நடைபெறும். பின்னர் மலர் மாலைகளால் அம்பாளை அலங்கரித்து பொங்கல் படைத்து ஆராதனைகள் நடைபெறும். அந்தணர் வகுப்பைச் சார்ந்த இருவர் அம்பாள் பூசகர்களாக இருப்பதால் அம்மனுக்கான அர்ச்சனை வடமொழியிலேயே நடைபெறுகிறது. மாலைவேளையில்

அம்பாளுக்கு மலர் அலங்காரம் செய்து, தேங்காய் பழம் வைத்து அர்ச்சனை, ஆராதனைகள் நடைபெறுகின்றன.

வார நாட்களில் அம்மனுக்கு நிர்வாகத்தார் செலவில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தும் வழக்கம் இல்லை. வார வெள்ளிக்கிழமைகளில் அடியவர்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டுத் தேவிக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்வதுண்டு.

மாதம்தோறும் சங்கரகடசதுர்த்தி, பௌர்ணமி, அமாவாசை நாட்களில் அம்பாளுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். சங்கரகட சதுர்த்தி, பௌர்ணமி நாட்களில் மாலை ஆறு மணிக்கு அம்மனுக்கு அபிசேக, அலங்கார, அர்ச்சனை, ஆராதனைகள் நடைபெறுகின்றன. அமாவாசை நாளன்று அம்மன் சன்னிதியில் யாகம் வளர்த்து 'லட்சுமி குபேர யாக பூசை' நடத்துகின்றனர். அமாவாசையன்று மாலை ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரை பூசை நடைபெறும். அன்று அம்மனுக்கு அபிசேகங்களும் அலங்காரங்களும் ஆராதனைகளும் விமரிசையான முறையில் கொண்டாடப்படுகின்றன. பூசை முடிந்ததும் உபயதாரர்கள் செலவில் வழிபட வந்திருக்கும் இறைநேசர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.

கோயிலில் ஆண்டுதோறும் வருடப்பிறப்பு, பொங்கல், நவராத்திரி, பங்குனி உத்திர விழா முதலானவை நடத்தப்படுகின்றன. வருடப்பிறப்பு மற்றும் பொங்கலன்று காலை ஆறு மணியளவில் அம்மனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெறுகின்றன. நவராத்திரி விழாவை முன்னிட்டுக் கோயிலில் கொலு வைக்கப்படுகிறது. இவ்விழா கொண்டாடப்பெறும் பத்து நாட்களிலும் தேவிக்கு இரவு எட்டு மணியளவில் அலங்கார ஆராதனைகள் நடைபெறுகின்றன. கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை தீபத் திருவிழா கொண்டாடப்படுகிறது. அன்று மாலை ஆறு மணிக்கு அங்காளம்மனுக்கு அபிசேக ஆராதனைகள் நடைபெறும். கோயிலில் கார்த்திகை தீபம் ஏற்றி வழிபடுவார்கள். அன்றிரவு கோயில் முன்பாக வீதியில் வைத்து சொக்கப்பனை கொளுத்தும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் தீமிதித் திருவிழா பத்து நாட்கள் பெரியளவில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின் மூல நிகழ்வாகத் தீமிதி வழிபாடு நடைபெறும்.

## தீமிதி வழிபாடு

ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தன்று தீமிதி வழிபாடு நடைபெறுகிறது. தீமிதித் திருவிழா பத்து நாட்கள் கொண்டாடப் பெறுகிறது. தீமிதி வழிபாடு நடைபெறும் நாளிற்கு ஒன்பது நாட்களுக்கு முன்பாகத் திருவிழாவிற்கான திருக்கொடியேற்றம் நடைபெறும்.

பத்து நாட்கள் சிறப்பாக நடைபெறும் தீமிதித் திருவிழாவின் முதல் நாளன்று மாலை ஐந்து மணியளவில் அங்காள ஈஸ்வரியம்மன் கோயிலைச் சுற்றி மோது கட்டி இழுப்பார்கள். வைக்கோலால் மனித உருவம் போல் செய்தமைப்பதை 'மோது' எனக் குறிப்பிடுகின்றனர். தப்புமேளத்துடன் கோயிலைச் சுற்றி மோது கட்டி இழுத்து, அதை மயானத்திற்குக் கொண்டு சென்று எரித்துவிடுகின்றனர். இப்பணியைப் பறையர் சமூகத்தைச் சார்ந்த மக்கள் மேற்கொள்கின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் கோயிலில் உள்ள அசுத்தங்கள் அகற்றப்பட்டு கோயில் தூய்மையடைவதாக நம்புகின்றனர்.

அன்று மாலை ஆறு மணியளவில் கோயிலைச் சுற்றி அமைந்திருக்கும் நான்கு தெருக்களின் திசை மூலைகளிலும் எலுமிச்சம்பழம் காவு கொடுக்கும் நடைமுறையுள்ளது.

பின்னர் சக்திக்கரகம் எடுக்கச் செல்கின்றனர். அண்ணா நகர் எல்லை முடிவில், கலைஞர் நகர் எதிர்ப்புறம் அமைந்துள்ள முனீஸ்வரன் சன்னிதிக்குச் சென்று கரகம் எடுப்பார்கள். பித்தளைக் குடத்தின் உள் நீரூற்றி மேல்பகுதியில் வேப்பிலைகள் வைத்து அதில் தேங்காயும் வைத்திருப்பார்கள். கரகத்தின் மேலாகத் தெரியுமாறு ஒரு சூலாயுதத்தை வைத்து அதில் எலுமிச்சம்பழத்தையும் குத்தி வைத்திருப்பார்கள். கரகத்தின் மேல் வெள்ளை நூலைச் சுற்றியிருப்பார்கள். பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பெற்ற இக்குடத்தைச் 'சக்திக் கரகம்' என்று குறிப்பிடுகின்றனர்.

தமிழர் வாழ்வில் மங்களக் குறியீடுகளுள் முதன்மையானது பூரண கும்பம் (நீருள்ள சொம்பின் மீது மாவிலையும் தேங்காயும் வைத்தல்). இதன் குறியீடு பன்முகநிலையில் சடங்குத்தளத்தில் காணப்படுகிறது. தலைவாசலில் மேற்பகுதியில் பறவைகள், யானை போன்ற விலங்குகளுடன், கொடிகளும் மலர்களும் சேர்ந்து பூரண கும்பம்

செதுக்கப்படுகிறது. கலை வரலாற்றில் மிகவும் மதிக்கத்தக்கவராக விளங்கும் ஆனந்த குமாரசாமி (1971:41–1) பூரண கும்பத்தை ஆற்றுத் தெய்வங்களோடு ஒப்பிடுகிறார். இந்திய இலக்கியங்கள் பலவற்றிலும் பதிவு பெற்றுள்ள குறியீடாகப் பூரண கும்பம் உள்ளது. மங்களக் குறியீடுகளுள் மிகவும் புகழ்பெற்ற குறியீடு இதுதான் என்றும் நல்வாழ்வு, செல்வவளம், உடல்நலம் ஆகிய மூன்றின் குறியீடாக இது உள்ளது என்கிறார் (மேலது, 61–4). சக்திக் கலசமாக/கரகமாக/காவடியாக உருவாக்கப்படும் பூரண கும்பம் சமயச் சடங்குகளில் பெரிதும் இடம்பெறுகிறது (பக்தவத்சலபாரதி, 2005:300).

மங்கல, அமங்கல நிகழ்ச்சிகளிலும் கோவில் திருவிழாக்களிலும் நூல் சுற்றப்பட்ட நீர் நிரம்பிய கும்பம் ஒன்றின் வாய்ப்பகுதியில் தேங்காய் ஒன்றை வைத்து அதனைச் சுற்றி மாவிலைகளை வைத்திருப்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். கும்பத்தின் மேற்பகுதியில் இடம்பெறும் மாவிலையும் தேங்காயும் தாவரச் செழிப்பை உணர்த்துகின்றன. கும்பமானது பெண்ணின் கருப்பையின் குறியீடாக அமைகின்றது. கருப்பையில் இடம்பெறும் விந்தாகக் கும்பத்திலுள்ள நீர் அமைகின்றது. இது தொத்து மந்திரத்தின் பாற்பட்ட செழிப்பு மந்திரமாகும். இங்குத் தாவரச் செழிப்பும் மானுடச் செழிப்பும் கற்பனையான முறையில் தொடர்புபடுத்தப்படுகின்றன என்பார் ஆ.சிவசுப்பிரமணியன் (1988:56).

கோயில் சாமியாடி கே.கருப்பையா என்பவர் சக்திக் கரகத்தைத் தலையில் தூக்கிக் கொண்டு கோயிலுக்கு வருவார். சாமியாடி மஞ்சள் வண்ண வேட்டியை இடுப்பில் உடுத்தவாறு, நெற்றியில் நீறணிந்து, கழுத்தில் மலர்மாலைகள் அணிந்தவாறு கரகத்தைத் தூக்கி வருவார். ஏனைய சாமியாடிகளான பி.எஸ்.பி.வாஞ்சி செந்தில் என்பவர் முனீஸ்வரனுக்குரிய வீச்சரிவாளையும், எம்.முனியாண்டி என்பவர் பாவாடைராயனுக்குரிய சுக்குமாந்தடியையும், எஸ்.கனகராஜ் என்பவர் பூச்சி என்றழைக்கப்படும் தெய்வத்திற்குரிய ஆயுதமான பூச்சித்தடியையும் தூக்கிக் கொண்டு உடன்வருவார்கள். இந்த நிகழ்வில் பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்து கொள்வார்கள். சக்திக்கரகம் கோயிலை வந்தடைந்ததும் அங்காளம்மன் சன்னிதியில் கரகத்தை இறக்கி வைத்து வழிபடுவார்கள்.

அன்றிரவு பத்து மணியளவில் அங்காள ஈஸ்வரியம்மன் சன்னிதி முன்பாகவுள்ள கொடிமரத்தில் திருக்கொடியேற்றம் நடைபெறும். ஒன்பது மீட்டர் வெள்ளைத் துணியை மஞ்சள் பொடி கலந்த நீரில் நனைத்து காய வைப்பார்கள். அதில் சிங்கத்தின் மேல் அங்காளம்மன் வீற்றிருப்பது போன்ற படத்தை வரைந்து திருக்கொடியாகப் பயன்படுத்துவார்கள்.

கொடித்துணியின் ஒரு மூலையில் தேங்காய், வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம், ஒன்றரை ரூபாய் தட்சணை ஆகியவை வைத்துக் கட்டி கொடிமரத்தில் ஏற்றுவார்கள். கொடிமரத்தில் தொங்கும் கொடித்துணியை மரத்தில் சுற்றி தர்ப்பைப் புல்லால் கட்டி வைப்பார்கள். பின்னர் கொடி மரத்திற்குக் காப்பு கட்டுவார்கள். இதனைத் தொடர்ந்து அம்பாளுக்கும், முனீஸ்வரன், பூச்சி முதலான தெய்வங்களுக்கும் காப்பு கட்டுவார்கள். சாமியாடிகளும் காப்பு கட்டிக் கொள்வார்கள். காப்பு கட்டிய பின் சாமியாடிகள் வீட்டிற்குச் செல்வதில்லை. விரதம் மேற்கொள்கின்ற வகையில் கோயிலில் தங்குகின்றனர். அன்றிரவு அம்மன் உற்சவர் ஊர்மக்கள் வழிபாட்டிற்காக வீதியுலா செல்கிறது. அவ்வேளை மக்கள் அர்ச்சனை வழிபாடு நிகழ்த்தும் வழக்கம் உள்ளது.

திருவிழாவின் இரண்டாம் நாள் முதல் எட்டாம் நாள் வரை ஒவ்வொரு நாளும் இரவு எட்டு மணிக்கு அம்மனுக்கு அபிசேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. பின்பு மாட்டுவண்டியில் அம்பாள் உற்சவரை அமர்த்தி மலர் அலங்காரங்கள் செய்து வீதியுலா கொண்டு செல்வார்கள். உலா முடிந்து மறுநாள் காலை ஐந்து மணியளவில் அம்மன் மீண்டும் கோயிலை வந்தடையும். அப்போது அந்த நாள் விழாவிற்கு உபயதாரர்களாக இருந்தவர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் கழுத்தில் மாலையிட்டு தலையில் பரிவட்டம் கட்டி பூசகர் அம்மன் பிரசாதத்தை அளித்து வாழ்த்துவார்.

பத்து நாட்கள் நடைபெறும் பங்குனி உத்திரத் தீமிதித் திருவிழாவில் ஒன்பதாம் நாள் இரவு அக்கினிக் கப்பரை எடுக்கும் நிகழ்ச்சி நடைபெறும். பரந்த மண்சட்டியினுள் எலுமிச்சம்பழம், வெற்றிலையுடன் தேங்காய் மூடியைக் கவிழ்த்து வைப்பர். அதன் மேல் தர்ப்பைப் புல்லால் செய்த அறுகோண வடிவை அமர்த்துவார்கள். அறுகோணத்தின் மேலாக சந்தனம், மா, வேப்ப மர விறகுத் துண்டுகளை வைத்து, அதன் மேல் எண்ணெய் ஊற்றப்பெற்ற துணிகளை வைத்து நெருப்பேற்றுவார்கள்.

அம்மனுக்கு அலங்கார ஆராதனைகள் முடிவுற்றதும் இரவு ஒன்பது மணியளவில் எம்.முனியாண்டி என்பவர் அக்கினிக் கப்பரையை எடுத்துக் கொண்டு ஊர்த் தெருக்களில் வலம் வருவார். ஏனைய சாமியாடிகளும் உடன்வருவார்கள். அம்பாள் உற்சவரும் உடன் வீதியுலா வரும் நடைமுறை உள்ளது.

பத்தாம் நாள் தீமிதி வழிபாடு நிகழ்கிறது. பத்துநாள் விழாவில் மூலமான நிகழ்வாகத் தீமிதி வழிபாடு கொண்டாடப்படுகிறது. ‘பாமர மக்களால் ஆழமாக உணரப்பட்டும் பின்பற்றப்பட்டும் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அளிக்கப்பட்டும் வருகின்ற நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளின் தொகுதியே நாட்டுப்புறச் சமயம்’ என்று வரைவிலக்கணம் வழங்கப்படுகிறது (வேலுசாமி, ம., 1991:249). இச்சமயச் சார்பான விழாவாகவே தீமிதித் திருவிழாவும் விழபாடாகத் தீமிதி வழிபாடும் நிகழ்த்தப்படுகின்றன.

மக்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் வகையில் மாவிளக்குப் போடுதல், பால்குடம் எடுத்தல், முடியிறக்குதல், அலகுகுத்துதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வது போன்று தீமிதி வழிபாடும் நிகழ்த்துகின்றனர். திருமணம் நிகழ வேண்டும், குழந்தைச் செல்வம் வேண்டும், நோய்கள் அகலவேண்டும் போன்ற வேண்டுதல்கள் நிறைவேறினால் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் தீமிதி வழிபாட்டை மேற்கொள்கின்றனர்.

தீமிதி வழிபாட்டிற்கு இரண்டு டன்கள் வரை விறகுகள் தேவைப் படுகின்றன. வேப்பமரம் மற்றும் கொய்யா மர விறகுகளைப் பயன்படுத்துகின்றனர். வீடுகளில் பயன்பாடில்லாமல் இருக்கின்ற மர உரல்கள், கதவு நிலைகள் போன்றவற்றையும் தீமிதி விறகிற்காக மக்கள் அளிக்கின்றனர். இவற்றிலுள்ள ஆணி, இரும்புப் பொருட்களை எல்லாம் அகற்றி, உடைத்து தீக்குழிக்கு விறகாகப் பயன்படுத்துகின்றனர். இவ்விழாவிற்காக அண்ணாநகர்ப் பகுதியில் வசிக்கும் மக்களிடம் வீட்டிற்குப் பத்து ரூபாய் நன்கொடையாக வசூலிக்கப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் கூடுதல் பணத்தையும் நன்கொடையாக வழங்குகின்றனர். இப்பணத்தில் தீமிதிக்குத் தேவையான விறகுகளையும் பிற செலவுகளையும் மேற்கொள்கின்றனர்.

தீமிதியன்று காலை ஒன்பது மணியளவில் தீமிதி நடைபெறும் இடத்தில் பூசை நடைபெறும். அங்காளம்மன் கோயில் எதிர்த்திசையில் இடப்பக்கம் சிறிது தொலைவில் கோயிலுக்குச் சொந்தமான திடல் உள்ளது. இத்திடலில் வைத்து தீமிதி வழிபாடு நடைபெறும். தீமிதி வழிபாட்டைப் பொறுப்பேற்று நடத்தும் ஆர்.வீரப்பன் என்பவர் தீக்குழி வெட்டும் இடத்தின் முன்பாக வேப்பமரக் கம்பை நட்டு, அதில் மாவிலை, வேப்பிலை கட்டி, வாழை இலையில் தேங்காய், பழம் வைத்து கற்பூரம் ஏற்றி சாமி கும்பிடுவார். அங்குக் குடியிருக்கும் அடியவர்களும் சாமி கும்பிடுவார்கள். பின்பு தீவளர்ப்பதற்கான குழி வெட்டப்படும். இருபத்தொரு அடி நீளம், நான்கடி அகலம், ஒரு அடி ஆழத்தில் தீக்குழி அமைக்கப்படும். இதன் முன்பாக மூன்றடி நீளம், நான்கடி அகலம், ஒரு அடி ஆழத்தில் பால்குழி வெட்டப்படும். கிழக்கு மேற்காகக் குழிகள் வெட்டப்படும். தீமிதி வழிபாடு நிகழ்த்த வருகை தந்திருப்பவர்கள் அன்று காலையில் கோயிலில் ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்தி காப்புக் கயிற்றை வாங்கிக் கையில் கட்டிக் கொள்வார்கள்.

கோயிலில் அங்காளம்மன் முன்பாக வேப்பிலைகளைப் பரப்பி அதன் மேல் விறகுத் துண்டுகளை வைத்து, கற்பூரத்தால் நெருப்பேற்றுவார்கள். அம்மன் முன்னிலையில் நெருப்பு வளர்த்து அந்தக் கனல்களைச் சாமியாடி கே.கருப்பையா எடுத்துச் சென்று தீக்குழியில் அடுக்கி வைக்கப்பெற்றிருக்கும் விறகுகளுக்கு நெருப்பேற்றுவார். தீமிதி விழா நடைபெறும் நாளன்று பகல் பன்னிரண்டு மணியளவில் தீக்குழி விறகுகளுக்கு நெருப்பேற்றும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பின்னர், சக்திக்கரகம் எடுக்கும் சாமியாடி கே.கருப்பையா என்பவர் கோயிலில் இருந்து சக்திக் கரகத்தைத் தூக்கிக் கொண்டு தஞ்சை நகரில் அமைந்திருக்கும் சிவகங்கைப் பூங்காவிற்குச் செல்வார். ஏனைய சாமியாடிகளும் உடன் செல்வார்கள். அங்குத் தீமிதி வேண்டுதல் நிகழ்த்துவதற்காக வருகை தந்திருப்போர் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் கூடியிருப்பார்கள். அனைவரும் மஞ்சள் வண்ண ஆடையுடன் ஊர்வலமாகத் தீமிதித் திடலை நோக்கி வருவார்கள். ஊர்வலத்தில் பலர் பால்குடம், காவடி, எடுத்தும் வருவதுண்டு; பலர் அலகு குத்தி வருவார்கள். சாமியாடிகள் பி.எஸ்.பி. வாஞ்சிசெந்தில் வீச்சரிவாளையும், எம்.முனியாண்டி சுக்குமாந்தடியையும் எஸ்.கனகராஜ் பூச்சித் தடியையும் எடுத்துக்கொண்டு ஊர்வலத்தில் வருவார்கள்.

அங்காளம்மன் கோயிலில் பலர் மாவிளக்குப் போட்டும், முடியிறக்கியும் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொண்டிருப்பார்கள்.

அன்று மாலை ஐந்து மணியளவில் ஊர்வலம் தீமிதித் திடலை வந்தடையும். வீச்சரிவாள் எடுத்து வந்த சாமியாடி பி.எஸ்.பி. வாஞ்சிசெந்தில் என்பவர் தீக்குழி முன்பாகப் பூசணிக்காய் ஒன்றை வீச்சரிவாளால் வெட்டி காவு கொடுப்பார். இதனைத் தொடர்ந்து கரகம் சுமந்து வந்த கே.கருப்பையா என்பவர் முதலில் தீமிதி நிகழ்த்துவார். இவரைத் தொடர்ந்து பிற சாமியாடிகளும் இறையன்பர்களும் வழிபாடு நிகழ்த்தும் பொருட்டு வரிசையாகத் தீமிதி நிகழ்த்துவார்கள். தீக்குழியில் தீமிதிப்பவர்கள் கிழக்குத்திசையில் இருந்து மேற்குத் திசை நோக்கி ஓடியவாறு தீமிதி நிகழ்த்துவார்கள். பால்குழியில் கால் நனைத்து கரையேறுவர். ஊர்வலம் வரும்போது உடன் வந்த அங்காளம்மன் உற்சவர், அடியவர்கள் தீமிதிக் காட்சியைக் காண்கின்ற வகையில்தீக்குழியின் மேற்குப்பக்கம், கிழக்குத்திசை நோக்கியவாறு நிலை கொண்டிருக்கும். தீமிதித்தவர்கள் அனைவரும் கோயிலுக்குச் சென்று அம்மனை வணங்கி பிரசாதம் பெற்றுக் கொண்டு, காப்பவிழ்த்துவிட்டு இல்லத்திற்குச் செல்வார்கள். இங்குப் பிராமணர்கள் தீமிதி வழிபாடு மேற்கொள்வதில்லை.

பால்குடம் எடுத்து வந்தவர்கள் பாலால் அங்காளம்மன் மூலவருக்குப் பால் அபிசேகம் நிகழ்த்தி, கொஞ்சம் பாலைக் குடத்தில் மிச்சமாக வைத்துப் பூசகர் பிரசாதமாகக் கொடுப்பார்.

08.04.2009 அன்று நடைபெற்ற தீமிதித் திருவிழா, இக்கோயிலில் நடைபெற்ற நாற்பத்தி நான்காவது ஆண்டுத் தீமிதித் திருவிழாவாகும். இத்தீமிதித் திருவிழாவில் மொத்தம் இரண்டாயிரத்து எண்ணூறு பேர் தீமித்துள்ளனர். அய்யம்பேட்டை, அம்மாபேட்டை, நீடாமங்கலம் போன்ற பல ஊர்களைச் சார்ந்த மக்களும் தீமிதியில் பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

மறுநாள் விடையாற்றி நடைபெறும். காலை பத்து மணியளவில் கொடியிறக்கிய பின் கொடி மரத்துக்கும், தெய்வங்களுக்கும், சாமியாடிகளுக்கும் காப்பவிழ்ப்பு நடைபெறும். பின்னர் அம்மன் உற்சவர் வீதியுலா நடைபெறும். அப்போது மஞ்சள் நீராட்டு விழா நடைபெறும் வழக்கம் உள்ளது. மஞ்சள் கலந்த நீரை உறவினர்கள், நண்பர்கள் மேல்

ஊற்றி மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். இந்நிகழ்ச்சி முடிந்ததும் காப்புக் கயிறுகளையும், கொடித் துணியையும், அம்மன் கருவறையில் வளர்த்த முளைப்பாரியையும் சக்திக்கரக நீரையும் எடுத்துச் சென்று பிற்பகல் வேளையில் தஞ்சாவூர் புது ஆற்றில்விட்டு விடுவார்கள்.

விடையாற்றியன்றி இரவு இடும்பன் பூசை நடைபெறும். தீமிதி நடைபெற்ற குழியின் முன்பாகச் சாமியாடிகள் சேவல் கோழியை அறுத்துப் பலியிட்டு இறைவணக்கம் செலுத்துவார்கள்; பொங்கலிட்டு வழிபடுவார்கள். கோழியின் இரத்தத்தை ஒரு சட்டியில் பிடித்து அதில் பொங்கல் சோற்றைக் கலந்து அம்மன் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களின் நான்கு திசைகளுக்கும் சென்று உதிரச்சோறு வீசுவார்கள்.

தீமிதி விழா கால்நடை வளர்ப்புச் சமூகத்தில் உருவானதாக அறிஞர்கள் கருதுகின்றனர். பெருவாரியான கால்நடைகள் நோயினால் இறப்பதைத் தடுக்கத் தீமிதிச் சடங்கு பிறந்திருக்க வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் சிறியூர், இம்பிய மரஹட்டி ஆகிய ஊர்களில் அம்மன் கோயில்களிலும் ஜக்கனாரை, நெடுகுளா, தேனாடு ஆகிய ஊர்களில் உள்ள சிவன் கோயில்களிலும் தீமிதித் திருவிழாவன்று கால்நடைகளைத் தீக்குண்டத்தில் அழைத்துச் செல்வர் (இரவிச்சந்திரன், சி.மா., 2004:97).

அங்காளம்மன் கோயில் நிர்வாகத்தை மேற்கொள்ளும் வகையில் எம்.பாலு தலைவராகவும், கே.முனியப்பன் செயலாளராகவும், கே.சண்முகம் பொருளாளராகவும் இருந்து கோயிலைக் கவனித்து வருகின்றனர். இக்கோயிலுக்கென்று தனியாகச் சொத்துகள் எதுவும் இல்லை. கோயிலுக்குரிய திடலைக் கடைகளுக்கு வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். அதிலிருந்து வாடகைப் பணம் வருகிறது. கோயில் முகப்பு மண்டபத்தையும் திருமண நிகழ்ச்சிகளுக்கு வாடகைக்கு விடுகிறார்கள். உண்டியலில் கிட்டும் வருமானப் பணம், உபயதாரர்கள் அளிக்கும் நன்கொடைகள் போன்றவற்றில் கிட்டும் வருமானத்தைக் கொண்டே கோயில் செலவுகள் மேற்கொள்ளப்பெறுகின்றன. இரண்டு அர்ச்சகர்களும் கணக்கர் ஒருவரும் கோயில் பணியாளர்களாகவுள்ளனர்.

அந்தணர்களே அங்காளம்மன் கோயில் அர்ச்சகர்களாக உள்ளனர். அர்ச்சனை வடமொழியில் நடைபெறுகிறது. உயிர்ப்பலிகள் தடை செய்யப் பெற்றுள்ளன. உயிர்ப்பலியிட்டு வழிபட விரும்புவோருக்குக் கோயிலுக்கு அப்பால் அமைக்கப்பெற்றுள்ள முனீஸ்வரனுக்கு உயிர்ப்

பலியிட்டு வழிபட அனுமதி வழங்கப்பெறுகிறது. கோயில் வாயிலில் அம்மன் காவல் தெய்வங்களாக நிறுத்தப்பெற்றுள்ள மதுரைவீரன் மற்றும் பாவாடைராயன் சிற்ப வடிவங்கள் வண்ணமேற்றப்பெற்ற நிலையில் காட்சியளிக்கின்றன. இத்தெய்வச் சிலைகளின் மார்புப் பகுதிகளில் பூணூல் வரையப் பெற்றுள்ளன. அங்காளம்மன் பற்றிய கருத்துருவாக்கமும் கோயில் வழிபாட்டு முறைகளும் அயல்நிலை நோக்கித் திரிபடையும் சூழலில் உள்ளன.

சிறு தெய்வமா, பெருந்தெய்வமா என்று அறுதியிட்டுரைக்க முடியாதபடி மிகச் சில தெய்வங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று காமாட்சி அம்மன் ஆகும். பழம் பெரும் கோயில்களில் ஒன்றான காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் ஒரு பெருந்தெய்வக் கோயிலாகும். ஆயினும் தமிழ் நாட்டின் கிராமப்புறங்களில் காமாட்சியம்மன் பிராமணப் பூசையின்றி இரத்தப்பலி பெறும் சிறு தெய்வமாகவே காணப்படுகிறது. எனவே, காமாட்சியம்மன் முதலில் சிறு தெய்வமாக இருந்து, இடைக்காலத்தில் பெருந்தெய்வமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பார் தொ.பரமசிவன் (2004:125).

சிறு தெய்வங்களில் மாரியம்மன், அய்யனார் போன்றவை பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வங்களை இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்று கூறுவர். இக்கருத்தை கு.ஜோஸ்பின் கலா, தான் எழுதியுள்ள 'மாரியம்மன் இடைநிலை தெய்வம்' என்னும் கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார் (சக்திவேல், சு., 1995:226).

தஞ்சாவூர் மேலவஸ்தாச்சாவடி எம்.ஜி.ஆர். நகரில் அமைந்திருக்கும் அங்காள ஈஸ்வரியம்மனுக்கும் மக்கள் தீமிதி வழிபாடு நிகழ்த்துகின்றனர். தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து திருச்சி செல்லும் சாலையில் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் மேல வஸ்தாச்சாவடி அமைந்துள்ளது.

பர்மாவில் இருந்து அகதிகளாக வந்தவர்கள் 1965இல் மேல வஸ்தாச்சாவடி பகுதியில் குடியமர்த்தப் பெற்றுள்ளார்கள். இப்பகுதி அண்ணாநகர், புதுக்காலனி எனப் பெயரிடப்பெற்று அழைக்கப் பெற்றுள்ளது. பிற்காலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களும் இப்பகுதியில் குடியமர்ந்துள்ளார்கள்.

காலப்போக்கில் அரசியல் சூழல் காரணமாக பர்மா அகதிகள் வாழ்ந்து வந்த அண்ணா நகர், புதுக்காலனி என்பது தற்காலத்தில் அண்ணாநகர், எம்.ஜி.ஆர். நகர் என்னும் பெயரில் இரு நகர்களாகத் திகழ்கிறது. எம்.ஜி.ஆர் நகரில் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த தேவர் சமூகத்தினர் கூடுதலாக வாழ்ந்து வருகின்றனர். அண்ணாநகரில் இரு தெருக்களும் எம்.ஜி.ஆர். நகரில் ஐந்து தெருக்களும் உள்ளன. இப்பகுதியில் செட்டியார், வெள்ளாளர், நாயுடு, தேவர், ஆதிதிராவிடர் சமூகத்தைச் சார்ந்தவர்களும் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

எம்.ஜி.ஆர் நகர் இரண்டாம் தெரு, மூன்றாம் தெருவிற்கு இடைப்பட்ட பகுதியில் அங்காள ஈஸ்வரியம்மன் கோயில் உள்ளது. தொடக்க காலத்தில் கோயிலிருக்கும் இடத்தில்நின்றிருந்த கொன்றை மரத்தடியில் ஒரு திரிசூலத்தை வைத்து அங்காள ஈஸ்வரியம்மனாக வழிபட்டு வந்துள்ளனர். பிற்காலத்தில் அம்பாளுக்குக் கற்சிற்ப வடிவமைதியைத் தோற்றுவித்துள்ளார். தற்போது கீற்றுக் கொட்டகையில் அம்மனை வைத்து வழிபடுகின்றனர். இந்த அம்மனுக்கான தோற்றக்கதைகள் எதுவும் மக்களிடம் வழக்கில் இல்லை.

அங்காள ஈஸ்வரியம்மன் கோயில் கிழக்குத் திசை நோக்கி அமைந்துள்ளது. கோயிலினுள் வீற்றிருக்கும் அம்மன் மூலவர் இடப் பகுதியில் ஐம்பொன்னாலான உற்சவர் வடிவம் காணப்படுகிறது. கோயில் வாயிலின் இடப்பகுதியில் சிறிய விநாயகர் சிலை உள்ளது. அம்மன் சன்னிதி எதிரே நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகியவை அமைந்துள்ளன. கோயில் எதிராக அமைந்திருக்கும் திடல் பகுதியில் வலப்பக்கமாகச் சிறிய மேடை அமைக்கப்பெற்று அதில் ஒரு கல்லை நட்டு அருகில் ஒரு வேலையும் வைத்துள்ளார்கள். இந்தக் கல்வடிவத்தையே முனீஸ்வரனாகக் கருதி வழிபடுகின்றனர். முனீஸ்வரன் வலப்பகுதியில் ஒரு மேடை எழுப்பப்பெற்று அதிலும் ஒரு கல் ஊன்றப்பெற்றுள்ளது. இதனைப் பூச்சித் தெய்வம் என்கின்றனர். முனீஸ்வரன் எதிராகச் சற்றுத் தொலைவில் ஒரு கல் நட்டு அதனருகில் ஒரு திரிசூலத்தையும் ஊன்றியுள்ளனர். இத்தெய்வத்தை முன்னடியான் என்று குறிப்பிடுகின்றனர். இப்பகுதி மக்கள் அம்மன் இருக்கும் இடத்தில் பெரிய அளவில் கோயில் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பர்மாவில் இருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு, அக்காலத்தில் அரசு பிழைப்பிற்காகப் படி வழங்கியுள்ளது. அகதிகள் ஏதேனும் வேலைகள் தேடிக் கொள்ளும் வரை, இரண்டு மூன்று மாதங்கள் படியாகப் பணம் வழங்கப் பெற்றுள்ளது. அப்பணம் வழங்குவதற்காகத் தாசில்தார் அண்ணா நகருக்கு வந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்து அனைவருக்கும் படி வழங்குவது வழக்கம். தாசில்தார் அமர்ந்து படி வழங்கிய இடத்தில்தான் தற்போது அங்காள ஈஸ்வரியம்மன் கோயிலமைக்கப் பெற்றுள்ளது.

அம்மன் கற்சிற்ப அமைதி அமர்ந்த கோலத்தில் காணப் பெறுகின்றது. இடது காலை மடக்கி, வலது காலைத் தொங்கவிட்டுள்ள நிலையில் அம்மன் காட்சியளிக்கின்றாள். நான்கு திருக்கரங்களுடன் திகழும் அம்மன் வலப்பகுதி கீழ்ப்புறக் கையில் கத்தியும் மேல்புறக் கையில் உடுக்கும் உள்ளன. இடப்புறக் கீழ்ப்பகுதிக் கை முத்திரை காட்டுகின்றது. மேல்பகுதிக் கையில் மழு காணப்படுகின்றது. மஞ்சள் பட்டாடை அணிவிக்கப்பெற்ற நிலையில் கைகள், கழுத்து, காதுகள், மூக்குப் பகுதிகளில் அணிகலன்களுடன், தலையில் கிரீடத்துடனும் அம்மன் அருள் வழங்கும் தெய்வமாகக் காட்சியளிக்கின்றாள்.

ஐம்பொன்னால் ஆக்கப்பெற்றுள்ள அம்மன் உற்சவர் வடிவம் நின்ற நிலையில் வடிவமைக்கப்பெற்றுள்ளது. அம்மன் நான்கு திருக்கரங்களில் வலக்கைகளில் கத்தியும் சூலமும் காட்சியளிக்கின்றன. இடப்புறக் கைகளில் குங்குமச் செப்பும் உடுக்கும் உள்ளன. தலையில் கிரீடம் எழிலூட்டுகின்றது. விழாக் காலங்களில் உற்சவர் வடிவமே வீதியுலாவிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

இக்கோயில் மக்கள் வழிபாட்டிற்காக நாள்தோறும் காலை ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரையிலும் மாலை ஆறு மணி முதல் எட்டு மணி வரையிலும் திறந்துவைக்கப்படுகிறது.

நாள்தோறும் அம்மனுக்கு மலர்மாலைகள் அணிவித்து விளக்கேற்றி வழிபாடுகள் நடைபெறுகின்றன. வாரநாட்களில் செவ்வாய், வெள்ளி அல்லது மாதம்தோறும் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் வேண்டுதலுக்காக மக்கள் வழிபாடுகள் நிகழ்த்தினால் அம்பாளுக்குச் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் தமிழ்வருடப் பிறப்பு, ஆயுதபூசை, கார்த்திகை தீபம், பங்குனி உத்திரம் போன்ற நாட்களில்

அம்மனுக்குச் சிறப்பு வழிபாடுகள் உபயதாரர் செலவில் நிகழ்த்தப் படுகின்றன. ஆண்டு விழாவாகச் சித்திரை பௌர்ணமி அன்று தீமிதித் திருவிழா நடைபெறுகிறது. பத்துநாள் நடைபெறும் விழாவாகத் தீமிதி வழிபாடு நிகழ்த்தப்படுகிறது.

## தீமிதி வழிபாடு

பொதுவாகப் பெண்தெய்வ வழிபாடுகள் உடல்வளம், மனவளம், மகப்பேறு வளம், பயிர்வளம் இவற்றையே குறிக்கோளாகக் கொண்டு நடைபெறும். அதாவது மக்களையும் பயிர்களையும் நோய் வராமல் காத்தல், வந்த நோயிலிருந்து காத்தல், மனநலக் குறைவைச் சரிசெய்தல், மகப்பேற்று வரந்தருதல், பயிரை நன்றாக விளையச் செய்தல் ஆகியவையே பெண் தெய்வத்தின் கடமைகளாக அமைகின்றன (பரமசிவன், தொ., 2004:126). அங்காள ஈஸ்வரியம்மனையும் மக்கள் வாழ்க்கை நலத்திற்காகவும் வளத்திற்காகவும் வேண்டி வழிபடுகின்றனர். வேண்டுதல்கள் நிறைவேறினால் நேர்த்திக்கடன் செலுத்தும் பொருட்டு தீ மிதித்து வழிபாடு நிகழ்த்துகின்றனர்.

ஆண்டுதோறும் சித்திரை பௌர்ணமி தீமிதித் திருவிழா பத்து நாட்கள் கொண்டாடப் பெறுகின்றது. பத்தாம் நாள் சித்திரை மாதம் பௌர்ணமி நாளன்று விழாவின் முக்கிய நிகழ்வாகத் தீமிதித்தல் வழிபாடு நடைபெறுகிறது. இவ்விழா கோயில்நிர்வாகிகள் பொறுப்பில் நடைபெற்று வருகிறது. ஆர்.பி.குப்புசாமி தலைவராகவும் ஜி.கோதண்டராமன் செயலாளராகவும், ஆர்.சுரேஷ்குமார் பொருளாளராகவும் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் முன்னின்று விழாவிற்கான அனைத்து நிகழ்வுகளையும் செயலாக்கம் செய்கின்றனர்.

கோயில் நிர்வாகிகள் விழாவிற்காக அண்ணாநகர் மற்றும் எம்.ஜி.ஆர். நகரில் வசிக்கும் மக்களிடம் நன்கொடையாகப் பணம் வசூலிக்கின்றனர். இப்பகுதியில் ஏறக்குறைய இருநூற்றைம்பது தலைக்கட்டு உள்ளனர். தலைக்கட்டுக்கு நூற்றொரு ரூபாய் வீதம் நன்கொடை பெறுகின்றனர். சிலர் சிறப்பு நிதியாக ஐநூற்றொரு ரூபாய் அளிப்பதும் உண்டு.

பத்துநாள் திருவிழாவில் முதல் நாள் இரவு எல்லை கட்டும் நிகழ்ச்சி நடைபெறும். அம்மன் குடியிருக்கும் கோயிலைச் சுற்றியுள்ள

தெருக்களின் நான்கு மூலைகளிலும் எலுமிச்சம் பழம் காவு கொடுத்துத் திசை கட்டுவார்கள். பின்னர் ஒன்பது மணியளவில் கொடியேற்றம் நடைபெறும். முதலில் கே.காளிமுத்து என்பவர் சக்திக்கரகம் எடுத்து வருவார். கோயில் எதிரே சற்றுத் தொலைவில் இருந்து பித்தளைக் குடத்தில் எலுமிச்சம்பழம், நாணயங்கள் போட்டு, நீர் ஊற்றி, மேல் பகுதியில் வேப்பிலை, தேங்காய் வைத்து, திருநீற்றுப் பட்டைகளிட்டு, மலர்களால் அலங்கரித்த சக்திக் கரகத்தைத் தலையில் தூக்கிக் கொண்டு வந்து அம்மன் சன்னிதியில் வைத்து முளைப்பாலிகைகளும் அணியப்படுத்தி வைப்பார்கள்.

பின்னர் மஞ்சள் நீரில் நனைத்து காயவைக்கப்பெற்ற ஒன்பது மீட்டர் வெள்ளைத் துணியில் சிங்கம் படம் வரைந்து வைத்திருப்பார்கள். இதனைத் திருவிழாக் கொடியாகப் பயன்படுத்துகின்றனர். கொடித் துணியின் ஒரு மூலையில் தேங்காய், வெற்றிலை, பாக்குடன் ஒன்றரை ரூபாய் தட்சணையும் வைத்துக் கட்டி, கொடிமரத்தில் ஏற்றுவார்கள். கொடிமரத்தின் மேல் நிலைக்குச் சென்றதும் கொடியை மரத்தில் சுற்றி தர்ப்பைப் புல்லால் கட்டுவார்கள். கொடியேற்றி முடிந்ததும் ஒரு மலர்க் கூடையில் உதிரிப்பூக்களை வைத்து, கூடியிருக்கும் மக்களின் மேல் பூசகர் பூக்களை அள்ளி வீசுவார். இதனைப் 'பூப்போடுதல்' என்பர். பின்னர் கொடி மரத்துக்குக் காப்பு கட்டியபின் அனைத்துத் தெய்வங்களுக்கும் காப்பு கட்டுவார்கள். விரலி மஞ்சளை மஞ்சள் நூலில் கட்டி அணிவதைக் காப்பு கட்டுதல் என்பர். அம்மனுக்கு இடதுகையிலும் ஏனைய தெய்வங்களின் திரிசூலங்களிலும் காப்பு கட்டப்பெறும். இறுதியில் கோயில் சாமியாடிகள் காப்பு கட்டிக் கொள்வார்கள். கே.காளிமுத்து (சக்திக் கரகம்), சி.இராமலிங்கம் (வீச்சரிவாள்), சி.கார்த்திக் (சுக்குமாந்தடி), எம்.ரமேஷ் (அக்கினிக்கப்பரை), கே.சந்திரன் (பூச்சித்தடி), கே.கார்த்தி (பூசாரி) ஆகியோர் காப்பு கட்டிக் கொள்வர். முனீஸ்வரன் ஆயுதமாக வீச்சரிவாளும், பூச்சி தெய்வத்தின் ஆயுதமாகப் பூச்சித்தடியும் பாவாடை ராயன் ஆயுதமாகச் சுக்குமாந்தடியும் கருதப்படுகின்றன. அன்றிலிருந்து திருவிழா முடியும் வரை பத்து நாட்களும் காப்பணிந்தவர்கள் கோயிலிலேயே இருக்க வேண்டும். வீட்டிற்குச் செல்லக்கூடாது என்னும் நெறிமுறை பின்பற்றப்படுகிறது.

இரண்டாம் நாள் முதல் எட்டாம் நாள் வரை அண்ணா நகர், எம்.ஜி.ஆர். நகர் தெருக்களில் வசிப்போர்மண்டகப்படி வழிபாடுகள் நிகழும்.

எந்தத் தெருவில் வசிப்பவர்கள் உபயதாரர்களாக இருக்கிறார்களோ அந்தத் தெருவிற்கு அம்மன் உற்சவர் மாலையில் வீதியுலாச் செல்வது வழக்கம். மாட்டுவண்டியில் அம்மன் உற்சவரை வைத்து மலர்களால் அலங்காரம் செய்து உலாவிற்குக் கொண்டு செல்வது வழக்கமாகக் காணப்படுகிறது.

ஒன்பதாம் நாள் இரவு அக்கினிக் கப்பரை எடுக்கும் விழா நடைபெறும். பரந்த மண்சட்டியில் நெருப்பு வளர்த்து அக்கினிக் கப்பரையை அணியப் படுத்துவார்கள். எம்.ரமேஷ் என்பவர் கப்பரையைக் கையில் எடுத்துக்கொண்டு தெருக்களில் வலம்வருவார். அம்மன் சன்னிதியில் வைத்திருக்கும் சக்திக் கரகத்தை எடுத்துக் கொண்டு கே.காளிமுத்து என்பவரும் உடன்வருவார். அவ்வமயம் தெருவாசிகள் இவர்களின் கால்களில் மஞ்சள் நீரை ஊற்றி வணங்குவார்கள். இவர்களும் மக்களுக்குத் திருநீறு அளித்து அருள்வாக்குக் கூறுகின்ற மரபும் உள்ளது.

பத்துநாட்கள் நடைபெறும் விழாவில் பத்தாம் நாள் முக்கிய வழிபாட்டு முறையாகத் தீமிதி வழிபாடு நிகழ்கிறது. கோயில் நிர்வாகக் குழுவினர் தீமிதிக்குத் தேவையான விறகுகளை, இறையன்பர்கள் விழாவிற்காக அளித்த நன்கொடைப் பணத்திலிருந்து வாங்குகின்றனர். தோராயமாக இரண்டு டன் வரையிலான வேப்பமர விறகுகள் தீக்குழிக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

அங்காள ஈஸ்வரியம்மன் சன்னிதி முன்பாக அமைந்திருக்கும் திடலில் தீக்குழி அமைக்கப்படும். பத்தொன்பது அடி நீளமும் ஏழரையடி அகலமும் ஒரு அடி ஆழத்திலும் கிழக்கு மேற்காகத் தீக்குழி உருவாக்கப்படுகிறது. நெருப்புக்குழி முன்பாக இரண்டரை அடி நீளம், மூன்றடி அகலம், ஒரு அடி ஆழத்தில் பால்குழி வடிவமைக்கப்படும்.

தீமிதியன்று பகல் பன்னிரண்டு மணியளவில் விறகுகளுக்கு எரியூட்டப் பெறும். அம்பாள் முன்பாக வேப்பமர இலைகளைப் பரப்பி அதன் மேல் வாழை இலை போட்டு அதன்மேல் சந்தனமரக்குச்சு, வேப்பங் குச்சுகளைப் போட்டு நெருப்பேற்றுவார்கள். பின்னர் சாமியாடி கே.காளிமுத்து என்பவர் அம்பாளை வழிபட்டு தன் தோள் துண்டில் வாழை இலையோடு நெருப்புக் கனல்களை, தப்பு மேளத்தோடு எடுத்துச்சென்று தீக்குழியில் அடுக்கி வைக்கப்பெற்றிருக்கும் விறகுகளின் அடியில் வைத்து எரியூட்டுவார். விறகுகள் நன்கு எரிந்த பின்னர் கம்புகளைப் பயன்படுத்தி நெருப்புக் கனல்களைக் குழி முழுமைக்கும் பரப்பி

சரிப்படுத்துவர். கனல்களில் நீறுபூக்காதவாறு விசிறிகளால் வீசி பக்குவப் படுத்துவார்கள்.

பத்தாம் நாள் சித்திரை பௌர்ணமியன்று நண்பகல் இரண்டு மணிக்கு மேல், புது வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் அமைந்து விளங்கும் வலம்புரி பாலசச்சந்திர விநாயகர் கோயில் முன்பாக அங்காளம்மன் அன்பர்கள் அனைவரும் கூடுவார்கள். அங்கிருந்து சக்திக்கரகம் முன்னே வர அதனைத் தொடர்ந்து அடியவர்கள் அனைவரும் ஊர்வலமாக அங்காளம்மன் ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டு வருவார்கள். தீமிதிப்பவர்கள் மஞ்சள் ஆடைகள் அணிந்து, கழுத்தில் மலர் மாலைகளும் சூடிக் கொள்வார்கள். ஊர்வலத்தில் சிலர் பால் குடத்துடனும், சிலர் அலகு குத்தியும் வருவதுண்டு. வீச்சரிவாள், சுக்குமாந்தடி, பூச்சித்தடி முதலானவைகளை எடுத்துக் கொண்டு கோயில் சாமியாடிகளும் உடன்வருவார்கள். ஊர்வலத்தின் இறுதியில் அலங்கரிக்கப்பெற்ற மாட்டு வண்டியில் அம்மன் உற்சவர் வந்து கொண்டிருக்கும்.

அன்று முழுவதும் மக்கள் பலர் அம்பாளுக்கு வேண்டுதல்களை நிறைவேற்றி மகிழ்வார்கள். மாவிளக்குப் போடுதல், முடியிறக்குதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும். தம்பதியர்கள் சிலர் கரும்புக்கட்டைத் தோளில் சுமந்துகொண்டு, அதில் தொட்டில் கட்டி குழந்தையைப் போட்டு அங்காளம்மனைச் சுற்றி வலம் வந்து வழிபட்டுவேண்டுதலை நிறைவேற்றுவார்கள்.

மாலை ஆறுமணியளவில் ஊர்வலம் தீக்குழியை வந்தடையும். தீமிதிக்க வந்திருப்பவர்கள் அங்காளம்மனுக்கு ஐந்து ரூபாய் காணிக்கை செலுத்தி ஆலய நிர்வாகத் தலைவரிடம் மஞ்சள் காப்புநூலை வாங்கிக் கைகளில் கட்டிக் கொள்வார்கள். ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடதுகையிலும் கட்டிக் கொள்வார்கள். மாலை ஆறேகால் மணியளவில் சாமியாடி சி.இராமலிங்கம் தீக்குழி முன்பாக வீச்சரிவாளால் பூசனிக்காயை வெட்டி காவு கொடுப்பார். தலையில் சக்திக் கரகத்தைச் சுமந்துநிற்கும் கே.காளிமுத்து கையில் வைத்திருக்கும் வேப்பிலையையும் எலுமிச்சம் பழத்தையும் நெருப்புக்கனல்களின் மீது வீசியவாறு முதலில் தீமிதி நிகழ்த்துவார். அவர் தீமிதித்து தீக்குழி முன்பாக வந்து நின்று கொண்டு, அடுத்தடுத்து தீமிதிக்க முனைவோர் நெற்றியில் திருநீறு பூசி வாழ்த்தியனுப்புவார். தீமிதித்துவரும் அடியவர்கள் பால் குழியில் கால்களை

நனைத்தவாறு கரையேறி கைகளில் கட்டியிருக்கும் காப்புகளை அறுத்து கொடிமரத்தடியில் வைத்துவிட்டு அங்காளம்மனை வணங்கி அருள்பெறுவர். தீமிதிப்பவர்களைப் பார்க்கின்ற வகையில் அம்மன் உற்சவர் வடிவம் தீக்குழியின் எதிராக வைக்கப்பெற்றிருக்கும். விளார் சாலை, அண்ணா நகர், அங்காள ஈஸ்வரியம்மன், பங்குனி உத்திரத் தீமிதித் திருவிழாவில் தீமிதி வழிபாட்டிற்குரிய பூசகராகப் பொறுப்பேற்று, ஆண்டுதோறும் அடியவர்களின் தீமிதி வழிபாட்டைத் திறம்பட நடத்தி வருகின்ற ஆர்.வீரப்பன் என்பவரே மேலவஸ்தாச்சாவடி, அண்ணாநகர், எம்.ஜி.ஆர். நகர் அங்காள ஈஸ்வரியம்மன் சித்திரை பௌர்ணமி தீமிதி வழிபாட்டையும் பொறுப்பேற்று நடத்துகின்றார். பத்து நாட்கள் நடைபெறும் தீமிதித் திருவிழாவில் ஐந்தாம் நாள் மற்றும் தீமிதித் திருநாளன்று உபயதாரர்கள் செலவில் விழாவிற்கு வருகைதரும் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது. மற்ற நாட்களில் அன்னைக்குப் படைக்கப்படும் சர்க்கரைப் பொங்கல்,சுண்டல் முதலானவற்றை வழிபாட்டிற்கு வந்திருப்பவர்களுக்குப் பிரசாதமாகப் பகிர்ந்தளிப்பார்கள்.

தீமிதி வழிபாட்டிற்கு மறுநாள் விடையாற்றி நடைபெறும். காலை ஒன்பது மணியளவில் கொடியிறக்கித் தெய்வங்களுக்குக் கட்டப் பெற்றிருக்கும் காப்புகளை அகற்றுவார்கள். சாமியாடிகளும் காப்பகற்றுவர். பின்பு கொடிமரத்தடியில் அம்பாள் உற்சவரை வைத்து மஞ்சள் நீரூற்றி வழிபடுவர். இதனைத் தொடர்ந்து உற்சவர் வீதியுலா நிகழும். கோயில் சாமியாடிகள் மீதும் முறையுடையவர்கள் மீதும் மக்கள் மஞ்சள் நீரை ஊற்றி மகிழ்வார்கள். இறுதியில் தாம்பாளம் ஒன்றில் காப்பு நூல்களையும் முளைப்பாலிகைகளையும் வைத்துப் பூசகர் எடுத்துச் செல்வார். உடன் சக்திக் கரகமும் எடுத்துச் செல்லப்படும். மேலவஸ்தாச்சாவடி சாலைகள் சந்திப்புப் பகுதிக்கு அருகில் உள்ள குளத்துநீரில் காப்புநூல்களையும் முளைப்பாலிகைகளையும் சக்திக் கரகத்திலுள்ள நீரையும் விட்டு விடுவார்கள்.

அன்றிரவு ஒரு மணியளவில் இடும்பன் பூசை நடைபெறும். தீமிதி நடைபெற்ற தீக்குழி முன்பாகச் சேவல் கோழியை அறுத்து இடும்பன் சாமியை வணங்குவார்கள். அறுத்த சேவல் கோழியின் இரத்தத்தைப் பச்சை மண் பானையில் பிடித்து, அதில் பொங்கலிட்ட சோற்றைக் கலந்து கோயிலைச் சுற்றி அமைந்திருக்கும் தெருக்களின் நான்கு திசைகளுக்கும்

சென்று உதிரச்சோற்றைப் பூசகர் அள்ளி வீசுவார். தொடர்ந்து பாவாடைராயன் வழிபாடு நடைபெறும். அம்மன் சன்னிதியில் தெற்குத் திசை நோக்கி பெட்டைக் கோழியை அறுத்து முட்டையும் கருவாட்டுக் குழம்பும் வைத்து பல்லியம் போட்டு பாவாடைராயனை வணங்குவார்கள். பின்பு விழாவிற்காகக் கோயிலில் தங்கியிருந்தவர்கள் அனைவரும் அதிகாலை வேளையில் வீட்டிற்குச் செல்வார்கள். அவர்களை வீட்டிலுள்ளோர் ஆரத்தி எடுத்து வணங்கி உள்ளே அழைத்துச் செல்வர்.

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் அங்காளம்மனுக்கு ஆண்டிற்கொருமுறை அலகு நிறுத்தல் என்ற விழா கொண்டாடப் படுகின்றது. இந்நிகழ்ச்சியின்போது ஒரு பானையின் உச்சியில் நேராக ஒரு கத்தி குறிப்பிட்ட நேரம் வரை நிறுத்தி வைக்கப்படுகின்றது. ஒரு ஊரில் (இருகூர்) பெண் தெய்வம் மணமகளாக அலங்கரித்து வைக்கப் படுகிறது. குழந்தை இல்லாத பெண்கள் பானையில் உள்ள நீரைப் பெற்றுக் கொள்கின்றனர். உண்மையாகவே திருமணமாகாவிட்டாலும் பெண் தெய்வத்தையும் அவளுடைய கணவனையும் இணைத்து வைப்பதனால் பக்தர்கள் தீமிதிக்கும்போது அவள் உள்ளம் குளிர்ந்திருப்பாள் என்று நம்பப்படுகிறது (எவலின் மாசிலாமணி மேயர், 1991:235).

மக்களிடையே ஒற்றுமைகளையும், உளமார்ந்த அன்பையும் நல்லது செய்ய வேண்டும் என்ற நட்புணர்ச்சியையும் அல்லது செய்யின் அவலமே மிஞ்சும் என்ற அச்ச உணர்ச்சியையும் இத்தேவதை வழிபாடுகள் ஏற்படுத்தியிருக்கின்றன. சமுதாயக் கூட்டுறவுக்கு கலைகளின் வளர்ச்சிக்கும் இத்தேவதை விழாக்கள் வழி அமைக்கின்றன (சண்முகசுந்தரம், சு., 1996:6).

தமிழகத்தில் பரவலாகப் பல பகுதிகளிலும் தீமிதி வழிபாடு நிகழ்த்தும் வழக்கம் காணப்பெறுகின்றது. நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்டத்தைச் சார்ந்த நன்செய் இடையார் என்னும் ஊரிலுள்ள மாரியம்மன் கோயிலிலும் தீமிதி வழிபாடு ஆண்டுதோறும் கொண்டாடப் பெறுகிறது. இக்கோயில் பூசாரி ச.ராஜலிங்கம் மற்றும் இவ்வூரைச் சார்ந்த ர.பன்னீர்செல்வன் ஆகியோரிடமிருந்து சு.மீனாட்சிசுந்தரம் (முனைவர் பட்ட ஆய்வாளர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்) சேகரித்தளித்தத் தரவுகள் அடிப்படையில் நன்செய் இடையார் மாரியம்மன் கோயில் தீமிதி வழிபாடு விளக்கப்பெறுகிறது.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்டத்தில் வேலூரிலிருந்து கிழக்குத்திசையில் மூன்று கிலோமீட்டர் தொலைவில் நன்செய் இடையார் அமைந்துள்ளது. இவ்வூரின் மையப்பகுதியில் நன்செய் இடையார் மாரியம்மன் கோயில் உள்ளது.

முற்காலத்தில் நன்செய் இடையார், கொம்புக்காரத் தெருவில் முயல் மணியக்காரர் மனைவி மருதாயம்மாள் அவித்த மொச்சைக் கொட்டை வணிகம் நடத்தி வந்துள்ளார். இவர் நாள்தோறும் காலையில் நான்கு மணிக்கு எழுந்து காவிரியாற்றுக்குச் சென்று குளித்துவிட்டு மண் கும்பத்தில் தண்ணீர் எடுத்து வந்து சமையல் செய்வது வழக்கம். இவ்வாறு வாழ்ந்து வருகையில் ஒருநாள் மருதாயம்மாள் ஆற்றில் குளித்துவிட்டு கும்பத்தில் தண்ணீர் எடுக்கும்போது ஆற்றில் வந்தக் கல் கும்பத்திற்குள் வந்து விழுந்துள்ளது. மருதாயம்மாள் அக்கல்லை எடுத்து வெளியே போட்டுள்ளார். மறுபடியும் கும்பத்தில் தண்ணீர் எடுத்தபோது மீண்டும் அக்கல் கும்பத்திற்குள் வந்து விழுந்துள்ளது. மருதாயம்மாள் மீண்டும் அக்கல்லை எடுத்து வெளியே போட்டார். மறுபடியும் கும்பத்தில் தண்ணீர் எடுத்தபோது அந்தக்கல் கும்பத்திற்குள் புகுந்துவிட்டது. இத்தகைய நிலையில் அவர் கல்லை வெளியேற்றுவதும் அது மீண்டும் கும்பத்தினுள் புகுவதுமாக இருந்தது. இச்செயல் மீண்டும் மீண்டும் நிகழ்ந்ததைக் கண்ட மருதாயம்மாள் அக்கல் தெய்வீக அம்சம் கொண்ட கல் எனக் கருதி ஆற்றிலிருந்து எடுத்து வந்தார்.

அன்றிரவு மருதாயம்மாளின் கனவில் மாரியம்மன் தோன்றி 'ஆற்றில் கல்லாக வந்தது நான்தான் என்றும், தன்னைக் கொம்புக்காரத் தெருவிற்கு வடக்குத் திசையிலுள்ள கள்ளிச் செடிகளும் கற்றாழையும் நிறைந்துள்ள இடத்தில் வைத்து, நாள்தோறும் அவித்த மொச்சைக் கொட்டையை வைத்துப் பூசை செய்து வழிபட வேண்டும்' என்று கூறியுள்ளது.

அடுத்தநாள் காலையில் மருதாயம்மாளும் அவரது கணவரும் கள்ளி, கற்றாழைகள் நிறைந்துள்ள இடத்தில் ஒரு பகுதியைச் சுத்தம் செய்து அவ்விடத்தில் அக்கல்லை வைத்து மாரியம்மனாகக் கருதி வழிபட்டனர். அம்பாள் விரும்பிக் கேட்ட மொச்சை தானியத்தையே படையலுணவாக வைத்துப் பூசை செய்தனர். மொச்சையை விரும்பிக் கேட்டதால் 'மொச்சைக்கொட்டை மாரியம்மன்' என்ற பெயரும் நன்செய் இடையார் மாரியம்மனுக்குண்டு.

காவிரியில் வந்த மாரியம்மனை வைத்து வழிபடத் தொடங்கிய பின்னர் மருதாயம்மாளுக்கு மொச்சைக் கொட்டை வணிகம் பெருகியது. மக்களிடம் மாரியம்மன் புகழ் பரவியது. வழிபடுவோர் எண்ணிக்கையும் கூடியது.

மாரியம்மன் வழிபாடு வளர்ச்சியடைந்த பின்னர் ஊர்மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அம்மனுக்குக் கோயில் எழுப்பினர். பங்குனி மாதத்தில் பூக்குண்டத் திருவிழா நடத்தினர். அந்தவிழாவில் மருதாயம்மாளின் கணவர் முயல் மணியக்காரர் அக்கினிச்சட்டி யெடுத்தாடினார். தற்போது பங்குனித் திருவிழாவின்போது மணியக்காரர் பரம்பரையைச் சார்ந்த மலையண்ண கண்டர் மகன்கள் அக்னிச் சட்டியெடுத்து ஆடி வருகின்றனர்.

**காவிரியில் பிறந்தவளாம் கருணை உள்ளம் கொண்டவளாம்**
**அக்னி மாரியம்மா அறங்காக்கும் தேவியம்மா**
**நீரெங்கும் நிறைந்தவளாம் நிலத்தினில் வளர்ந்தவளாம்**
**இடையாற்று மாரியம்மா பிள்ளை மனம் படைத்தவளாம்**

என்னும் மாரியம்மன் வழிபாட்டுப் பாடலில் அம்மன் காவிரியில் பிறந்ததாகக் கருத்துப் பதிவுள்ளது.

மேற்கண்டவாறு நன்செய் இடையார் மாரியம்மன் தோற்றம் பற்றிய வாய்மொழிக்கதை அப்பகுதி மக்களிடையே வாய்மொழி வழக்காறாகவுள்ளது.

நன்செய் இடையார் மாரியம்மன் கோயிலில் பூமிதித் திருவிழா தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் பதினெட்டு நாள் கொண்டாடப் பெறுகிறது. ஆண்டுதோறும் மாசி மாதம் கடைசி ஞாயிற்றுக் கிழமையில் காப்புகட்டு நடைபெறும். காப்பு கட்டிய நாளிலிருந்து பதினாறாம் நாள் பூமிதி நடைபெறும். பதினேழாம் நாள் கிடா வெட்டும் பதினெட்டாம் நாள் மஞ்சள் நீராடல்நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

மாரியம்மன் சன்னிதி எதிரே வீதியில் பூமிதிப்பதற்காகப் பூக்குழி வெட்டப்படுகிறது. ஐம்பத்திரண்டடி நீளம், நான்கடி அகலம் ஒரு அடி ஆழத்தில் பூக்குழி அமைக்கப்படுகிறது. பால்குழி நான்கடி நீளம், நான்கடி அகலம் ஒரு அடி ஆழத்தில் அமைக்கப்பெறும்.

இக்கோயில் பூமிதி வழிபாட்டிற்கு மக்களே விறகுகளை அளிக்கின்றனர். வேப்பமரம் மற்றும் புளியமர விறகுகள் தீமிதிக்குப் பயன்படுத்தப்பெறுகின்றன. பழைய நுகத்தடி போன்றவற்றையும் விறகுக்காக மக்கள் வழங்குகின்றனர். விறகில் ஆணி, இரும்பு போன்றவை இருந்தால் அவற்றை அகற்றிவிடுவார்கள். பூமிதிப்பதற்கு இரண்டு டன் வரை விறகுகள் தேவைப்படுகின்றன.

பூமிதியன்று விடியற்காலையில் ஆற்றுக்குச் சென்று தீர்த்தக்குடம் எடுத்து வந்து அம்பாள் மூலவருக்கு அபிசேகம் செய்து மலர் அலங்காரங்கள் செய்வர். பின்னர் கு.கணேச ஐயர் என்பவர் வைக்கோல் வைத்து அதன்மீது சூடம் ஏற்றி பூக்குழிக்கு எரியூட்டுவார். எரிந்த விறகுகளை மூங்கில் கம்பால் உடைத்து சிறிய கனல் துண்டுகளாக்கி பூக்குழி முழுவதும் பரப்புவார்கள்.

வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் பூமிதிப்பதற்கு அணியமானவர்கள் நோன்பு மேற்கொண்டு காவிரிக்கரையில் கூடுவார்கள். அங்குச் சிலர் திருமஞ்சள் பொடியை அடியவர்களுக்குத் தானமாக வழங்குவதும் உண்டு. பூமிதி இறங்குபவர்களுக்கு உறவினர்கள் மரியாதை நிமித்தமாக மஞ்சள் வேட்டி, துண்டு மற்றும் மாலைகள் வாங்கி அளிப்பதுண்டு. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆற்றில் குளித்து கையில் காப்பு கட்டிக்கொண்டு மஞ்சள், சிவப்பு அல்லது கருப்பு வண்ண ஆடையுடன் கோயிலுக்கு வருவதற்காக ஆற்றின் கரையில் ஈரத் துணியுடன் காத்து நிற்பார்கள்.

அன்று பிற்பகல் இரண்டு மணியளவில் மா.வேல்பூசாரி மாரியம்மன் கோயிலிலிருந்து அருகிலிருக்கும் ராசா கோயிலுக்குச் சென்று மணிவேலை எடுத்துக் கொண்டு காவிரி ஆற்றுக்குச் செல்வார். கோடந்தூர் மணிவேல், மாரியம்மனின் காவல் தெய்வமாகக் கருதப் படுகிறது. ஆற்றுக்குச் செல்கின்ற வழியில் ஆட்டுக்கடா பல காவு கொடுக்கப்படுகின்றன. மா.வேல் பூசாரியும் தேங்காய் உடைக்கும் பூசாரியும் மாரியம்மன் கோயில் வழியாகச் செல்லும்போது அவர்களுடன் மாரியம்மன் பூந்தேரும் ஆற்றுக்குச் செல்கிறது. ஆற்றுக்கு வருகின்ற வேலையும் மாரியம்மன் பூந்தேரையும் வழிபட்டபின்னர் பூமிதிப்பதற்கு ஆயத்தமாகவுள்ளோர் கோயிலை நோக்கிச் செல்வார்கள்.

பூந்தேரிலுள்ள அம்மன் உற்சவருக்கு ஆற்றில் பல்வேறு அபிசேக ஆராதனைகள் நடைபெறும். மணிவேலைப் பூந்தேரின் முன் பாகத்தில் ஊன்றி அதற்கும் ஆராதனைகள் செய்வர். அருள் வரப்பெற்ற நிலையிலிருக்கும் மா.வேல் பூசாரியின் தலையில் தேங்காய் உடைக்கும் பூசகர் மூன்று தேங்காய்களை உடைத்த பின் பூந்தேர் மாரியம்மன் கோயிலை நோக்கிச் செல்லும்.

பூந்தேர் கோயிலை வந்தடைந்ததும் கோயில் பூசகர் முதலில் பூக்குண்டத்தில் இறங்கி நடுப்பகுதியில் வந்ததும் கையில் வைத்திருக்கும் தட்டில் நெருப்பை அள்ளிக்கொண்டு கருவறைக்குள் செல்வார். அங்கு அம்பாள் மூலவர் வடிவத்தில் வெண்ணெய் பூசப்பெற்றிருக்கும். பூசகர் அம்பாள் முன் நெருப்புக் கனல்கள் உள்ள தட்டை வைப்பார். அம்பாள் மீதுள்ள வெண்ணெய் நெருப்புக் கனல்களின் சூடு தாக்கிய பின்னரும்கூட உருகாமலிருக்கும். அவ்வாறின்றி உருகினால் அந்த ஆண்டில் அடியவர்களுக்குக் கேடுகள்விளையும் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகிறது.

கோயில் பூசகர் முதலில் பூமிதித்தவுடன் அவரைப் பின்பற்றி ஆயிரக்கணக்கான அடியார்கள் பூக்குழி இறங்குவார்கள். இக்கோயிலில் பெண்கள் பூமிதிப்பதில்லை. அதற்குப் பதிலாகத் தலையில் பூவாரி கொட்டிக் கொள்கின்றனர். ஈரமான ஆடையுடன் இருக்கும் பெண்கள் சேலையின் முந்தானையைத் தலைக்கு மேல் பிடித்துக் கொள்வர். ஆண்கள் சிலர் பூக்குழியிலுள்ள நெருப்புக்கனல்களைத் தட்டில் எடுத்து முந்தானையின் மேல் போடுவார்கள். கனல்கள் கீழே விழுந்ததும் அவர்கள் அம்மனை வணங்கிச் செல்வார்கள். ஆண்கள் பூக்குழி இறங்குதலும் பெண்கள் பூவாரிக் கொட்டிக் கொள்ளும் நிகழ்ச்சியும் ஒரே நேரத்தில் நடைபெறுகின்றன. பூமிதிப்போர் பால்குழியில் கால் நனைத்து கோயிலுக்குள் சென்று அம்மனை வழிபட்டு கையில் கட்டியிருக்கும் காப்பை அகற்றிவிட்டு இல்லத்திற்குச் செல்வார்கள்.

அடியவர்கள் அனைவரும் பூமிதித்து முடிந்ததும் அம்பாளுக்கு அபிசேக, ஆராதனைகள் நடைபெறும். அனைவருக்கும் குங்குமம் மற்றும் திருநீறு பிரசாதமாக வழங்கப்படும். மாரியம்மன் கோயிலில் பிராமணர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் பூமிதிப்பதில்லை.

விழாவிற்காக வீடுகள் தோறும் வசூலிக்கும் நன்கொடைப் பணம், உபயதாரர்களின் நன்கொடை, ஊர்மக்கள் அளிக்கும் சிறப்புக் காணிக்கைப் பொருட்கள் முதலானவற்றைக் கொண்டே நிர்வாகத்தார் பூமிதி விழா நிகழ்த்துகிறார்கள். 23.03.2009 அன்று நடைபெற்ற பூமிதி விழாவில், நன்செய் இடையார் அருகமைந்த பதினெட்டுப் பட்டி கிராம மக்களும் பங்கேற்று, நாலாயிரத்திற்கும் மேற்பட்டோர் பூமிதி மற்றும் பூவாரிக் கொட்டும் வழிபாடுகள் நிகழ்த்தியுள்ளனர்.

ஆயுர்வேத மருத்துவம் அண்டத்தைப் போலவே மனித உடலிலும் பஞ்சபூதங்கள் நிறைந்திருப்பதாகவும் வெப்பம் (பித்தம்) நீர் (கபம்), வாயு ஆகிய மூன்று பூதங்களே மிகுதியாக தோஷங்களை (குறைகள்) உருவாக்குகிறது என்றும் கருதுகிறது. ஒரு பூதத்தின் சக்தியைக் குறைக்கவோ அல்லது அதிகரிக்கவோ மற்ற பூதத்தினால் மட்டுமே முடியும். உடல் வெப்பத்தினால் (தீ) உண்டாகும் நோயினை நீரினால் குணமாக்க முடியும். இதைப் போலவே நீரினால் உண்டாகும் நோயைத் தீயினால் குணமாக்க முடியும். இன்று தமிழகத்தில் உடம்பில் இருக்கும் வீக்கத்தைக் குறைக்கத் தீயால் சுடுகின்றனர். உடம்பில் இருக்கும் நீரைத் தீ கட்டுப்படுத்துகிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே வீக்கம் இருக்கும் இடங்களில் தீயால் சுடுகின்றனர். பத்தினித் தெய்வம் சினம் கொண்டதின் காரணமாகத் தீ உருவாகி மதுரை எரிந்தபோது மனிதர்களைக் காப்பாற்றத் தேவர்கள் பத்தினித் தெய்வத்திடம் முறையிட்டனர். பத்தினித் தெய்வம் மழை பொழிய ஆணையிடத் தீ அணைந்த கதையும் ஒரு பூதத்தை மற்றொரு பூதத்தால் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்தது எனலாம் (இரவிச்சந்திரன், சி.மா., 2004:96). தீமிதி விழாவை நாட்டுப்புற மருத்துவ முறையின் விரிவாக்கமாக எண்ணிப் பார்க்கலாம் என்பார் சி.மா.இரவிச்சந்திரன் (2004:97).

அம்மன் கோயில்களில் மட்டுமல்லாது பிற ஆண் தெய்வக் கோயில்களிலும் இசுலாமிய மொஹரம் பண்டிகையிலும் தீமிதி நடைபெறுவதாக அறியமுடிகிறது. தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியாவின் பிற பகுதிகளிலும் (ஆந்திரா, தென் கர்நாடகம், வங்காளம்) ஸ்ரீலங்காவிலும் குறிப்பாகத் தென் ஆசிய நாடுகளிலும் தீமிதி நடைபெறுவதாக அல்ப் ஹில்ட பைட்டல் குறிப்பிடுகிறார் (இராமநாதன், ஆறு., 2006:90).

இசுலாமியர்கள் கொண்டாடி மகிழும் பண்டிகைகளில்–மொஹரம் பண்டிகை குறிப்பிடற்குரியதாகும். இசுலாமியர்களுள் பட்டாணியர் வகையைச் சார்ந்தவர்கள் மொஹரம் பண்டிகையை பஞ்சா எடுத்து நடத்துகின்றனர். தஞ்சாவூர் மாவட்டம், காசவளநாடு புதூர் என்னும் ஊரில் பஞ்சா வழிபாட்டில் தீமிதி நடைபெறுகிறது. மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து மரக்கட்டைகளை எடுத்து வந்து கோயில் முன்பாகப் போட்டு நெருப்பேற்றிக் கனலைப் பரப்புவர். அல்லா சாமி தூக்கியவர் முதலில் மூன்று முறை தீக்குழியில் இறங்குவார். பின்னர் மற்ற சாமிகள், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரும் மூன்று முறை தீக்குழி இறங்குவார்கள். சாமிகள் இறங்கிய தணலின் சாம்பலை எடுத்து வயல்களில் தெளித்தால் விளைச்சல் பெருகும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே உள்ளது (வசந்தா, அ., 2003:187–188).

‘அங்காள ஈஸ்வரியம்மன் வழிபாடு’ என்னும் பொருளில் அமைந்த இப்பகுதியில் தஞ்சாவூர், விளார் சாலை, அங்காள ஈஸ்வரியம்மன் பங்குனி உத்திரத் தீமிதி விழாவும், மேவஸ்தாச்சாவடி அண்ணாநகர்–எம்.ஜி.ஆர் நகர் அங்காள ஈஸ்வரியம்மன் சித்திரை பௌர்ணமி தீமிதி விழாவும் விளக்கமாக விவரிக்கப் பெற்றுள்ளன.

## முடிவுரை

நாட்டுப்புறத் தெய்வ வகைகளுள் காவல் தெய்வங்களும் அடங்கும். வல்லத்தின் வடக்கெல்லைக் காவல் தெய்வமாக 'வல்லத்துக் காளி' என்னும் பெயரில் காளியம்மன் அமைந்துள்ளது. இவ்வம்மன் தோற்றத்திற்கான வாய்மொழிக் கதையில் நரிக்குறவரின மக்கள் இந்த அம்மனை வழிபட்ட செய்தி புலனாகிறது. ஒன்றன்மேல் ஒன்றாக ஏழு பானைகளை அடுக்கி வைத்து பொங்கலிட்டு, எருமைக்கடா பலியிட்டு வழிபட்டுள்ளனர். நரிக்குறவர்கள் காளிதேவியை வைத்து வழிபட்ட இடமாகக் கோயிலில் அமைந்துள்ள ஒரு குறிப்பிட்ட மாடப்பகுதியை அடையாளப்படுத்தியுள்ளனர்.

கி.பி. 947 ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டுச் சான்றின்படி வல்லத்துக் காளி கோயிலை அக்காலத்தைச் சார்ந்ததாகக் கருதமுடிகிறது. கோயில் கருவறை விமானத்தில் குறவர்களின் சுதை சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

நாளடைவில் கோயில் வளர்ச்சியடைந்ததும் அனைத்துத் தரப்பு மக்களும் வழிபடும் தெய்வமாகக் காளியம்மன் திகழ்கிறது. நாடோடிகளாக வாழ்ந்த நரிக்குறவர்கள் எருமைக்கடா பலியிட்டு வழிபட்டதைப்போன்று ஊர்மக்களும் ஆடிக்கழிவு நாளான ஆடிமாதம் கடைசி வெள்ளியன்று இரவு பன்னிரண்டு மணியளவில் எருமைக்கடா பலியிட்டுக் காளியம்மனைத் தற்போதும் வழிபட்டு வருகின்றனர். குறவர்கள் வழிபாட்டின் எச்சமாக இன்றும் கோயிலில் ஆடி–தை அமாவாசை நாட்களில் ஏழு பானைகளை வரிசையாக வைத்துப் பொங்கலிட்டுக் காளியை வழிபடும் வழக்கம் காணப்படுகிறது.

தற்காலத்தில் மேல்நிலையாக்க நெறியில் பயணிக்கும் இக்கோயில் ஸ்தல புராணத்தில் அம்மன் ஏகௌளியம்மனாக மாற்றம் பெற்றுள்ளது. இதற்கான புராணக்கதையும் புனையப் பெற்றுள்ளது. குறவர்கள் எருமைக்கடாவை உயிர்ப் பலியிட்டு வழிபட்ட வல்லத்துக் காளி வழிபாடு மகிஷாசுரமர்த்தனி (எருமைத் தலை அரக்கனைக் கொன்ற காளி) தொன்மத்தோடு உறவு கொள்ளப்பெற்று, தஞ்சாசுரனை அழித்த ஏகௌளியம்மன் வழிபாடாக–சக்தி தேவியின் வழிபாடாக மாற்றம் பெற்றுள்ளது.

இன்றைய நிலையில் பல ஊர் மக்களும் பல சமூகத்தைச் சார்ந்த மக்களும் வணங்கி வழிபாடுகள் நிகழ்த்தும் தெய்வமாக ஏகௌளியம்மன் தோற்றம் பெற்றுள்ளது. பல்வேறு காரணங்களுக்காகப் பல்வேறு வேண்டுதல்களை மேற்கொண்டு மக்கள் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். இதில் ஒன்றாகத் தீமிதி வழிபாடு அமைகிறது.

அம்மனுக்குப் பொருட்களைக் காணிக்கையாகச் செலுத்துதல், மாவிளக்குப் போடுதல், பால்குடம் எடுத்தல் போன்ற வழிபாட்டு நிலைகளைவிட, தன்னை வருத்தி வழிபடுவதன் மூலம் அம்மன் அருள் தனக்கு உறுதியாகக் கிடைக்கும் என்று மக்கள் நம்புகின்றனர். இன்றும் இறைவழிபாட்டிற்காகத் தொலைவிலுள்ள கோயில்களுக்கு மக்கள் நடந்துசெல்வதைக் காணலாம். இதைப்போன்று கோயில் திருச்சுற்றுகளில் உடலை வருத்தி அங்கப்பிரதட்சிணம் செய்வதையும் காணலாம். அலகு குத்தியும் செடல் காவடி எடுத்தும் தங்கள் உடம்பை வருத்துகின்றனர். இத்தகைய நிலையில் உடம்பை வருத்தி வழிபடுவதன் வழி அம்மன் துணை கிட்டும்; தங்களுடைய வாழ்க்கைச் சிக்கல்களை அகற்றுவாள்; கவலைகளைத் தீர்த்து வைப்பாள்; மனக்குறையைப் போக்குவாள். அதன் மூலம் வாழ்க்கை வளமடையும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் பதிவெய்தியுள்ளது. இந்த அடிப்படையில் தங்களை வருத்தித் தீமிதித்து அம்மனை வழிபட எண்ணுவதன் மூலமாகத் தங்கள் வேண்டுதலை அம்பாள் உறுதியாக நிறைவேற்றுவாள்; வாழ்க்கை நலம் பெறும் என்னும் நோக்கத்தில் இன்றும் மக்கள் தீமிதி வழிபாட்டை மேற்கொள்கின்றனர். இவ்வழிபாட்டு மரபை வல்லம் ஏகௌளியம்மன் கோயிலிலும் காணமுடிகிறது.

மேலும், உள்ளக்கோயிலில் அம்பாள் குடியிருக்கும்போது தீமிதித்தால் தேவி காத்துக் கொள்வாள்; எத்தகையத் தீங்கும் நேராது என்று மக்கள் கருதுகின்றனர். அம்பாளை எப்பொழுதும் நெஞ்சில் நினைத்துக் கொண்டிருந்தால் நெருப்புப் போன்று துன்பம் தரக்கூடிய வாழ்வியக்கச் சூழல்களையும் எளிதில் கடந்து சென்றுவிடலாம். அதற்கும் அம்மன் அருள் புரிவாள் என்னும் ஆழமான நம்பிக்கையும் மக்களிடையே காணப்பெறுகிறது.

கிராமப்புறங்களில் நடைபெறும் நாட்டுப்புறத் தெய்வத் திருவிழாக்களில் சாதித் தரப்படிநிலைகள் பேணப்படும் நிலையைக் காணமுடிகிறது. ஏகௌளியம்மன் கோயில் பூசகராக யாதவர் சமூகத்தைச் சார்ந்தவர் பணியேற்றுள்ளார். தீமிதித் திருவிழா நடத்தும் விழாக் குழுவில் வன்னியர், நாயுடு சமூகத்தைச் சார்ந்தவர்கள் பொறுப்பேற்று நடத்துகின்றனர். ஆயின் தீமிதி அன்றிரவு நடைபெறும் எருமைக்கடா பலியிடும் பணி பறையர் சமூகத்தினருக்கு ஒதுக்கப் பெற்றுள்ளது. இச்சமூகத்தைச் சார்ந்தவர்கள் எருமைக்கடாவைப் பலியிட்டு, குழி தோண்டிப் புதைக்கும் வேலைகளைச் செய்கின்றனர்.

முற்காலத்தில் அடித்தள வகுப்பைச் சார்ந்தவர்கள் கோயிலுக்கு வெளியே இருக்கும் சூலத்தை வணங்கி வழிபாடுகள் நிகழ்த்தும் முறையே இருந்துள்ளது. இக்காலத்தில் தோன்றியுள்ள சமூக மாற்றத்தால் அம்மன் வழிபாட்டிற்காக அவர்கள் ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இக்கோயில் வழிபாட்டு முறைகளும் விரிநிலையாக்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. உயிர்ப்பலியின்போது அம்மன் சன்னிதி வாயிலை அடைத்து விடுகின்றனர். திருவிழாக்கால யாக பூசைகளின்போது வேதியர்கள் அழைக்கப்படுகின்றனர். வேதமந்திர முழக்கத்தோடு வடமொழியில் பூசைகளும் நடைபெறுகின்றன.

துரோபதையம்மன் வழிபாடு மகாபாரதக் கதையின் தாக்கத்தால் தோன்றியுள்ளது. நீடாமங்கலம் துரோபதையம்மன் வழிபாட்டில் தீமிதி விழா சிறப்பாக நடைபெறுகிறது. இங்கும் மக்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்காகத் தீமிதி வழிபாடு நிகழ்த்துகின்றனர். இவ்விழாவிலும் சாதியக் கட்டமைப்பைப் பேணுகின்ற சூழலைக் காணமுடிகிறது. அகமுடையார் சமூகத்திற்குச் சொந்தமான இக்கோயிலில் வேளார் சமூகத்தைச் சார்ந்தவர் பூசகராக உள்ளார். தீமிதித்

திருவிழாவில் தீக்குழி விறகுகளுக்கு நெருப்பேற்றுகையில், எரிந்த விறகுகளை உடைத்து, கனல்களைக் குழியில் பரப்புகின்ற பணிகளை நீடாமங்கலத்தைச் சார்ந்த ஆசாரி இனத்தவர்கள் மேற்கொள்கின்றனர். மஞ்சள் நீராட்டு விழா அன்று அம்பலக்காரர் சமூகத்தைச் சார்ந்த மக்கள் வாகனம் தூக்கும் பணிகளைச் செய்கின்றனர். விழாவிற்கான பணிப் பகிர்வுகளில் அடித்தள மக்களுக்குப் பொறுப்புகள் ஒதுக்கப் பெறவில்லை. சமஸ்கிருத நெறிப்படுகையில் செல்லும் இக்கோயிலில் தற்போது வேதியர் பூசகராகவுள்ளார். அர்ச்சனையும் வடமொழியில் நிகழ்கிறது. நாட்டுப்புறத் தெய்வக் கோயில்கள் புகழ்பெற்று வருமான வளர்ச்சியடையும்போது பெருந்தெய்வ வழிபாட்டு நெறியால் உள்வாங்கப்பெற்று அவற்றின் சொந்த அடையாளங்கள் சிதைக்கப்படுவதுடன் இழப்புக்குள்ளாவதையும் காணமுடிகிறது.

தஞ்சாவூர், விளார் சாலை, அண்ணா நகர் அங்காள ஈஸ்வரியம்மன் பங்குனி உத்திரத் தீமிதி விழாவிலும், மேலவஸ்தாச்சாவடி அண்ணாநகர்–எம்.ஜி.ஆர். நகர் அங்காள ஈஸ்வரியம்மன் சித்திரை பௌர்ணமி தீமிதி விழாவிலும் வேண்டுதலுக்கான நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் மக்கள் தீமிதி வழிபாடு மேற்கொள்கின்றனர்.

ஏகௌரியம்மன், துரோபதையம்மன், அங்காள ஈஸ்வரியம்மன் கோயில்களில் நடைபெறும் விழாக்களில் வேண்டுதலை நிறைவேற்ற, மக்கள் தங்களை வருத்தித் தெய்வத்தை வழிபடுகின்ற வழிபாட்டு மரபாகத் திமிதி வழிபாட்டை நிகழ்த்துகின்றனர். இவ்வழிபாட்டில் பிராமணர்கள் பங்கேற்பதில்லை. தமிழர்களின் வழிபாட்டு மரபாகத் திகழ்கின்ற இத்தீமிதி வழிபாட்டைத் தமிழினத்தின் பண்பாட்டு அடையாளமாகக் கருதலாம்.

# துணைநூற்பட்டியல்


அடைக்கலசாமி,எம்.ஆர். 1977, தமிழ் இலக்கிய வரலாறு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1/140 பிரகாசம் சாலை, சென்னை–1

இரவிச்சந்திரன், சி.மா., 2004, தமிழரின் பெருமரபும் சிறுமரபும், வசந்தா பதிப்பகம், மனை எண் 9, கதவு எண் 26, சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம், சென்னை.–600 088.

இராமசாமி, துளசி., 1985, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை–600 113.

இராமநாதன், ஆறு.(பதி.), 1991, நாட்டுப்புறவியல்ஆய்வு முறைகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613 010.

இராமநாதன், ஆறு., 2007, தமிழர் கலை இலக்கிய மரபுகள், மெய்யப்பன் பதிப்பகம், 53 புதுத்தெரு, சிதம்பரம்–608 001.

இராமநாதன், ஆறு., 2006, தமிழர் வழிபாட்டு மரபுகள், மெய்யப்பன் பதிப்பகம், 53 புதுத்தெரு, சிதம்பரம்.

இராமநாதன், ஆறு., சண்முகம், ஆ. (பதி.) 2003 தஞ்சை நாட்டுப் புறவியல், தன்னனானே பதிப்பகம், 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை–600 024

எவலின் மாசிலாமணி, மேயர், 1991, ‘நாட்டுப்புறச் சமய ஆய்வு நெறிமுறைகள்’ நாட்டுப்புறவியல் ஆய்வுமுறைகள், பக். 229–246, இராமநாதன், ஆறு. (பதி.) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613010.

காந்தி, க., 1980, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை–600 113.

குடவாயில் பாலசுப்பிரமணியன், 2004, ‘வரலாற்றில் வல்லம் ஏகௌரி அம்மன் ஆலயம்’ ஸ்ரீஏகௌரி அம்மன் திருக்கோயில், பக். 16–24, கோவிந்தராஜீ (தொ.ஆ.) திருக்கோயில் நிர்வாகம், வல்லம்–613 403.

கோவிந்தராஜீ, டி. (தொ.ஆ.), 2004 ஸ்ரீ ஏகௌரி அம்மன் திருக்கோயில் திருக்கோயில் நிர்வாகம், வல்லம், தஞ்சாவூர்–613 403

சக்திவேல், சு., 1995, நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை–600 108.

சண்முகம், ஆ., 1999, தமிழர் மரபுகள், அனன்யா பதிப்பகம், எண் 1 பி.ஏ.ஒய். நகர், தஞ்சாவூர்–5.

சந்திரசேகரன், மெய்., 1983, தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை–600 113.

சிவசுப்பிரமணியன், ஆ., 1988, மந்திரம் சடங்குகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்., சென்னை–600 098.

சிவசுப்பிரமணியன், ஆ., 2007, தோணி, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை–627 002.

சுந்தரபாண்டியன், மா., 2006, பண்பாட்டுப் பொருண்மைகள், அகரம் பதிப்பகம், மனை எண் 1 நிர்மலா நகர், தஞ்சாவூர்–613 007.

சுந்தரேசன், சி. (பதி.), 1999, களம் (நாட்டுப்புறவியல் ஆய்வுகள்), நாட்டுப்புறவியல் ஆய்வாளர் மன்றம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

செல்லம், வி.தி., 1978, தமிழகம் வரலாறும் பண்பாடும், மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை–625 001.

தமிழ்நாடன், 1993, மநுதர்மம், குயில் பண்ணை, சேலம்.

ப்ரியா கல்யாணராமன், 2004, 'ஏகௌரி', ஸ்ரீ ஏகௌரியம்மன் திருக்கோயில், பக். 50–56, கோவிந்தராஜீ, டி., (தொ.ஆ.) செயல் அலுவலர், ஸ்ரீஏகௌரியம்மன் திருக்கோயில், வல்லம், தஞ்சாவூர் மாவட்டம்–613 403.

பக்தவத்சலபாரதி, 2005, மானிடவியல் கோட்பாடுகள், வல்லினம், இலாசுப்பேட்டை, புதுச்சேரி–605 008.

பக்தவத்சலபாரதி, 1990, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், 55, லிங்கி தெரு, சென்னை–600 001.

பரமசிவன், தொ., 1995, தெய்வங்களும் சமூக மரபுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.,சென்னை–600 098.

பரமசிவன், தொ.,2004, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி. சாலை, நாகர்கோவில்–629 001.

பரிமணம், அ.மா., பாலசுப்பிரமணியன், கு.வெ. (பதி.) 2007 புறநானூறு (மூலமும் உரையும்) புத்தகம்–2, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்., அம்பத்தூர், சென்னை–600 098.

பரிமணம், அ.மா., பாலசுப்பிரமணியன், கு.வெ. (பதி.), 2004, அகநானூறு (மூலமும் உரையும்), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்., அம்பத்தூர், சென்னை–600 098.

பிள்ளை, கே.கே., 2004, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை–600 113

பேராசிரியர் குழு,1990, காவிரி தமிழகத்தின் உயிரோட்டம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613 010.

மாணிக்கவாசகன், ஞா., 2002, சிலப்பதிகாரம்–தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை–600 001.

லூர்து, தே., 1997, நாட்டார் வழக்காற்றியல்:சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை–627 002.

வசந்தா, அ., 2003, ‘பஞ்சா வழிபாட்டில் தீமிதி’ தஞ்சை நாட்டுப்புறவியல், பக். 180–189, இராமநாதன், ஆறு., சண்முகம், ஆ., (பதி.), தன்னனானே பதிப்பகம், சென்னை–600 024.

விஜயலெட்சுமி, கு. 2006, தமிழர் பண்பாட்டில் அளவைகள், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்–613 007

வேலுசாமி, ம., 1991, ‘சிறுதெய்வ ஆய்வில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முறையியல்’, நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், பக். 247–272, இராமநாதன், ஆறு., (பதி.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613010.

ஸ்ரீசந்திரன், ஜெ.,மணிமேகலை (மூலமும் தெளிவுரையும்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை–600 017.

## இதழ்

சண்முகசுந்தரம், சு. 1997, 'நாட்டுப்புறத் தெய்வங்கள்' தன்னனானே, பக். 1–6, ஆசிரியர் சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியலுக்கான காலாண்டிதழ், சனவரி–மே, இதழ் 12–13, நாட்டுப்புறத் தெய்வங்கள் சிறப்பிதழ், பெங்களூர்–560 038

## ஆய்வேடு

மீனாட்சிசுந்தரம், சு., 2006, நன்செய் இடையார் மாரியம்மன் கோயில் வரலாறும் வழிபாடுகளும், ஆய்வியல்நிறைஞர் பட்ட ஆய்வேடு, நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613010

## அ. ஏகௌரியம்மன் வழிபாட்டுப் பாடல்கள்

வல்லத்து ஊரினிலே
வாழ்வளிக்கும் தாயவளே
வந்தவரை வாழவைக்கும்
ஏகௌரி தாயாரே
வல்லத்துக்காளியும் நீ
வரம் கொடுக்கும் நீலியும் நீ

பம்பை உடுக்கை சத்தம்
பார்புகழ வேட்டு சத்தம்
பார்க்கவரும் பக்தருக் கெல்லாம்
பல குறைகளை நீ தீர்த்து வைப்பாய்
வல்லத்துக்காளி நீ
வரம்தரும் நீலி!

அசுரனை வதைத்து நின்ற
ஆங்காரி ஏகௌரி
குங்குமக் காளியும் நீ
எங்கள் குல தேவியும் நீ
வல்லத்துக் காளி நீ
வரம் தரும் நீலி!

குங்குமம் நிலைக்க வேண்டி
கும்பிட்டு வருவோரின்
குறைகளைத் தீர்ப்பவளே
எங்கள் குல தேவியே

வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

கண்களை உருட்டி நின்று
கம்பீரமாய் நிற்பவளே
கனத்த மனம் கொண்டு உன்
காலடிக்கு வருவோரின்
கவலை எல்லாம் தீர்ப்பவளே
ஏகௌரி தாயாரே
சிவப்பு உடையணிந்து
சிங்கார நடை நடந்து
சிங்கத்தின் மீதேறி
சிங்காரமாய் நிற்பவளே
வல்லத்துக்காளி நீ
வரம்தரும் நீலி!

பாம்பின் பக்கத்திலே
பாங்குடனே உட்கார்ந்து
உன்னைப் பார்க்க வரும் பக்தருக்கு
பக்கத்துணை நீ இருப்பாய்
குத்து விளக்கேற்றி உன்னைக்
கும்பிட்டு வருவோரின்
குறைகளெல்லாம் தீர்ப்பவளே
எங்கள் குலதெய்வம் ஏ கௌரி
வல்லத்துக்காளி நீ
வரம்தரும் நீலி!

மஞ்சள் நிலைக்க வேண்டி உன்னிடத்தில்
மனம் உருகி வருவோர்க்கு
உன் மலர்ந்த முகத்துடனே
மகிழ்ச்சியை நீ தருபவளே
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

எட்டுக் கையுடனே நீ
எழுந்தருளி நிற்பவளே
எருமைக் கடா காவுனக்கு
எல்லைகளைக் காப்பவளே
ஏகௌரி தாயாரே
வல்லத்துக் காளி நீ
வரம் தரும் நீலி!

மங்கையரின் உள்ளிருக்கும்
மனக்கவலை தீர்ப்பவளே
மங்கலமாய் வாழ்வளித்து
மகிழ்ச்சியெல்லாம் தருபவளே
கையில் சிலம்பு சத்தம்
உன் கால் இரண்டில் தண்டை சத்தம்
உன் கண்களைப் பார்த்தாலே
மனக் கலக்கமெல்லாம் தீருதம்மா
வல்லத்துக் காளி நீ
வரம் தரும் நீலி!

அசுரர்களை அழிக்க வந்த
ஆங்காரம் கொண்டவளே
அகிலமெல்லாம் காத்து நிற்கும்
பல அற்புதங்கள் கொண்டவளே
வல்லத்துக் காளி நீ
வரம் தரும் நீலி!

பௌர்ணமி தினத்தினிலே
உன்னைப் பார்க்க வரும் பக்தருக்கு
உன்பரவச முகத்துடனே நீ
பார்த்தாலே போதுமம்மா
மனக்கவலை தீருதம்மா
வல்லத்துக் காளி நீ
வரம் தரும் நீலி!

அன்ன நடை நடந்து
அண்டமெல்லாம் காப்பவளே
அன்னை மனம் கொண்டவளே
அனைவரையும் காப்பவளே
வல்லத்துக்காளி நீ
வரம்தரும் நீலி!

எங்கள் குலம் தழைக்க
எழுந்தருளிய ஏகௌரி
எங்களையும் காத்து நின்று
எங்கள் எண்ணமெல்லாம் நிறைந்தவளே
ஏகௌரி தாயாரே
வையகத்தை ஆளுகின்ற
வல்லத்துக் காளியே
வணங்கி வருவோருக்கு நீ
வாழ்வளிப்பாய் தேவியே
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

சூலத்தை உன்கையில்கொண்டு
சூரனை வதைத்தவளே
சூரசம்ஹாரம் கொண்டு
சுற்றி உலகை ஆள்பவளே
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

பாம்பே உனக்குத் தலையணையாம்
பம்பை உடுக்கை உன் கையிலேயாம்
பார்க்க வரும் பக்தர்க்கெல்லாம்
பக்கத் துணை நீ இருப்பாய்
வல்லத்துக் காளி நீ
வரம் தரும் நீலி!

திருமணம் நடக்க வேண்டி உன்
திசை நோக்கி வருபவர்க்கு
தெம்பாய் நீ வரமளித்து
திருமணத்தை முடித்திடுவாய்
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

குழந்தை வரம் வேண்டி உன்னை
கும்பிட்டு வருவோர்க்கு
குழந்தை வரம் கொடுத்து
குலத்தையே நீ காத்திடுவாய்
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

கணவர் உயிர் காக்க வேண்டி உன்
காலடியில் வருவோர்க்கு அவர்கள்
கலக்கத்தை நீ போக்கி
கணவர் உயிர் காத்திடுவாய்
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

ஆடி மாதத்திலே உனக்கு
அலங்கார தோரணங்கள்
ஆதியுமாய் அந்தமுமாய்
ஆள்பவளே ஏகௌரி
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

கை கால் ஊனத்தோடு
உன் காலடிக்கு வருவோரின்
கலக்கமெல்லாம் தீர்த்து வைத்து
காப்பவளே ஏகௌரி
தள்ளாத வயதினிலே

தஞ்சமென வந்தோர்க்கு
தைரியத்தை நீ கொடுத்து
தக்க துணை இருப்பாய்
தாலிவரம் கேட்டு
தாயாரை நாடி வந்தால்
தாலி நிலைக்கச் செய்து
தருபவளே ஏகௌரி
கண்களை இழந்து நின்று
உன் காலடிக்கு வருவோரின்
கண்களிலே உயிர் கொடுத்து
காப்பவளே ஏகௌரி
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

எலுமிச்சை மாலைகளாம் உனக்கு
எருமைக் கடா காவுகளாம்
எல்லைகளைக் காப்பவளே
ஏகௌரி தாயாரே
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

மனதில் ஊனமென்று உன்னிடம்
மனம் உருகி வருவோர்க்கு
மனக்குறையைத் தீர்த்து வைத்து
மகிழ்ச்சியை நீ தருபவளே
வல்லத்துக்காளி நீ
வரம் தரும் நீலி!

(எழுத்து மற்றும் தொகுப்பு : ஜே.லெட்சுமி காந்தம்)

## ஆ. வினாநிரல்

**I. தகவலாளர்**

1. தகவலாளர் பெயர் :
2. முகவரி :
3. வயது :
4. கல்வி :
5. தொழில் :
6. சாதி :
7. சந்தித்த நாள் :

**II. ஊரமைப்பு**

8. இந்த ஊரின் பெயர் என்ன ?
9. ஊர்ப்பெயருக்கு ஏதேனும் காரணம் உண்டா ?
10. எந்த மாவட்டம்–வட்டத்தைச் சார்ந்தது ?
11. எந்த ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சியைச் சார்ந்தது ?
12. அருகமைந்த நகர்ப்பகுதி எது ?
13. இந்த ஊரின் மக்கள்தொகை எவ்வளவு ?
14. என்னென்ன சமுதாயத்து மக்கள் வாழ்ந்து வருகின்றனர் ?
15. ஒரு சாதியினருக்கும் பிற சாதியினருக்குமான உறவுநிலைகள் எவ்வாறு உள்ளது ?
16. ஒரு சாதியினர் மங்கல/அமங்கல நிகழ்வுகளில் பிற சாதியினரின் பங்களிப்பு/ பங்கேற்பு எவ்வாறுள்ளது ?
17. ஊரின் நான்கெல்லைகள் எவை ?
18. சாலை–குடிநீர்–விளக்கு–பேருந்து வசதிகள் உள்ளனவா ?
19. ஊரில் எத்தனைத் தெருக்கள் உள்ளன ?
20. ஒவ்வொரு சாதியினருக்கும் தனித் தெருக்கள் உள்ளனவா ?

21. தெருக்களில் பல சாதியினரும் கலந்து வாழ்கின்றார்களா?
22. மக்களின் முக்கிய தொழில் என்ன?
23. மரபுவழி தொழில்கள் வழக்கில் உள்ளனவா?
24. என்னென்ன தொழில்கள் வழக்கில் உள்ளன?
25. அரசுப்பணியில் இருப்பவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?
26. பெண்கள் பணிக்குச் செல்கிறார்களா?
27. குழந்தைத் தொழிலாளர் முறை உள்ளதா?
28. அரசு அலுவலகங்கள் என்னென்ன உள்ளன?
29. பள்ளிகள்–கல்லூரிகள் உள்ளனவா?
30. தொழிற்சாலைகள் இருக்கின்றனவா?
31. பெருந்தெய்வக் கோயில்கள் எத்தனை உள்ளன? விளக்கம் தருக.
32. நாட்டுப்புறத் தெய்வக் கோயில்கள் உள்ளனவா?
33. கோயில் வழிபாடுகளில் அடித்தள மக்களுக்கு அனுமதி உண்டா?
34. ஊரில் ஆதிக்க சமூகம் எது? ஒடுக்கப்பட்ட சமூகம் எது?
35. இலக்கியப் படைப்பாளிகள்–எழுத்தாளர்கள்–அறிஞர்கள் யாரேனும் இவ்வூரில் வாழ்ந்தார்களா/வாழ்கிறார்களா? அவர்கள் பெயர் என்ன? அவர்கள் படைப்புகளைப் பற்றி ஏதேனும் செய்திகள் கூறமுடியுமா?

**III. கோயிலமைப்பு**

36. இக்கோயிலின் தொன்மை வடிவம் எவ்வாறு இருந்தது?
37. இப்போதைய வடிவம் எந்த ஆண்டில் கட்டப்பெற்றது?
38. திருச்சுற்றுகள் உள்ளனவா? எத்தனை உள்ளன?
39. துணைத் தெய்வங்களுக்குத் தனிச் சந்நிதிகள் இருக்கின்றனவா?
40. வாயில் கோபுரம்–கருவறை விமானம் உள்ளனவா?
41. கோயிலில் சிற்பங்கள்–ஓவியங்கள் எழிலூட்டுகின்றனவா?
42. முகப்பு மண்டபங்கள்–வழிபாட்டு மண்டபங்கள் அமைக்கப் பட்டுள்ளனவா?
43. கொடிமரம்–தெப்பக்குளம் உள்ளனவா?
44. கோயில் எத்திசை நோக்கி அமைந்துள்ளது?
45. இவ்வூரில் இத்தெய்வத்திற்குக் கோயிலமையக் காரணம் என்ன?

**IV. வழிபாடுகள்**

46. தெய்வத்தின் பெயர் என்ன ?
47. தெய்வத்திற்கான தோற்றக் கதைகள் உண்டா ?
48. இறைவடிவ சிற்ப அமைதி எவ்வாறுள்ளது ?
49. கல் அல்லது உலோகத்தால் வடிவமைக்கப் பெற்றுள்ளதா ?
50. உற்சவர் வடிவ அமைதி உண்டா ?
51. துணைத் தெய்வங்களின் சிற்ப அமைதி எவ்வாறுள்ளன ?
52. மூலவர் நடுகல்–சமாதி–புற்றுமண் வடிவமா ?
53. நாள் வழிபாடுகள் நடக்கின்றனவா ?
54. காலை–மாலை–இரவு பூசைகள் எவ்வாறு நடக்கின்றன ?
55. அலங்காரம் எவ்வாறு நடக்கும் ?
56. படையல் பொருட்கள்–ஆராதனை எப்படி நடக்கின்றன ?
57. உற்சவருக்கு நாள் வழிபாடுகள் ஏதேனும் உண்டா ?
58. வார வழிபாடுகள் எந்தெந்த நாட்களில் எவ்வாறு நடைபெறுகின்றன ?
59. மாத வழிபாடுகள் நடைபெறுகின்றனவா ?
60. ஆண்டு விழாக்கள் ஏதேனும் உண்டா ? எவ்வாறு நடைபெறுகின்றன ?
61. திருவிழாக்கள் எத்தனை நாட்கள் நடைபெறும் ?
62. காப்பு கட்டும் நிகழ்வு உண்டா ? யார்காப்பு கட்டுவார் ?
63. திருவிழா என்று தொடங்கி என்றைக்கு முடிவுறும் ?
64. விழாக் காலங்களில் உற்சவர் வீதியுலா உண்டா ?
65. வாகனங்கள்–பல்லக்குப் பவனிகள் நடைபெறுவதுண்டா ?
66. அடித்தள மக்கள் வாழும் பகுதிக்கு வாகனங்கள் செல்வதுண்டா ?
67. விழாக் காலங்களில் ஊர்மக்களுக்குப் பணிகள் பகிர்ந்தளிப்பதுண்டா ?
68. ஒவ்வொரு சாதியினருக்கும் பகிர்ந்தளிக்கும் பணிகள் என்னென்ன ?
69. விழாச் செலவுகளுக்கான பணம் எவ்வாறு பெறப்படுகிறது ?
70. செடில் சுற்றும் நிகழ்வு உண்டா ?
71. திருவிழாக் கடைகளின் சிறப்பம்சங்கள் என்ன ?
72. விழாக் காலங்களில் வாணவேடிக்கைகள் நடைபெறுமா ?

## V. தீமிதி வழிபாடு

73. தீமிதி வழிபாடு எந்த மாதம்–நாள்–நேரம் நடைபெறும் ?
74. தீக்குழி எப்பகுதியில் அமைக்கப்படும் ?
75. குழியின் நீளம் மற்றும்அகலம், ஆழத்தின் அளவுகள் என்ன ?
76. பால்குழி அமைக்கும் வழக்கம் உண்டா ?
77. பாரதம் படிக்கும் வழக்கம் உண்டா ?
78. தீமிதிப்பதற்கான விறகுகள் எவ்வாறு பெறப்படுகின்றன ?
79. மரங்களைக் குழியிலிட்டு நெருப்பேற்றும் முறை–சமப்படுத்தும் முறைகள் எவ்வாறு நடக்கும் ?
80. ஏதேனும் கருவிகளைப் பயன்படுத்துவார்களா ?
81. தீமிதி வழிபாட்டின்போது தெய்வத்திற்குச் சிறப்புப் பூசைகள் நடைபெறுமா ?
82. எந்த ஆண்டிலிருந்து தீமிதி நடைபெறுகிறது ?
83. பக்தர்களின் ஊர்வலம் நடைபெறுமா ?
84. சக்திக் கரகம் எடுக்கும் வழக்கம் தீமிதியின்போதுநடைபெறுமா ?
85. முதலில் தீமிதிப்பவர் யார் ?
86. பூசகர்–பாரதம் படிப்பவர்கள் தீமிதிப்பார்களா ?
87. தீமிதியில் பரம்பரை உரிமைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா ?
88. எந்தெந்த ஊரைச் சார்ந்தவர்கள் தீமிதிக்கின்றார்கள் ?
89. எந்தெந்தச் சாதியைச் சார்ந்தவர்கள் தீமிதிக்கின்றார்கள் ?
90. ஆண்–பெண்–குழந்தைகள் தீமிதிக்கும் வழக்கம் உண்டா ?
91. ஆதிதிராவிடர்கள் தீமிதிக்க அனுமதிக்கப்படுகின்றார்களா ?
92. தீமிதிப்பவர்கள் மேற்கொள்ளும் நோன்பு முறைகள் என்ன ?
93. தீமிதிக்கும்போது மஞ்சள் ஆடை அணியும் வழக்கம் உண்டா ?
94. பால்குடம்–அலகுகுத்தி வருவதுண்டா ?
95. தீக்குழியில் மிதித்தோடும்போது தவறி விழுந்தால் மருத்துவம் செய்வது எப்படி ?
96. தோராயமாக எவ்வளவு பேர் தீமிதிப்பார்கள் ?
97. என்ன காரணத்திற்காக தீமிதிக்கிறார்கள் ?
98. விழாவின் உச்சகட்ட நிகழ்வாகத் தீமிதி நடைபெறுகிறதா ?
99. அரவான்களப்பலி உண்டா ?

100. உயிர்ப்பலிகள் உண்டா ?

101. தீமிதி முடிந்ததும் தெய்வத்திற்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுமா ?

102. பூசகர் எந்த இனத்தைச் சார்ந்தவர் ? அர்ச்சனை எம்மொழியில் நடைபெறுகிறது ?

## VI. நம்பிக்கைகள்–வேண்டுதல்கள்

103. தெய்வம் குறித்த மக்களின் நம்பிக்கைகள் என்ன ?

104. இத்தெய்வத்திடம் மக்களின் வேண்டுதல்கள் என்னென்ன ?

105. வேண்டுதல்களை எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள் ?

106. மாவிளக்குப்போடும் வழக்கம் உண்டா ?

107. மண்–வெள்ளியில் உடல் உறுப்புக்கள் அளிக்கும் முறை உண்டா ?

108. மொட்டையடிக்கும் வழக்கம் உண்டா ?

109. கோழி–ஆடு–மாடு அளிக்கும் வழக்கம் உண்டா ?

110. தானியங்கள்–காய்கள்–கனிகள்–மலர்கள் அளிக்கும் முறை உண்டா ?

111. மரங்களில் மஞ்சள் கயிறு, தொட்டில் கட்டும் வழக்கம் உண்டா ?

112. உப்புக் காணிக்கை அளிக்கும் வழக்கம் உண்டா ?

113. அங்கப்பிரதட்சிணம் உண்டா ?

114. அம்மை நோய் கண்டவர்கள் கோயிலில் தங்குவதுண்டா ?

## VII. கோயில் நிர்வாகம்

115. இக்கோயில் குறிப்பிட்ட குலத்தினருக்கு அல்லது இனத்திற்குரியதா ?

116. ஊர்ப் பொதுத் தெய்வமாகக் கருதிகோயில் அமைக்கப்பட்டுள்ளதா ?

117. கோயிலை நிர்வகிப்பவர் யார் ?

118. தனிப்பட்டவரா அல்லது அரசு அலுவலர்களா ?

119. அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் உள்ளதா ?

120. பணியாளர்கள் எத்தனை பேர் உள்ளனர் ?

121. கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் – தோப்புகள் – கட்டடங்கள் உள்ளனவா ?

122. தெய்வத்திற்கு விலை உயர்ந்த நகைகள் உள்ளனவா ?

123. கோயிலின் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

124. பணியாளர்களின் பணிநேரம் எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது ?
125. ஒவ்வொருவரின் ஊதிய நிர்ணயம் எவ்வளவு ?
126. காணிக்கைப் பொருள்களை ஏலமிடும் வழக்கம் உண்டா ?
127. இறைவழிபாட்டிற்கு–அர்ச்சனை கட்டணங்கள் உண்டா ?
128. மண்டகப்படி உபயதாரர்கள் இருக்கிறார்களா ?
129. அறங்காவலர்கள் குழு உள்ளதா ?

## VIII. மேல்நிலையாக்கம்

130. கோயில் கருவறை விமானம்–கட்டடக்கலை சாஸ்திரிய முறையில் அமைந்துள்ளதா ?
131. அந்தணர் பூசகராக உள்ளாரா ?
132. அர்ச்சனை வடமொழியில் நடைபெறுகிறதா ?
133. தெப்போத்சவம் நிகழுவதுண்டா ?
134. உயிர்ப்பலிகள் தடை செய்யப்பட்டுள்ளதா ?
135. நாள்–நட்சத்திரம்–நேரங்கள் பார்த்து வழிபாடுகள் மற்றும் விழாக்கள் நடைபெறுகின்றனவா ?
136. பிரம்மோத்சவம், மகோத்சவங்கள் நடைபெறுகின்றனவா ?

## இ.தகவலாளர் பட்டியல்

| வ.எண் பெயர், முகவரி | வயது | கல்வி | தொழில் | சாதி | சந்தித்த நாள் |
|---|---|---|---|---|---|
| 1. பொ.கேசவன்<br>50 வளையல்காரத் தெரு<br>வல்லம், தஞ்சாவூர் | 53 | 11ஆம் வகுப்பு | பூசகர் | யாதவர் | 01.08.08 |
| 2. ஆ.சுரேஷ்குமார்<br>99 நடுத்தெரு<br>வல்லம், தஞ்சாவூர். | 27 | முதுநிலை<br>வணிகவியல் | லாரி<br>ஓட்டுநர் | அகமுடையார் | 15.08.08 |
| 3. ச.பாலசுப்பிரமணியம்<br>ரெட்டிப்பாளையம்,<br>வல்லம், தஞ்சாவூர். | 45 | 10ஆம் வகுப்பு | விவசாயம் | படையாச்சி | 15.08.08 |
| 4. ச.குணசேகரன்<br>ராம் நகர், மூன்றாம் தெரு<br>மருத்துவக் கல்லூரி சாலை,<br>தஞ்சாவூர்–7. | 62 | 10ஆம் வகுப்பு | கோயில்<br>காவலர் | கள்ளர் | 15.09.08 |
| 5. ரெ.காமராஜ்<br>சென்னம்பட்டி, வல்லம்,<br>தஞ்சாவூர். | 36 | 10ஆம் வகுப்பு | ஓட்டுநர் | உடையார் | 01.09.08 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. ஆர்.மகேசுவரி<br>வாலப்பா நந்தவனம்,<br>பொன்னிநகர்,<br>கீழவாசல், தஞ்சாவூர். | 36 | இல்லை | இல்லை | செட்டியார் | 01.09.08 |
| 7. ச.குணசேகரன்<br>மேட்டுத்தெரு<br>சென்னம்பட்டி<br>வல்லம், தஞ்சாவூர். | 40 | 6ஆம் வகுப்பு | விவசாயம் | கள்ளர் | 01.09.08 |
| 8. ஜே.கௌரி<br>எம்.ஜி.ஆர். நகர்<br>பள்ளியக்ரகாரம்,<br>தஞ்சாவூர். | 44 | 8ஆம் வகுப்பு | இல்லத்தரசி | பண்டாரம் | 02.05.09 |
| 9. எம்.ரெங்கநாயகி<br>யாகப்பா நகர்<br>தஞ்சாவூர். | 57 | 6ஆம் வகுப்பு | இல்லத்தரசி | கள்ளர் | 02.05.09 |
| 10. எம்.கணேசன்<br>17ஏ மேட்டுத்தெரு<br>ரெட்டிப்பாளையம்,<br>வல்லம், தஞ்சாவூர். | 57 | 8ஆம் வகுப்பு | விவசாயம் | படையாச்சி | 09.12.08 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. பொ.கலியபெருமாள்<br>12/24 பசனைமடத் தெரு<br>ரெட்டிப்பாளையம்,<br>வல்லம், தஞ்சாவூர். | 75 | 8ஆம் வகுப்பு | விவசாயம் | படையாச்சி | 09.12.08 |
| 12. ரெ.மனோகர்<br>பசனைமடத் தெரு<br>ரெட்டிப்பாளையம்,<br>வல்லம், தஞ்சாவூர். | 40 | இளங்கலை | நூலகர் | நாயுடு | 09.12.08 |
| 13. மா.மாணிக்கம்<br>1/11 சவேரியார் கோயில் தெரு<br>வல்லம், தஞ்சாவூர். | 65 | 5ஆம் வகுப்பு | வெட்டியான் | பறையர் | 9.12.08 |
| 14. சு.இராமலிங்கம்<br>வெள்ளாளர் தெரு<br>வல்லம், தஞ்சாவூர். | 60 | 10ஆம் வகுப்பு | தங்கநகை | ஆசாரி | 9.12.08 |
| 15. கோ.வெங்கடாசலம்<br>10 மோதிலால் நேரு தெரு<br>நீடாமங்கலம்,<br>திருவாரூர். | 55 | 8ஆம் வகுப்பு | பூசகர் | வேளார் | 02.05.09. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15. வெ.வைத்தியகுமார் 10 மோதிலால் தெரு நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம் | 22 | இளங்கலை இளம் ஆய்வியல் | பூசகர் | வேளார் | 02.05.09 |
| 16. ஞா.பூங்குழலி 122 மேலராஜவீதி நீடாமங்கலம் திருவாரூர் மாவட்டம் | 35 | இளநிலை அறிவியல் | இல்லத்தரசி | அகமுடையார் | 22.05.09 |
| 17. டி.சிவசுப்பிரமணியன் 5 பாம்பலையம்மன் கோயில் தெரு, நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம் | 81 | இன்டர்மீடியட் | தொடர்வண்டி நிலைய அதிகாரி (ஓய்வு) | அகமுடையார் | 22.05.09 |
| 18. டி.சாமிநாதன் 25 மோதிலால் நேரு தெரு, நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம். | 61 | 10ம் வகுப்பு | உரம் வணிகம் | அகமுடையார் | 22.05.09 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19. எஸ்.என்.ஞான சேகரன் 122 மேலராஜ வீதி நீடாமங்கலம் திருவாரூர் மாவட்டம் | 62 | இயந்திரப் பொறியியல் பட்டம் | நிர்வாக அதிகாரி (ஓய்வு) நெய்வேலி நிலக்கரிக் கழகம் | அகமுடையார் | 22.5.09 |
| 20. கே.காளிமுத்து எம்.ஜி.ஆர்.நகர் மேலவஸ்தாசாவடி தஞ்சாவூர்–5. | 65 | 9ஆம் வகுப்பு | வணிகம் | தேவர் | 23.05.09. |
| 21. சித்ரா சுரேஷ் 4/1090 எம்.ஜி.ஆர் நகர், மேலவஸ்தாசாவடி, தஞ்சாவூர்–5 | 31 | 12ம் வகுப்பு | இல்லத்தரசி | நாயுடு | 23.05.09 |
| 22. சி.இராமலிங்கம் அண்ணாநகர் மேலவஸ்தாசாவடி தஞ்சாவூர்–5 | 69 | இல்லை | பூசகர் | சேர்வை | 23.05.09 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23. ஆர்.வீரப்பன்<br>30 பதினாறாவது தெரு<br>அண்ணா நகர்,<br>விளார் சாலை,<br>தஞ்சாவூர்–6. | 82 | 8ஆம் வகுப்பு | வணிகம் | வெள்ளாளர் | 24.05.09 |
| 24. ச.ராஜலிங்கம்<br>தெற்குத்தெரு<br>வேலூர், பரமத்தி<br>வேலூர் வட்டம்<br>நாமக்கல் மாவட்டம் | 42 | 6ஆம் வகுப்பு | பூசகர் | உப்பிலிய<br>நாயக்கர் | 23.05.09 |
| 25. ர.பன்னீர்செல்வன்<br>10பி தெற்குத் தெரு<br>தஞ்சை இடையார்,<br>பரமத்தி வேலூர் வட்டம்<br>நாமக்கல் வட்டம். | 28 | ஆய்வியல்<br>நிறைஞர் | தேங்காய்<br>வணிகம் | முத்துராஜா | 23.05.09 |




ஏகௌரியம்மன் கோயில் கருவறை விமானம்



தீ மிதிப்பதற்கான விறகுகளை எரித்தல்



விறகுகள் நன்கு எரிவதற்காகக் கம்பால் புரட்டுதல்



தீக்கனலைப் பரப்புவதற்கான கருவி



கருவியால் தீக்கனலைப் பரப்புதல்



தீக்கனல் பரப்பப்பெற்ற பூக்குழி



இறையன்பர் பால்குடத்துடன் தீ மிதித்தல்



ஆண், பெண் பால்குடத்துடன் தீமிதித்தல்



மலர் அலங்காரப் பால்குடத்துடன் தீமித்தல்



அலங்கரிக்கப்பெற்ற பால்குடத்துடன் தீமித்தல்

